விலை : 20.00 Website : www.valampurii.lk Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 03 செவ்வாய்க்கிழமை (19.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 274

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

## நீதிமன்ற வியாக்கியானம் இன்று அறிவிப்பு

# 20 மீதான விவாதத்தை ஒத்திவைக்க முடிவு!

(கொழும்பு)

அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள 20ஆவது திருத்த சட்ட வரைபு மீது நாளை நடத்தப்படவிருந்த விவாதம் காலவரையின்றி பின்போடப்பட்டுள்ளதாகவும் இது 20ஆவது திருத்தத்தை கைவிடும் நிலைக்கு அரசு வந்து விட்டதையே சுட்டிக்காட்டுகிறது என மூத்த அமைச்சர்களை மேற்கோள்காட்டி கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (23-ம் பக்கம் பார்க்க...)

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டம்

## பெயர் பலகைகளில் தமிழுக்கு முன்னுரிமை

(யாழ்ப்பாணம்)

தமிழ் பிரதேசங்களில் அமைக்கப்படும் பெயர்பலகைகளில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்கப்படுவது கட்டாயம் என யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்றைய தினம் யாழ். மாவட்ட செயல கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அப்போது

யாழ் மாவட்டத்தில் அமைக்கப்படும் பெயர் பலகைகளில் 23☛

## கடற்புலிகளை உள்வாங்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடல் மாலுமி சேவையில் முன்னாள் கடற்புலிகள் உள்வாங்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. அதில் இலங்கை சமுத்திர பல்கலைகழகத்தின் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்து 23☛

## மாவீரர் துயிலும் இல்லங்களை பிரதேசசபைகள் பராமரிக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் துயிலும் இல்லங்கள் அனைத்தும் அந்தந்த பிரதேச சபைகளினூடாக பராமரிப்பு செய்யப்பட வேண்டும் என யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை தாவரவியல் பூங்காவாக மாற்றும் செயற்திட்டத்தை அந்தந்த பிரதேச சபைகள் பொறுப்பேற்று செய்ய வேண்டும் என்ற கோரிக்கை நேற்றைய தினம் நடை 23☛

## நடக்கட்டும் வாக்கெடுப்பு; மலர்க தமிழீழம்!

### ஜெனிவாவில் வைகோ முழக்கம்



(ஜெனிவா)

ஜெனிவாவில் மனித உரிமைக் கவுன்சிலின் 36 ஆவது அமர்வில் நேற்று வைகோ உரையாற்றியுள்ளார்.

அதில் அவர் தெரிவித்ததாவது, வரலாற்றின் வைக 23☛

## புத்தூர் கலைமதி மயான சர்ச்சை

## மல்லாகம் நீதிமன்ற தீர்ப்புக்கு மேல் நீதிமன்று இடைக்காலத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புத்தூர் கலைமதி சமூகத்தினரால், குடியிருப்புக்களுக்கு நடுவில் இருக்கும் மயானங்களை அகற்றக்கோரி கடந்த இரண்டு மாத காலமாக சத்தியாகிரக போராட்டம் மேற்கொண்டுவரும் நிலையில், குறித்த மயானம் சார்பாக மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு இடைக்கால தடை பிறப்பித்து யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் ஒருவர் உயிர் வாழ்வதற்காக வீதியில் நின்று போராடும் சமூக அவலம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது அதனை 24☛

## யாழ். போதனாவில் புடையன் பாம்புக்கு சுகப்பிரசவமாம்!



23☛

## யுத்தக் குற்றம் தொடர்பில் சர்வதேச நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யலாம்

### மனித உரிமை சட்டத்தரணி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற யுத்தக் குற்றம், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக, சர்வதேச நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்ய முடியுமென ஜேர்மனியைச் சேர்ந்த அரசியலமைப்பு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான சட்டத்தரணி அன்ட்ரயா ஸ்ருடோ தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற செயற்பாடு 23☛

## இன்று ஜனாதிபதி ஐ.நாவில் உரை



ஐ.நாவின் 72-வது கூட்டத் தொடரில் கலந்து கொள்ள சென்றுள்ள ஜனாதிபதியை நியுயோர்க் விமான நிலையத்தில் வரவேற்பதை படத்தில் காணலாம்.

## கஸ்தூரியார் வீதியில் ஓட்டோ மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கஸ்தூரியார் வீதியில் நேற்றிரவு 7 மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் 23☛

## சுதந்திரமாக செயற்பட இலங்கைக்கு இடமளிக்க சுவாமி வேண்டுகோள்

(புதுடில்லி)

இலங்கையை சுதந்திரமாக செயற்பட இடமளிக்குமாறு சர்வதேச சக்திகளிடம் கோரிக்கை விடுப்பதாக பாரதிய ஜனதா கட்சி 02☛

## யாழ்.நகரின் தந்திரோபாய அ/திக்கான வாகன போக்குவரத்து கணக்கெடுப்பு

### பொதுமக்களை ஒத்துழைக்குமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் தந்திரோபாய அபிவிருத்திக்கான வாகன போக்குவரத்து கணக்கெடுப்பு நடைபெற்று வருவதாக தெரிவித்துள்ள யாழ். மாவட்ட செயலர் என்.வேதநாயகன், யாழ்.பல்கலைக்கழக மாணவர்களினால் முன்னெடுக்கப்படுகின்ற இந்த கணக்கெடுப்புக்கு வாகன சாரதிகள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்.நகருக்கான ஒருங்கிணைக்கப்பட்ட பல்லூடக போக்குவரத்து ஆய்வானது அதிகரித்து செல்லும் நகர போக்குவரத்து 23☛

## ஜெனிவாவில் மாபெரும் போராட்டம்

(ஜெனிவா)

ஈழத்தில் இடம்பெற்ற தமிழின அழிப்புக்கு நீதிகோரி மாபெரும் போராட்டம் ஒன்று ஜெனிவாவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நீதி கோரும் மாபெரும் போராட்டம் ஜெனிவா புகையிரத நிலையத்திற்கு அருகாமை 23☛

# பல்கலை மாணவர் கொலை வழக்கு நவம்பர் 27ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் குளப்பிட்டி சந்தியில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்தமை தொடர்பிலான வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. யாழ் நீதவான் எஸ்.சதீஸ்கரன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது வழக்கு விசாரணையை எதிர்வரும் நவம்பர் மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்திவைத்து நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். கடந்த வியாழக்கிழமை யாழ்.மேல் நீதிமன்றத்தால் கடும் பிணையில் விடுவிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்ட வழக்கின் சந்தேக நபர்களான 05 பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டிருந்தனர்.

யாழ்.கொக்குவில் குளப்பிட்டி சந்தியில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் மோட்டார் சைக்கிளில் சென்றபோது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருந்தனர். சம்பவத்தில் இரண்டு மாணவர்கள் உயிரிழந்தனர்.இவர்களது மரணம் விபத்தினால் சம்பவித்தது என ஆரம்பத்தில் பொலிஸார் கூறியிருந்தபோதிலும், பிரேத பரிசோதனையில் ஒரு மாணவரது உடலில் துப்பாக்கிச் சூட்டு காயங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இதனை அடுத்து சம்பவ தினத்தன்று கடமையிலிருந்த ஐந்து பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-4)


## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532


## ஏல விற்பனை

எமது பாடசாலையில் 03.10.2017 மு.ப 10.00 மணிக்கு தொலைக்காட்சிப் பெட்டி-01, வட்டச்சல்லாரி-01 ஆகிய பொருட்கள் ஏலத்தில் விடப்படவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

-அதிபர்

யா/செங்குந்த இந்துக் கல்லூரி

(607)


## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்

104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை


021 222 8117, 077 900 8776

வவனியாவில்: (024) 324 4444

(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

(சி-9675)


## துயர்பகிர்கின்றோம்



அமரர்

வீரகத்தி வேலாயுதம்

உதயம்:-1937-04-11

மறைவு:-2017-08-24

எமது பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி **ஸ்ரீதயாபரன் தேவமனோகரியின்** பாசமிகு தந்தையார் அமரர் **வீரகத்தி வேலாயுதம்** அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

அன்னாரின் துயரில் பங்குபெறும்

பிரதேச செயலரும்

அனைத்து உத்தியோகத்தர்களும்

ஊழியர் நலன்புரிச்சங்கம்

பிரதேச செயலகம், பருத்தித்துறை.

(சி-9677)

## ஈர விழிகளுடன் ஆறாம் ஆண்டு



அமரர் **சோமசுந்தரம் விக்னேஸ்வரன் (ராசா)**

(ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்)

*திதி:-சதுர்த்தசி*

தோற்றம்:-31.10.1955

மறைவு:-13.10.2012

வார்த்தைகள் இல்லாத வடிவமாய்
எம்முள் வாழ்பவரே! சந்தோசத்தைப்
பகிர்ந்திடவும் கவலையில் தோள்
சாய்த்திடவும் தவறாமல்
வருகை தருகிறது உங்கள்
நினைவுகள் உங்கள் அன்பை
தோற்கடிக்கும் மற்றொரு அன்பு
இப்பூவுலகில் இல்லை.
வலிகளை மறைத்து வாழப்
பழகிவிட்டோம் இவ்வுலகில்
நாமிருக்கும் வரை உங்கள் நாமம்
நினைவு கூரும்

படித்த மகளிர் திட்டம்

மிருசுவில்

மனைவி, மகன்

0779773165

(சி-9676)

# சேவை நலன் பாராட்டு

## திருமதி ஹேமகோசினி கோகுலராஜா



### முன்னைய சேவைக்கால விபரங்கள்

| இல | சேவை | பதவி | திணைக்களம் | சேவைக்காலம் (முதல்-வரை) |
|---|---|---|---|---|
| 1 | இல.ஆசிரியர் சேவை | ஆசிரியை | கிளி/தர்மபுரம் ம.வி | 14.12.87-31.12.92 |
| 2 | | ,, | கிளி/இயக்கச்சி அ.த.க.பா | 01.01.93-25.04.94 |
| 3 | | ,, | கிளி/வேம்பொடு கேணி சி.சி.த.க.பா | 26.04.94-05.02.96 |
| 4 | | ,, | கிளி/கனகபுரம் ம.வி | 06.02.96-31.08.2000 |
| 5 | | ,, | கிளி/அக்கராயன் அ.த.க.பா | 01.09.2000-09.09.2001 |
| 6 | | ,, | கிளி/கனகபுரம் ம.வி | 10.09.2001-31.12.2007 |
| 7 | | ,, | கிளி/புனித திரேசா மகளிர் கல்லூரி | 01.01.2008-31.12.2010 |
| 8 | | ,, | யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி | 01.01.2011-08.05.2012 |
| 9 | | ,, | யா/வட்டு இந்துக் கல்லூரி | 09.05.2012-19.08.2017 |

எமது பாடசாலையில் கடந்த 5 வருடங்கள் ஆசிரியராக சிறந்த சேவையாற்றி 19.09.2017 இன்று தனது 60ஆவது அகவையில் ஓய்வுபெறும் திருமதி **ஹேமகோசினி கோகுலராஜா** அவர்கள் தனது ஓய்வுக் காலத்தில் குடும்பத்தாருடன் சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:

கல்லூரிச் சமூகம்

யா/வட்டு இந்துக் கல்லூரி, சித்தன்கேணி

(608)

### இலங்கை...

யின் மூத்த தலைவர்களில் ஒருவரான சுப்ரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போர் முடிந்து சமாதானம் ஏற்பட்டு பல வருடங்கள் கடந்துள்ள போதிலும் இனவாதிகளும் சர்வதேச சக்திகளும் யுத்த மன நிலையில் வாழ்ந்து வருவதாகவும்,

இந்த மனநிலையில் இருந்து விடுபட்டு இலங்கை சுயாதீனமாக செயற்பட தேவையான பின்னணி ஏற்படுத்திக் கொடுக்க உலக தலைவர்கள் ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய சஞ்சிகை ஒன்று வழங்கிய செவ்வியின் போது இலங்கை தொடர்பாக ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த சுப்ரமணியம் சுவாமி இதனை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் உச்சி மாநாட்டில் இலங்கை சம்பந்தமாக கவனத்தை செலுத்தவும் அபகீர்த்தியை ஏற்படுத்தவும் சிலர் முனைப்புகளை மேற்கொண்டுள்ளனர் என அவர் தெரிவித்தார். (மு-11)

# ஐ.நா.அணுஆயுத தடை உடன்பாட்டில் இலங்கை கையெழுத்திட வாய்ப்பில்லை

(கொழும்பு)

ஐ.நாவின் அணுஆயுத தடை உடன்பாட்டில், இலங்கை கையெழுத்திடுவதற்கு வாய்ப்பில்லை என்று அரசாங்க வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன.

அணு ஆயுதங்களைத்தடை செய்யும்ஐ.நா. பிரகடனம்தொடர்பான உடன்பாடு, நாளை 20ஆம் திகதி ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத் தொடரின் போது கையெழுத்திடப்படவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது அமெரிக்காவுக்கு மேற்கொண்டுள்ள பயணத்தின் போது கலந்துரையாடப்படவுள்ள விடயங்களில், இந்த விவகாரமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எனினும் அமெரிக்காவின் கடைசி நேர அழுத்தங்களால், இலங்கை இந்த உடன்பாட்டில் கையெழுத்திடுவதில்லை என்று முடிவெடுத்திருப்பதாக கூறப்படுகிறது.

இந்த அணு ஆயுத தடை பிரகடனத்தை அமெரிக்கா விரும்பவில்லை. இந்த உடன் பாட்டை சட்டபூர்வமாக்குவதற்கு, இதில் குறைந்தபட்சம் 50 நாடுகள் கையெழுத்திட வேண்டும். கடந்த வெள்ளிக்கிழமை வரை, இந்த உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு 38 நாடுகள் மாத்திரம் இணங்கியுள்ளன.

எனினும், இதில் கையெழுத்திடும் நாடுகளின் எண்ணிக்கை வேறுபடலாம். அதேவேளை, இந்த உடன் பாட்டில் கையெழுத்திடுவதில் இருந்து நழுவும் இலங்கையின் முடிவு அச்சத்தை ஏற்படுத்துவதாக முன்னாள் இராஜதந்திரி ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

இது அணிசேரா கொள்கையை இலங்கை கைவிட்டு வருவதைப் பிரதிபலிக்கிறது என்றும் கொழும்பின் முடிவுக்கு அமெரிக்காவே காரணம் என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளும் இந்த உடன்பாட்டில் கையெழுத்திடவில்லை. எனினும் ஏனைய தெற்காசிய நாடுகள் இந்த பிரகடனத்தில் கையெழுத்திடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

## இலங்கை விமானப்படை குண்டு வீச்சில் பலியான மாணவர்களின் நினைவுதினம்

(கரணவாய்)



இலங்கை விமானப் படையின் குண்டு வீச்சில் பலியான பாடசாலை மாணவர்களின் 22 ஆம் ஆண்டு நினைவுதினம் எதிர்வரும் 22.09.2017 அன்று நாகர் கோவில் மகா வித்தியாலயத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

22.09.1995 ஆம் ஆண்டு வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் மகா வித்தியாலயத்தின் மீது இலங்கை விமானப் படையின் புக்காரா விமானங்களின் குண்டு வீச்சு தாக்குதலில் பாடசாலை மாணவர்கள் 21 பேர் பலியாகினர்.

இவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு வருடா வருடம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. கடந்த 2015 ஆம் ஆண்டு அம்மாணவர்கள் நினைவாக பாடசாலையில் நினைவுத்தூபி ஒன்று அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அந் நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது. (இ-60)

## கசுன் பலிசேனவுக்கு ரூ.10கோடி போனஸ்

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேனவுக்கு பத்துக் கோடி ரூபா போனஸ் தொகை வழங்கப்பட்டுள்ளது.

• மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணைகளின் போது இத்தகவல் வெளிப்பட்டுள்ளது.

குறித்த மோசடிச் சம்பவத்துடன் பேர்பெச்சுவல் நிறுவனம் நேரடித் தொடர்புகளைக் கொண்டுள்ளதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

இந்நிலையில் கடந்த வருடம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு பத்து கோடி ரூபா போனஸ் தொகை வழங்கப்பட்டுள்ளதுடன், ஏனைய வாடிக்கையாளர்களுக்கும் குறிப்பிடத்தக்க ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

எனினும்அவ்வாறு போனஸ் தொகை பெற்ற ஏனைய நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களின் பெயர்களை வெளியிட கசுன் பலிசேன மறுப்புத் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஒரு கல்லில் இரு குருவிகளை கொல்ல பிரதமர் தயாராகிறார்

### விமலின் கட்சி விசனம்



காணாமல் ஆக்கப்படுவதை தடுக்கும் சர்வதேச இணக்கப்பாட்டு சட்டத்தை இலங்கைக்குள் அமுல்படுத்தும் சட்டமூலத்தை எப்படியாவது நிறைவேற்றி, ஒரு கல்லில் இரண்டு குருவிகளை கொல்ல பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தயாராகி வருவதாக தேசிய சுதந்திர முன்னணியின் பிரசார செயலாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு விட்டால், படையினர் எவருக்கும் தண்டனை பெற்றுக்கொடுக்க இடமளிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதி பிரயோசனமற்றுப் போய்விடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

புறக்கோட்டையில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து ஒருவரை பாதுகாக்கும் சர்வதேச இணக்கப்பாட்டு சட்டமூல வரைவு நாளை மறுதினம் 21ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளது.

விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை தோற்கடிக்க அர்ப்பணிப்புகளை மேற்கொண்ட படையினரை கொல் களத்திற்கு இட்டுச் செல்லும் இந்த சர்வதேச இணக்கப்பாட்டு சட்டமூலத்திற்கு நான்கு புறமும் இருந்து எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வரும் நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கையில்லாத கருத்துக்களை வெளியிட்டு, சட்டமூலம் கடந்த காலத்திற்கு ஏதுவானதாக இருக்காது எனக் கூறியுள்ளார்.

2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் 21ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட பின்னர், சபாநாயகர் அதில் கையெழுத்திட்ட நாளில் இருந்தே சட்டமூலம் அமுலுக்கு வரும் என பிரதமர் கூறுகிறார்.

இது முற்றிலும் நாட்டையும் நாட்டு மக்களையும் குறிப்பாக நாட்டிற்கு அமைதியை வென்று கொடுத்த ஓய்வுபெற்ற படையினர் உட்பட முழு படையினரையும் ஏமாற்ற புனையப்பட்ட கதை.

இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 13ஆவது பந்திக்கு அமைய எதிர்காலத்தில் அமுலாகும் வகையில் குற்றவியல் சட்டங்களை இயற்ற முடியாது எனக் கூறப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க இதனை அறிந்து கொண்டே இப்படியான கருத்தை வெளியிட்டுள்ளார். அரசியலமைப்புச்சட்டத்தின் 13 ஆவது பந்தியில் 13 (6) என்ற உப பந்தியில் கடந்த காலத்திற்கு அமுலாகும் வகையில் குற்றவியல் சட்டங்களை எப்படி கொண்டு வரலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

ஒரு சர்வதேச இணக்கப்பாடு அல்லது சட்டத்தை இலங்கைக்குள் அமுல்படுத்த வேண்டுமாயின் கொண்டு வரப்படும் சட்டம் கொண்டு வரப்பட்ட நாளில் இருந்தே அமுலாகும். உதாரணமாக பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து ஒருவரை பாதுகாக்கும் சர்வதேச இணக்கப்பாட்டுச் சட்டம் கடந்த 1992ஆம் ஆண்டு சர்வதேச சட்டத்தில் இணைக்கப்பட்ட சட்டம்.

இதனால், நாளை மறுதினம் 21ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தில் இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் அதன் மூலம் தற்போதைய காலத்தில் இருந்து கடந்த 1992ஆம் ஆண்டு வரை நடந்த சம்பவங்கள் தொடர்பிலும் தண்டனை வழங்க முடியும்.

இதற்கு அமைய கடந்த 1992ஆம் ஆண்டு முதல் காணாமல் ஆக்கப்பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களின் கீழ் புதிய சட்டத்தின்படி இலங்கையில் ஏற்படுத்தப்படும் விசேட மேல் நீதிமன்றம் மற்றும் வெளிநாட்டு நீதிமன்றங்களில் படையினருக்கு எதிராக வழக்குகளை தாக்கல் செய்ய முடியும்.

80ஆம் ஆண்டுகளின் இறுதியில் ஏற்பட்ட வன்செயல்களின் போது காணாமல் போன தமது உறுப்பினர்களுக்கு நியாயம் கிடைக்குமாயின் சட்டமூலத்தை ஆதரிப்பதாக மக்கள் விடுதலை முன்னணி கூறுவதுபொய்.

அரசியலமைப்புச் சட்டத்திற்கு அமைய சர்வதேச இணக்கபபாட்டு சட்டம் அமுலுக்கு வந்தும் கடந்த காலத்தில் நடந்த சம்பவங்களின் அடிப்படையில் படையினருக்கும் தண்டனை கிடைக்கும் என்பது தெளிவாகியுள்ளது என மொஹமட் முஸம்மில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## பிக்குமார் பிச்சைப்பாத்திரம் ஏந்தி நிதி சேகரிப்பதில் தவறில்லையாம்

### அஸ்கிரியபீடம் விளக்கம்

நீதிமன்றத் தீர்ப்பில் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டவர்களுக்கு பௌத்த பிக்குமார் பிச்சைப் பாத்திரம் ஏந்தி நிதிசேகரிப்பதில் தவறில்லை என்று அஸ்கிரியபீடம் அறிவித்துள்ளது.

சில் அனுஷ்டானங்களுக்கான துணிவிநியோக முறைகேடுகள் காரணமாக லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு அபராதத் தொகையும் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. குறித்த அபராதத் தொகையைச் செலுத்தும் நோக்கில் பௌத்த பிக்குமார் சிலர் பிச்சைப் பாத்திரம் ஏந்தி நிதி சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பிக்குமாரின் குறித்த நடவடிக்கை பௌத்த மதத் துக்கு இழுக்கானது என்றும் அதனை நிறுத்த தலையிடுமாறும் அரசியல்வாதிகள் சிலர் மகாநாயக்கர்களுக்கு பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் மெதகம தம்மானந்த தேரர், குறித்த நடவடிக்கை பிக்குமாரின் சுய விருப்பில் மேற்கொள்ளப்படுவதால் அதனை தடுக்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

பௌத்த மதத்தின் வளர்ச்சிக்கான செயற்பாடுகளை மேற்கொண்டவர்களுக்கு சிறை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளமை குறித்து அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கில் அவர்கள் அவ்வாறு பிச்சைப் பாத்திரம் ஏந்தியுள்ளதாக மெதகம தம்மானந்த தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் பௌத்த அனுஷ்டானங்களுக்கான துணி விநியோகம் காரணமாக லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு விதிக்கப்பட்டுள்ள சிறைத் தண்டனையை இரத்துச் செய்யுமாறு அரசாங்கத்திடம் அஸ்கிரிய பீடத்தின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## 4 சீனப் பிரஜைகள் கைது

சட்டவிரோத சிகரெட்டுகள், வல்லப்பட்டை மற்றும் கோடா வைத்திருந்த நான்கு சீனப் பிரஜைகளை, கொள்ளுப்பிட்டி பகுதியில் வைத்து நேற்றுக்காலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த நபர்கள் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 16,200 சட்டவிரோத சிகரெட்டுகள், 830 கிராம் வல்லப்பட்டை மற்றும் 110 லீற்றர் கோடா ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## விசா இல்லாமலிருந்த 4 இந்தியர்கள் கைது

பண்டாரவளை கோவிலுக்கருகில் விசா மற்றும் கடவுச்சீட்டு இல்லாமலிருந்த நான்கு இந்தியர்களை பண்டாரவளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சந்தேக நபர்கள் கோவிலுக்கு அருகில் இருப்பதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# ஆசிரியையின் சங்கிலி அபகரிப்பு

வவுனியா கற்குளம் பகுதியில் பெண்ணின் சங்கிலியை அபகரித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் ஆசிரியை ஒருவர் மோட்டார் சைக்கிளில் கற்குளம் பகுதியில் உள்ள தனது இல்லத்திற்கு சென்ற வேளையில் அவரது வீட்டு நுழைவாயிலில் வைத்து கறுப்பு நிற பல்சர் பைக்கில் வந்த இனம் தெரியாத இருவர் இவரது கழுத்திலிருந்த தங்க சங்கிலியை அபகரித்து சென்றுள்ளனர்.

குறித்த நபர்கள் இருவரும் வன்னி கோட்டம் சந்தியிலிருந்து குறித்த ஆசிரியை பின் தொடர்ந்து சென்று மக்கள் நடமாட்டம் இல்லையென்பதை அவதானித்த பின்னர் சங்கிலியை அபகரித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து சிதம்பரபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து வவுனியா பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (மு-250)


விசேட கட்டணச்சலுகையில்

புதிய பிரிவுகள் ஆரம்பம் - 20/9/2017 (WED) at 9 am.

DMI COMPUTER EDUCATION

- Dip.in Information Technology
- Diploma in Office Automation
- Dip. in Pre-Press Desktop Publishing
- Diploma in Pc Applications
- Adv. Dip. in Hardware & Networking
- Dip. in Video Production & Multimedia
- Dip.in Web Designing & Development
- Dip. in Computerized Accounting
- Master Dip.in Mulitmedia & Animation

#Auto CAD, C++, JAVA#

யாழில் முதன்மை நிலை வகிக்கும்

Spoken English

IELTS

- Unique Test Tips
- Latest course Materials

IELTS Life Skills

திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு (A1,B1)

புதிய நடைமுறைகளுக்கு : www.itdmi.com/ls



☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.

☑ Microsoft Online பரீட்சைகளூடாக Microsoft - அமெரிக்காவின் இருந்து தலைமை செயலதிகாரியின் கையொப்பத்துடனான Microsoft Specialist சான்றிதழ்கள்.

☑ இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு

DMI COMPUTER EDUCATION

| No.113, கன்னாதிட்டி வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.19,A9 வீதி, குமரபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) கிளிநொச்சி Tel.: 021-228 5655 |
|---|---|---|---|---|


## யாழ்ப்பாணம் மாநகர சபை

### திண்மக்கழிவுகளை முறையாக அகற்றுவதற்கான

# கேள்வி அறிவித்தல்

யாழ்.மாநகர ஆளுகைக்குட்பட்ட குறிப்பிடப்படும் இடங்களிலிருந்தான தரம் பிரிக்கப்படாத திண்மக் கழிவுகளை மாநகர சபையால் தரப்படும் கொம்பக்ரர் வாகனத்தில் ஏற்றி கல்லுண்டாயில் வைத்து தரம்பிரித்துக் கொடுக்கும் சேவைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் விண்ணப்பங்களை யாழ்.மாநகர சபை, பிரதம பொறியியலாளர் பகுதியில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் கடமை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 2.00 மணிவரை 28.09.2017 வரையான காலப் பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

கேள்விப் படிவம் வழங்கப்படும் இறுதித் திகதி 28.09.2017 பி.ப 3.00 மணியாகும்.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை பூரணப்படுத்தி ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலிருந்து 19.09.2017ம் திகதியில் இருந்து 29.09.2017 வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1,000.00 + வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 29.09.2017ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது பிரதம பொறியியலாளர் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடுதல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியாளனது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

| தொ. எண் | வேலை விபரம் | விலை விகிதம் (தலா ஒருவருக்கு) | மொத்த தொகை |
|---|---|---|---|
| I | நாளொன்றுக்குக் கட்டாயமாக இரு தடவைகள் சேவை வழங்க வேண்டும் (தேவையான ஆளணி 05 விபரம் வருமாறு)<br>ஆளணி வகை — எண்ணிக்கை<br>சாரதி — 01<br>கழிவு ஏற்றுபவர்கள் — 02<br>கழிவுகளை தரம்பிரிப்போர் — 02 | | |
| | சாரதிக்கான கூலி | .... | .... |
| | கழிவு ஏற்றுபவர்கள் கூலி | .... | .... |
| | கழிவுகளை தரம்பிரிப்போர் கூலி | .... | .... |
| II | மேலதிகமாக குறித்த நாளில் மூன்றாவது தடவை ஏற்றும்போது ஊக்குவிப்பாக வழங்கப்படும் கொடுப்பனவு மேலுள்ள (1) இனை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்க வேண்டியது. | | |
| | மொத்தத் தொகை | .... | .... |

பொ.வாகீசன்
ஆணையாளர்
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
19.09.2017

(C-9678)

# 3ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 - 09 - 1990

மறைவு 23 - 09 - 2014

## அமரர் தயாபரன் சிவதர்ஷன்

(உரிமையாளர், சிவதயா அச்சகம்)



மகனே நீ பிரிந்து மூன்றாண்டு போயிற்றாம்
நூறாண்டு போனாலும் நீ இருப்பாய் எம்முள்ளே.
காலம் விதித்த விதி கடும் விதிதான் என்றாலும்
ஞாலம் உள்ளவரை நீ உயிர்ப்பாய் எம்முள்ளே.

(609)

தயா அச்சகம்
575, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
தயா வெளியீடு
வெற்றி இலக்கு 077 396 5214

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 21.08.2017 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு

## அமரர் திருமதி சோமசுந்தரம் முத்தம்மா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (20.09.2017) புதன்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று அஸ்தியானது கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து வீட்டுக்கிருத்திய கிரியைகள் நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

யூனியனடி,
இமையாணன், உடுப்பிட்டி.

(C-9680)

இங்ஙனம்
குடும்பத்தினர்

# 2020இல் அரசு கவிழ்ந்து விடும்




எதிர்வரும் 2020ஆம் ஆண்டளவில் நல்லாட்சி அரசாங்கம் கவிழ்ந்துவிடும் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பாக கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டின் தேர்தல் பிரசாரத்தின் போது இந்த அரசாங்கம் ஏராளம் வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. பத்து இலட்சம் தொழில்வாய்ப்புகள், ஐந்து இலட்சம் வீட்டுத்திட்டங்கள், வொக்ஸ்வகன் கம்பனியின் கிளை இலங்கையில் நிறுவப்படல் போன்றன இவற்றில் முக்கியமானவை. எனினும் எந்தவொரு வாக்குறுதியும் அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படவில்லை.

தற்போது 2025ஆம் ஆண்டு வரையான பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை அரசாங்கம் வெளியிட்டுள்ளது. 2015ஆம் ஆண்டின் வாக்குறுதிகளுக்கு நடந்த அதே கதிதான் இவற்றுக்கும் நடக்கும்.

ஆனாலும் பொதுமக்கள் மத்தியில் ஒருவகையான கவர்ச்சியை ஏற்படுத்தி அரசாங்கத்தின் மீதான எதிர்பார்ப்பை தக்க வைத்துக் கொள்ளவே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் சுதந்திரக் கட்சி இரண்டாக பிளவுபட்டுள்ளது. அவர்கள் எந்தவொரு தேர்தலை எதிர் கொண்டாலும் தோல்வியே கிட்டும்.

ஐ.தே.கவும் தேர்தல்களுக்கு அஞ்சுகின்றது. ஆனால் எந்தவொரு தேர்தல் குறித்தும் அச்சமின்றி அவற்றை எதிர்கொள்ளத் தயாராக இருக்கும் ஒரே கட்சி ஜே.வி.பி மட்டுமே என்றும் சுனில் ஹந்துன்நெத்தி மேலும் தெரிவித்தார். (இ-7)

## பிரதமரின் கருத்துக்கு பந்துல பதில்

காணாமல் போனவர்கள் தொடர்பான கொள்கை கடந்த காலத்துக்கு தாக்கத்தை ஏற்படுத்தாது என பிரதமர் ரணில் தெரிவித்திருந்தாலும் அந்த கொள்கையின் 8 ஆவது சரத்தின் அடிப்படையில் கடந்த யுத்த காலத்தில் ஏற்பட்ட மோதல்கள் தொடர்பில் விசாரணைக்காக சட்ட திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.



அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதியைச் சந்தித்தனர்.

இதன்போது, நாளை மறுதினம் வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள காணாமல் போனவர்கள் தொடர்பான கொள்கை குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த கொள்கையின் ஊடாக இராணுவத்தினருக்கு அநீதி இழைக்கப்படும் என நாம் சுட்டிக்காட்டிய பின்னர் இந்தக் கொள்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்ததாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் செய்தியாளர் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன விளக்கமளித்தார். (இ-7)

## இரசாயனவியல் வினாத்தாள் கசிவு

# ஆசிரியருக்கும் சகோதரருக்கும் கடும் நிபந்தனைகளுடன் பிணை

க.பொ.த உயர்தர பரீட்சை இரசாயனவியல் வினாத்தாளை முன்கூட்டியே கசிய விட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆசிரியருக்கும், அவரது சகோதரருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணை கம்பஹா மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே பிணை வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணை மற்றும் 10 ஆயிரம்ரூபாய்ரொக்கப் பிணையில் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், இருவரும் வெளிநாடு செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இருவரையும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மாணவரும் ஆசிரியரின் தந்தையும் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மாமனாரின் அசிட்வீச்சுக்கு இலக்கான மருமகள் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

## ஏழுவயதுச் சிறுமி படுகாயம்; 74 வயது முதியவர் கைது

(கொழும்பு)

மருமகள் மீது அசிட் வீசிய 74 வயதான மாமனாரை கடுவலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பெண்ணின் கணவர் சில வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ள நிலையில் தனது 7 வயதான பிள்ளையுடன் மாமா மற்றும் மாமியுடன் வாழ்ந்து வந்துள்ளார்.

இந் நிலையில் கடந்த 15ஆம் திகதி தனது பிள்ளையுடன் நித்திரையிலிருந்த வேளை தன் மீது திரவம் ஒன்று விழுவதை உணர்ந்து துடித்து எழுந்ததோடு அதிக வேதனையை அனுபவித்துள்ளார்.

வேதனையால் அவதிப்பட்ட பெண் அலறியவாறு தன் பிள்ளையை அழைத்துக் கொண்டு வீதிக்கு ஓடிவந்து ஆட்டோ ஒன்றில் ஏறி வைத்தியசாலைக்கு சென்றுள்ளார்.

வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட குறித்த பெண் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

உயிரிழப்பதற்கு முன்னர் தன் மீதும் தனது பிள்ளை மீதும் அசிட் வீசியது தன்னுடைய மாமனாரே என்று பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே பொலிஸார் 74 வயதுடைய குறித்த பெண்ணின் மாமனாரை கைது செய்துள்ளனர்.


மேலும் அசிட் வீச்சில் பாதிக்கப்பட்ட 7 வயதுடைய சிறுமி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்தி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# பாம்புக் கடிக்கு இலக்கான நபர் யாழ். வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

பாம்புக்கடிக்கு இலக்கான நபர் ஒருவர் தன்னைக் கடித்த பாம்புடன் வந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காரைநகர் கருக்கடி பிரதேசத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஸ்ரீரங்கன் (வயது-36) என்பவருக்கே வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது பாம்பு கடித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-10-30)

# வடமராட்சியில் புலிகள் சீருடை



வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் விடுதலைப் புலிகளின் சீருடை காணப்படுகின்றது. யுத்தம் இடம்பெற்று எட்டு ஆண்டுகள் நிறைவடைகின்ற நிலையில் இச்சீருடை அழியாமல் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-60)

# இராசி பலன்

19.09.2017
(புரட்டாதி 03, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சதுர்த்தசி பிற்பகல் 12.12 மணிவரை
பூரம் பின்னிரவு 12.09 மணிவரை
சுபநேரம் 10.33-12.03 மணிவரை
இராகுகாலம் 03.03-4.33 மணிவரை
அமாவாசை விரதம்
மாளயபட்ச முடிபு

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவோணம், அவிட்டம் | | ராகு |
| கேது | | | செவ், சந் சுக், புத |
| | சனி | குரு | சூரி |

**மேடம்:** சுயமுயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**இடபம்:** சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சகோதர வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

**கடகம்:** பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் அதிகரிக்கலாம், கற்பனை மிகுதியான நாள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**கன்னி:** விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், ரோக பயமுண்டு, சயன சுகக் குறைவான நாள்.

**துலாம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** விண்டமிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தொழில் ரீதியாக முக்கிய புள்ளிகளைச் சந்திப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எந்தக் காரியத்தையும் பல முறை யோசித்துச் செய்வது நல்லது.

**கும்பம்:** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மீனம்:** அலுவலகப் பணிகள் துரிதமாகும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

## சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



யாழ்.போதனா வைத்திய சாலையில் அபிவிருத்தி உத வியாளராக கடமையாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தேவராசா மோகனராஜா அண்மையில் யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஜெ. கஜநிதி பாலன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீத வானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். (இ-3)

## மஹோற்சவம்

யாழ். நல்லூர் நாவலர் வீதி சீரடி சாயி மந்திரின் வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் 23.09.2017 சனிக் கிழமை மாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆர ம்பமாகவுள்ளது. தொடர்ந்து 15 தினங்கள் இடம் பெறவு ள்ள இத் திருவிழாவில் எதிர் வரும் 04.10.2017 புதன் கி ழமை காலை 7 மணிக்கு தேர்த் திருவிழா, 05.10.2017 வியா ழக்கிழமை காலை 7 மணி க்கு தீர்த்தத் திருவிழா என்பன இடம் பெறவுள்ளன.(இ-3)

## வகுப்புக்கள் ஆரம்பம்

விடைத்தாள் மதிப்பீட்டிற் காக மூடப்பட்டிருந்த வகுப்புக் கள் கற்றல் நடவடிக்கைக ளுக்காக மீண்டும் நாளை மறுதினம் வியாழக்கிழமை 21.09.2017 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் என மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் அறிவித்துள் ளார். (இ)

## சைவமாநாட்டின் நிறைவுநாள் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரி பாலன சபை முன்னெடுத்த சைவமாநாட்டின் நிறைவு நாள் நிகழ்வுகள் நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை காலை நீராவியடி யில் உள்ள சைவபரிபாலன சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சபையின் தலைவர் ஓய்வு பெற்ற நீதி பதி இ.வசந்தசேனன் தலை மையில் நடைபெற்றன.

நிகழ்வில் ஆசியுரையை வண.சபா.வாசுதேவக் குருக் களும் வரவேற்புரையை சபையின் பரீட்சைச் செயலர் பொ.கமலநாதனும் ஆற்றி னர். சமயமும் வாழ்வியலும் என்ற பொருளில் த.தவ நேசன் உரையாற்றினார்.

சிறப்பு நிகழ்வாக கம்ப வாரிதி இ.ஜெயராஜ் தலை மையில் மேன்மைகொள் சைவநீதி என்ற பொருளில் சிந்தனை அரங்கம் இடம் பெற்றது. இதில் மெய்ப் பொருள் காட்டிய நீதி என்ற பொருளில் விரிவுரையாளர் ச.லலீசனும் திருநாளைப் போவார் காட்டிய நீதி என்ற பொருளில் கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தனும் திருநீலகண் டர் காட்டிய நீதி என்ற பொரு ளில் ஆசிரியர் அ.வாசு தேவாவும் சிறுத்தொண்டர் காட்டிய நீதி என்ற பொருளில் சொல்லின் செல்வர் இரா.செல் வவடிவேலும் கருத் துரைகளை வழங்கினர்.

நிறைவு நிகழ்வாக யாழ். இந்துக் கல்லூரி இசையா சிரியர் கவிதா வாமதேவ னின் நெறியாள்கையில் விரலிசை கானம் இடம் பெற்றது.

இலங்கையின் மிக மூத்த சைவநிறு வனமாகிய சைவபரிபாலன சபை கடந்த வெள்ளிக்கிழமை தொடக் கம் மூன்று நாட்கள் சைவ மாநாட்டை முன்னெடுத் திருந்தது. (இ-3)

## பனை ஓலைச் சுவடி ஏடுகள் இலவசமாக வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

விஜயதசமியை முன் னிட்டு பனை ஓலைச் சுவடி ஏடுகள், சகலகலாவல்லி பாமாலைப் புத்தகம் என்பன தேவைப்படும் ஆலயங்கள், பாடசாலைகள் காங்கேசன் துறை வீதியிலமைந்துள்ள மில்க்வைற் சவர்க்காரத் தொழிற்சாலையில் இலவச மாக பெற்றுக் கொள்ள முடியும் என தொழிலதிபர் இ. தவகோபால் அறிவித்துள் ளார். (இ-3)

## கேரளக் கஞ்சாவுடன் இருவர் இளவாலையில் நேற்றுக்கைது

கேரளக் கஞ்சாவை தம் வசம் வைத்திருந்த இருவர் நேற்று இளவாலை அரசடிப் பகுதியில் வைத்து பொலி ஸாரால் கைது செய்யப்பட் டுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை இளவாலை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் படி இளவாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். சேனநாயக்க தலைமையி லான குழுவினரால் மேற்கொள் ளப்பட்ட திடீர் சோதனை நட வடிக்கையின் போது சிறு தொகை கேரளக் கஞ்சாவை தம்வசம் வைத்திருந்த மானி ப்பாய் மற்றும் இளவாலைப் பகுதியைச் சேர்ந்த 21 வயது டைய இரு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட் டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு வரையும் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக இளவாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-10-104)



## குடிநீரைப் பெறுவதில் சிரமம்

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஈச்ச மோட்டைப் பகுதி மக்கள் குடி நீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருவதாக கவலை யுடன் தெரிவித்தனர்.

ஈச்சமோட்டை பிரதேசத் தில் நீர் வழங்கல் அதிகார சபையால் ஐந்து இடங்களில் பொது மக்கள் குடிநீரைப் பெற்று கொள்வதற்காக நீர்க் குழாய்கள் பொருத்தப்பட்டி ருந்த நிலையில் தற்போது இதில் மூன்று குழாய்கள் பழுதடைந்திருப்பதாகவும் நாள் ஒன்றுக்கு இரண்டு மணிநேரம் மட்டுப்படுத்தப் பட்ட நேரத்தில் குடிநீர் விநி யோகம் இருப்பதால் குடி நீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள் ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் உரிய நட வடிக்கையெடுக்குமாறு பிர தேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-105)

## வடமாகாண விவசாயக் கண்காட்சியில் தென்னை பயிர்ச் செய்கை குறித்து விளக்கம்

யாழ். திருநெல்வேலி விவ சாய திணைக்கள வளாகத் தில் இன்று 19 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை காலை 8 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை நடைபெறவுள்ள மாபெ ரும் விவசாய கண் காட்சியில் தென்னை பயிர்ச் செய்கை சபையினரால் நடுகை முறை, பசளை பிரயோகம், ஊடு பயி ர்ச்செய்கை, பீடைக் கட்டுப் பாடு,இரை கௌவி மைற்றா பாவனை, நீர்ப்பாசன முறை கள், பயிர்ச் செய்கைகளுக் கான மானியமற்றும்இலகுகடன் திட்டங்கள், வரட்சியி லிருந்து தென்னைபயிர்ச்செய்கையை பாதுகாத்தல் போன்ற பல முக்கியமான விடயங்கள் செயன்முறை விளக்கத்துடன் காட்சிப்படுத் தலுடனும் இடம் பெறவிருப் பதால் ஆர்வமு டைய அனைவரும் தவறாது கலந்து பயனடையுமாறு யாழ். பிராந்திய முகாமையா ளர் கே. வைகுந்தன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-3)

## திருநெல்வேலி சந்தையில் பாரிய வாழைக்குலை



45 கிலோகிராம் நிறையுடைய அதிக உயரமான வாழைக் குலை ஒன்று விற்பனைக்காக திருநெல்வேலி சந்தைக்கு நேற்று கொண்டு வரப்பட்டது. இந்த வாழைக்குலை வீட்டுத் தோட்டத்திலிருந்து பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## குப்பைகளால் அச்சம்





யாழ். மாநகர சபை எல் லைக்குட்பட்ட ஸ்ரான்லி வீதி யில் கொட்டப்படும் குப் பைக ளால் தொற்று நோய் பரவும் அபாயம் இருப்பதாகவும் மழை காலம் ஆரம்பித்து விட்ட தால் இப் பிரதேசத்தில் டெங்கு நுளம்பு பெருக்கம் அதிகரித திருப்பதாகவும் மக்கள் விச னம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் சம்பந் தப்பட்ட அதிகாரிகள் கவனத் திற் கொண்டு தேங்கிக் கிடக் கும் கழிவுகளை விரைவில் அகற்ற உரிய நடவடிக்கை யெடுக்குமாறு மக்கள் கோரி க்கை விடுத்துள்ள னர். (இ-10-104)

## 25 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் அனுமதி

தேசிய விளையாட்டுப் பாடசாலையாக தெரிவு செய் யப்பட்டுள்ள யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு 2004 ஆம் ஆண்டு பிறந்த தரம் 8 இல் கல்வி கற்கும் மாணவர் களிடமிருந்து அனுமதி கோரப்பட்டுள்ளது.

உடற் தகுதி பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும் 25 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்பட்டு சகல வசதிகளுடனும் விடுதியில் தங்கி கல்வி கற்கும் வாய்ப்பு வழங்கப்படும். குறிப்பு- விண்ணப்பப் படிவங்களை இன்று அலுவலகத்தில் பெற்று 25.10.2017 ஆம் திகதிக்கு முன்னர் அலுவல கத்தில் ஒப்படைக்கவும் என அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் அறிவித்துள்ளார். -(இ)

## நீர் சுத்திகரிப்பு இயந்திரம் அன்பளிப்பு




(சுரணவாய்)

தம்பசிட்டி சதாவதானி முன்பள்ளி சிறார்கள் சுத்தமான குடிநீரை பெற்றுக் கொள்வதற்காக நீர் சுத்திகரிப்பு இயந் திரம் ஒன்றினை வடமாகாணசபை உறுப்பினர் சி.அகிலதாஸ் அண்மையில் அன்பளிப்புச் செய்துள்ளார்.

தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டு அகிலதாஸ் உத்தியோக பூர்வமாக கையளித்தார்.

இதேவேளை குறித்த முன்பள் ளியின் புனர மைப்பு தேவைக் காக ஒரு இலட் சத்து 90 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு முன்பள்ளி யினை அழகுபடு த்தும் வேலைகள் நிறைவடைந்த நிலையில் அத னையும் முன்பள்ளி சிறார் களின் பாவனை க்கு வழங்கி வைத்துள் ளார். (இ-60)

## வீட்டிற்குள் நுழைந்த நாகபாம்பு



(கரணவாய்)


வடமராட்சியில் வீடுகளு க்குள் நுழையும் விசஜந்துக் களால் மக்கள் அச்சமடைந் துள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயி ற்றுக்கிழமை கரவெட்டி மாணி க்கவாசகர் பாடசாலைக்கு அரு காமையிலுள்ள ஒரு வீட்டில் நாகபாம்பு நுழைந்துள்ளது.

அந்தப்பாம்பை வயோ திபப் பெண் ஒருவர் பிடித்து வெளியேற்றியுள்ளார்.(இ-60)

116

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?






## மாணவி வித்தியா கொலை நடந்தது என்ன?

01.06.2015 அன்று மாணவி வித்தியாவின் கொலைச் சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜராகிய போது 15.06.2015 வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிபதி செல்வநாயகம் லெனின்குமார் உத்தரவிட்டிருந்தார்.

தொடர்ந்து 15.06.2015 அன்று சந்தேகநபர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து கைதிகளை ஊர்காவற்றுறை நீதிமன்றத்திற்குக் கூட்டிச் செல்லும் போது யாழ். பண்ணை வீதி நெடுகிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அன்றையதினம் நீதிமன்றிற்கு மாணவி வித்தியாவின் தாய், சகோதரன் மற்றும் உறவினர்கள், சாட்சியாளர்கள் வந்திருந்தனர். கூடவே ஊடகவியலாளர்களும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் திரண்டனர்.

ஊர்காவற்றுறை நீதிபதி செல்வநாயகம் லெனின்குமார் முன்னிலையில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மாணவி வித்தியாவின் தாய் சரஸ்வதி, சகோதரன் நிசாந்தன் உள்ளிட்டோரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

### வித்தியாவின் தாய் சரஸ்வதி சாட்சியம்

சிவலோகநாதன் சரஸ்வதி ஆகிய எனக்கு 3 பிள்ளைகள் உள்ளன. இரண்டு பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் பிள்ளையும் இருக்கிறார்கள். முதலாவது பெண் பிள்ளை கிருசாந்தி. இரண்டாவது ஆண்பிள்ளை நிசாந்தன். மூன்றாவது பெண் பிள்ளை வித்தியா. இவர் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். எனது மகள் வித்தியாவை கடைசியாக 2015.05.13 அன்று காலை 7.30 மணியளவில் பாடசாலை செல்லும் போது கண்டிருந்தேன். அன்று காலை துவிச்சக்கரவண்டியில் பாடசாலை சென்றவர் பிற்பகல் 3 மணியாகியும் வீடு திரும்பவில்லை.

எனது மகளைத் தேடி முதலில் எனது மகன் நிசாந்தன் பாடசாலைக்குச் சென்றிருந்தார்.

அதன் பின்னர் நானும் சென்று தேடிப்பார்த்தேன். வித்தியாவைத் தேடிப் பாடசாலைக்குச் சென்ற மகன் அங்கு விசாரித்தார். அன்றைய தினம் வித்தியா பாடசாலைக்கு வரவில்லை எனக் கூறியிருந்தார்கள். பாடசாலைக்கு மகள் வரவில்லை என்று கூறியதனை யடுத்து பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எம்மோடு சேர்ந்து வித்தியாவைத் தேடியிருந்தனர். எங்கு தேடியும் மகளைக் காணாததனால் குறிகாட்டுவான் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வதற்கு நானும் மகனும் சென்றிருந்தோம். அங்கு இவ்வாறான முறைப்பாடுகள் எடுக்கமுடியாது. ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்திற்குச் செல்லுமாறு கூறியதையடுத்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்வதற்குச் சென்றிருந்தோம். முறைப்பாடு செய்துவிட்டு அங்கிருந்து நாம் வீடு திரும்பும் போது இரவு 8 மணியிருக்கும்.

மறுநாள் காலை 5.30 மணியளவில் வித்தியாவைத் தேடி நானும் எனது மகனும் அயல் வீட்டார் சிலரும் சென்றோம். ஆலடி வீதியில் முச்சக்கரவண்டிச் சாரதி சுதன் என்பரை விசாரித்திருந்தோம். இதற்கிடையில் குறித்த வீதி முழுவதும் தேடிப்பார்த்தோம். வீதியின் மறுபக்கம் எனது மகன் நிசாந்தனும் இலங்கன் என்பவரும் தேடிச் சென்றனர். சிறிது நேரத்தில் மகன் தேடிச் சென்ற திசையில் இருந்து அம்மா...! எனக் 'குளறிச் சத்தம் கேட்டது. நாம் சத்தம் கேட்ட திசை நோக்கி ஓடினோம். அங்கு எனது பிள்ளையின் பாடசாலை உடுப்பைக் கண்ட நான் அவ்விடத்திலேயே மயங்கி விழுந்து விட்டேன். மகளின் அருகே என்னால் செல்ல முடியவில்லை. பின்பு எனக்கு மகள் இறந்து விட்டதாக கூறியிருந்தார்கள்.

நானும் எனது மகனும் மகளின் அந்த நிலையை பார்த்ததும் அதனை சொல்லும் நிலையில் இல்லை.

அங்கு வந்தவர்கள் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்திருந்தனர். பின்பு 15.05.2015 அன்று பொலிஸாருக்கு வாக்கு மூலம் ஒன்றினையும் வழங்கியிருந்தேன்.

சம்பவ இடத்திற்கு வந்திருந்த பொலிஸாரிடம் தகவல்களை வழங்கியிருந்ததோடு நீதிபதியிடமும் இறந்தது எனது மகள்தான் என கூறியிருந்ததாக வித்தியாவின் தாயாரான திருமதி சிவலோகநாதன் சரஸ்வதி சாட்சியமளித்தார்.

### மாணவியின் சகோதரன் நிசாந்தன் சாட்சியம்

பசுபதிப்பிள்ளை சிவலோகநாதன் எனது அப்பா, சிவலோகநாதன் சரஸ்வதி எனது அம்மா. நான் குடும்பத்துடன் புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தில் வசித்து வருகின்றேன். நான் எனது குடும்பத்தில் இரண் டாவது பிள்ளை. கிருசாந்தி எனது அக்கா, வித்தியா எனது தங்கை. அக்கா யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகப் பிரிவில் கல்விகற்று வருகின்றார். தங்கை வித்தியா புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் உயர்தரப்பிரிவில் கல்வி கற்று வந்தார்.

நான் எனது தங்கையை 13.05.2015 அன்று காலை தான் கடைசியாக் கண்டிருந்தேன்.

அன்றைய தினம் காலை 6 மணியளவில் அருகிலுள்ள இடமொன்றில் வேலி அடைக்கும் தற்காலிக வேலை ஒன்றிற்குச் சென்றிருந்தேன். காலை 10 மணியளவில் வேல்லையை விட்டு வீட்டுக்கு வந்திருந்தேன்.

வித்தியா பிற்பகல் 3 மணியளவில் பாடசாலையில் இருந்து வீடு திரும்புவது வழக்கம். ஆனால் அன்றைய தினம் 3 மணியாகியும் அவர் வீடு திரும்பவில்லை. விசேட வகுப்பு ஏதும் நடத்தப்படுகிறதா? என அறிவதற்காக வித்தியாவின் பாடசாலைக்குச் சென்றிருந்தேன்.

நான் செல்லும் போது பாடசாலை மூடப்பட்டிருந்த காரணத்தினால் எனது வீட்டுக்கு திரும்ப வந்து மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு வித்தியாவின் சக மாணவியான லக்சனா என்பவரிடம் சென்று அவரிடம் கேட்ட போது வித்தியா அன்றைய தினம் பாடசாலைக்கு வரவில்லை எனக் கூறியிருந்தார்.

பின்பு நானும் அம்மாவும் வித்தியாவை காணவில்லை என முறைப்பாடு செய்வதற்காக குறிகாட்டுவான் பொலிஸ் நிலையம் சென்றிருந்தோம். இதற்கு முன்னர் மற்றொரு மாணவி ஊடாக பாடசாலை அதிபரிடம் தொலைபேசி மூலம் வித்தியா பற்றிக் கேட்டிருந்தோம். (வளரும்)

-புருசோத்தமன்-

# வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டிய அதேநேரம் உரிமைக்காகவும் போராட வேண்டியுள்ளது

## பாரதிபுர மக்களுடன் சிறிதரன் எம்.பி

மக்களின் வறுமை நிலையைப்போக்கி வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த வேண்டிய அதேநேரம் எங்களது உரிமைகளுக்காகவும் போராட வேண்டியுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பாரதிபுரத்தில் மக்களுடனான சந்திப்பொன்று நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் பாரதிபுரம் கிராமத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், இந்தப்பகுதிகளில் வாழ்கின்ற அனைத்து மக்களுமே யுத்தத்தினால் பல இழப்புக்களையும் நெருக்கடிகளையும் தொடர்ச்சியாக சந்தித்திருக்கின்றனர்.

கடந்த 1958, 1973, 1983ஆம் ஆண்டுகளில் வன்செயல்களால் பாதிக்கப்பட்டதுடன், மட்டுமல்லாது கிளிநொச்சி மீது படையினர் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் போது பாதிக்கப்படடவர்கள் என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள், இங்கு வாழ்கின்ற ஒவ்வொரு குடும்பங்களும் சந்தித்திருக்கின்ற இழப்பென்பது எந்தக்காலப்பகுதியிலும் எவராலும் ஈடு செய்யமுடியாத பாதிப்புக்களாகவே காணப்படுகின்றன.

மீள்குடியேறிய மக்களின் அடிப்படைத் தேவைகள் கூட இன்றுவரை பூர்த்தி செய்யப்படாது இருக்கின்றது.

இந்த மக்களின் கோரிக்கைகளை யாரும் புறந்தள்ளி விடமுடியாது. அதிகதேவைகளைக் கொண்டு வாழ்கின்ற மக்களின் அடிப்படைத்தேவையான வாழ்வாதாரம் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

மக்களின் இன்றுள்ள வறுமை நிலையைப்போக்கி வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த வேண்டிய தேவையுள்ள அதேநேரம் எங்களுக்கான ஓர் அரசியல்தீர்வை நோக்கி பயணிக்க வேண்டிய தேவையுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். குறித்த சந்திப்பில் மலையாளபுரம்,பாரதிபுரம் பிரதேச அமைப்பாளர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (2-315)






பூநகரி பொலிஸ் பிரிவின் ஒரு மாத நடமாடும் சேவையின் இறுதி நாள் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதன்போது வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாடசாலை மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி வைத்தார்.

(படம்:-பூநகரி செய்தியாளர்)

# இராசேந்திரன் குளத்தில் தனியார் காணியில் விசேட அதிரடிப்படையினர் தேடுதல்





(மல்லாவி )

வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பாரதிபுரம் கிராமத்தில் உள்ள வீட்டு காணியினுள் மண்ணில் புதைந்த நிலையில் மர்ம பொருள் ஒன்று காணப்படுவதாக கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து நெளுக்குளம் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர், புலனாய்வு பிரிவினர் ஆகியோர் இணைந்து அகழ்வுப் பணிகளை நடத்தியுள்ளனர். இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10. மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வவுனியா பாரதிபுரத்தில் உள்ள வீட்டுக் காணிக்குள் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் மண்ணில் புதைக்கப்பட்டு காணப்படுவதாக கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து நேற்று வவுனியா மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதியை பெற்று வீட்டு காணியை தோண்டும் பணிகள் நடைபெற்றபோது சந்தேகப்படும்படியான எவ்விதமான பொருட்களும் கண்டுபிடிக்கப்படவில்லை. இதன் போது பல வருடங்களுக்கு முன்னர் மலசல கூட பாவனைக்காகப் பயன்படுத்தப்பட்ட 210 லீற்றர் கொள்ளவுள்ள தரத்திலான வெற்று பரல் ஒன்றே காணப்பட்டதாக விஷேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து, அப்பகுதியில் வேறு பொருட்கள் காணப்படாத நிலையில் தோண்டபட்ட அகழி பின்னர் மூடப்பட்டுள்ளது. (2-15-250)

# மீள்குடியேற 2,422பேர் காத்திருப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் தங்களை சொந்த இடங்களில் மீள்குடியேற அனுமதிக்குமாறு 741 வரையான குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்து 422 பேர் பதிவுகளை மேற்கொண்டுள்ளதாக மாவட்ட செயலகப் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை,பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலும் 43 ஆயிரத்து 905 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ள நிலையில் மேற்படி நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் 741 குடும்பங்கள் மீள்குடி யேறுவதற்காக தமது பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

அதாவது கரைச்சிப் பிரதேசத்தில் 130 குடும்பங்களும் கண்டாவளைப் பிரதேசத்தில் 21 குடும்பங்களும் பூநகரிப் பிரதேசத்தில் 357 குடும்பங்களும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 233 குடும்பங்களும் என மொத்தம் 741 குடும்பங்களைச் சேர்ந்த 2422 பேர் தமது சொந்த இடங்களில் மீள் குடியேற்றுமாறு கோரி தமது பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

குறிப்பாக பூநகரி பிரதேசத்திற்கு உட்பட்ட இரணைதீவு விடுவிக்கப்படாமை பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள முகமாலை பகுதியில் வெடி பொருள் அகற்றுவதில் உள்ள தாமதம் என்பவற்றால் அதிகளவான குடும்பங்களும் ஏனைய படையினர் வசமுள்ள காணிகளால் குறிப்பிட்ட சில குடும்பங்களும் மீள்குடியேறமுடியாத நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# உவர் நீர்த்தடுப்பணையை அமைத்து விவசாய நிலங்களை பாதுகாக்க கோரிக்கை

கிளிநொச்சி மண்டைக்கல்லாறு ஆற்றுக்கான உவர்நீர்த்தடுப்பணையை அமைத்து விவசாய நிலங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிவின்கீழ் உள்ள மண்டைக்கல்லாறு பாலத்திற்கான உவர் நீர்த்தடுப்பணை அமைக்கப்படாமையினால் கடற்பெருக்கு காலங்களில் மண்டைக்கல்லாற்றில் உவர்நீர் பெருக்கெடுத்து முடக்கனாற்றினூடாக வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் ஆகிய பகுதிகளுக்குள் உவர்நீர் உட்புகுந்து வருடாந்தம் இப்பகுதிகளில் உவர்ப்பரம்பல் அதிகரித்து வருகின்றது என விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மண்டைக்கல்லாற்றுக்கான பாலம் 400 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

ஆனால், கடல்நீர் உட்புகுதலை தடுப்பதற்கும் ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம் ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேறும் மழை நீரை வெளியேற்றுவதற்குமான கதவுகளுடன் கூடிய தடுப்பணைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எவையும் இதுவரை எடுக்கப்படவில்லை எனக்குற்றம் சாட்டியுள்ள விவசாயிகள் இவ்வாறு உவர் நீர்த்தடுப்பணைகள் இன்மையால் கடற்பெருக்கு காலங்களில் உவர் நீர் பெருக்கெடுத்து வன்னேரிக்குளம், குஞ்சுக்குளம், ஆனைவிழுந்தான் ஆகிய பகுதிகளை ஆக்கிரமித்துள்ளதுடன், தற்போது அக்கராயன்குளம் பகுதிகளிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன.

குறிப்பாக அக்கராயன்குளத்தின் கீழான ஸ்கந்தபுரம்,மணியங்குளம் ஆகிய பகுதிகளிலும் குடிநீர்க் கிணறுகள் உவர்நீர்க்கிணறுகளாக மாறி வருவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனைவிட விளைநிலங்கள் பலவும் உவர்நிலங்களாக மாறி வருகின்றதுடன், விளைச்சல்கள் பாதிப்படைவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)



தென்னை பயிர்ச்செய்கை சபையின் தென்னை தின விழாவை முன்னிட்டு தென்னங்கன்று வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. தென்னை தொடர்பான அறிவுறுத்தல்களும் வளர்ப்பு முறைகளும் கூறப்பட்டு பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்விற்கு தென்னை பயிர்ச்செய்கை சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் கெங்காசுதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# ரோஹிஞ்யா முஸ்லிம்களுக்கு இலங்கையில் இடமேயில்லை!

## குடிவரவு திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

**மியன்மாரிலுள்ள ரோஹிஞ்யா முஸ்லிம்கள் அகதிகளாக இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது என இலங்கையின் குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.**

அவர்கள் இலங்கைக்குள்பிரவேசிப்பதாக இருந்தால், மியன்மார் நாட்டின் கடவுச்சீட்டு பெற்றிருக்க வேண்டும்.

இருப்பினும், ரோஹிஞ்யா முஸ்லிம்களுக்கு வேறு நாடுகளுக்கு செல்வதற்கு விசா வழங்கப்படுவதில்லை. அத்துடன், அவர்களுக்கு செல்லுபடியான கடவுச் சீட்டை மியன்மார் அரசாங்கம் வழங்கவில்லை.

இவர்கள் இலங்கைக்குள் பிரவேசிப்பதாயின் சட்ட விரோதமான வழிகளிலேயே வரவேண்டும் என இலங்கையின் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு வருகை தந்த அகதிகள் எனக் கூறப்படுவோர் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ரோஹிஞ்யா பிரச்சினைக்கு முன்னர் கடந்த ஏப்ரல் 20 ஆம் திகதியே வருகை தந்திருத்ததாகவும் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, ரோஹிஞ்யா முஸ்லிம் அகதிகளை இலங்கைக்குள் அனுமதிப்பது தொடர்பில் ஏதாவது கோரிக்கைகள் வருமாயின், அது தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கை என்னவென குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவரிடம் வினவப்பட்டதற்கு, அது தொடர்பில், வெளிவிவகார அமைச்சு தான் தீர்மானம் எடுக்க வேண்டும் என பதிலளித்துள்ளார்.

அத்துடன், மியன்மாரிலிருந்து இலங்கைக்கு வரும் ஏனையவர்களுக்கு எந்தவிதமான தடைகளும் இல்லையெனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸாரைத் தாக்கிய 4 பேர் கைது

வெலிஓயா பகுதியில் பொலிஸாரைத் தாக்கிய, சந்தேகநபர் ஒருவரை விடுவித்தனர் என்ற குற்றச்சாட்டில் 4பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிஓயா, ஜனகபுர பகுதியில், கேரள கஞ்சா உற்பத்தியை மேற்கொள்ளும் சந்தேகநபர்களை பொலிஸார் சுற்றிவளைக்க முற்பட்டபோது, சந்தேகநபர்கள் பொலிஸாரைத் தாக்கியதோடு, கைது செய்து வைத்திருந்த சந்தேகநபரையும் விடுதலை செய்துள்ளனர்.

இந்தச் சம்பத்துடன் தொடர்புடைய 4 சந்தேகநபர்களை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

இதுவரையும் இவர்களுடன் சேர்த்து 24 பேரை இவ்விடயம் தொடர்பில் பொலிஸார் கைதுசெய்துள்ளனரெனத் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த 3 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் சம்பத்நுவர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-7)

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 04 1988



மறைவு 29 09 2008

### அமரர் ஜீவானந்தன் பிரகாஷ்

திதி: 19, புரட்டாதி அமாவாசை

ஒன்பது ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் ஆறவில்லை மனம்
ஆண்டாண்டு தோறும் அழுதுபுரண்டாலும் மாண்டார் வருவாரோ
எம் மாநிலத்தில் தெரிந்திருந்தும் உமது நினைவில் புலம்புகின்றேன்
ஐயா என் உயிர் உள்ளவரை உமது நினைவோடு வாழ்கின்றேன்
ஆண்டவன் பொன்னடியில் இன்பமுடன் நீர் இருக்க
என்றென்றும் வேண்டுகின்றேன் என்றும் உமது அன்பான அம்மம்மா.

20A, செட்டித்தெரு லேன்,
நல்லூர்.

(603)

M.சரோஜினிதேவி

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



**தோற்றம்** 05.02.1943

**மறைவு** 20.08.2017

கடந்த 20.08.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

### அமரர் கோவிந்தபிள்ளை பசுபதி

அவர்களின் சிவப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்றையதினம் 19.09.2017 செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் கோவில் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11 .00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம். மற்றும் அமரரின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றி எமக்கு ஆறுதல் கூறிய அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

***குறிப்பு:- தயவு செய்து இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.***

(சி-9670)

கதிரைவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி.

குடும்பத்தினர்:- திருமதி பசுபதி இந்திராணி தொ.பே.இல: 077 843 1249

# அத்துமீறிய தொழில் நடவடிக்கையால் மூவாயிரத்து 389 மீனவர்கள் பாதிப்பு

## பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 128கிலோ மீற்றர் கரையோரப்பகுதிகளில் தொழில்களில் ஈடுபட்டு வரும் 3ஆயிரத்து 389 மீனவர்கள் தமது தொழிசார் நடவடிக்கைகளில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதாக பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள எழுபது வீதமான மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் காணப்படுகின்ற போதும் மொத்தமாகவுள்ள குடும்பங்களில் 4ஆயிரத்து 205 மீனவக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இதில் தற்போது கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள சுமார் 128 கிலோ மீற்றர் கரையோரப் பகுதிகளில் 3ஆயிரத்து 389 பேர் மீன்பிடிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு மீன்பிடியில் ஈடுபடுப்வர்கள் வெளிமாவட்ட மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைள் உள்ளிட்ட தொழில்களால் தமது தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூடுதலான கரையோரப் பகுதிகளில் இறங்குதுறைகள், உரிய தொழில் உபகரணங்கள் ஆகியன இன்மை காரணமாக தமது தொழில் நடவடிக்கைகளில் நெருக்கடிகளை எதிர்கொள்வதாக பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாவட்டத்தில் உள்ள நன்னீர் குளங்களின் கீழ் நன்னீர் மீன்பிடிகளில் ஈடுபட்டு வரும் 750 வரையான குடும்பங்களும் தற்போது நிலவும் வரட்சியின் காரணமாக குளங்களின் நீர் மட்டம் குறைவடைந்துள்ளமையால் பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் வாய்க்கால், அணைக்கட்டு வேலைகள்



(கண்டாவளை)

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தின் அணைக்கட்டு மற்றும் கல்மடுக்குளத்தின் நீர்ப்பாசன வாய்க்கால் அபிவிருத்தி வேலைகள் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய கிளிநொச்சி வன்னேரிக் குளத்தின் அணைக்கட்டு திருத்த வேலைகள் மூன்று மில்லியன் ரூபா செலவிலும் கல்மடுக்குளத்தின் வாய்க்கால் திருத்தவேலைகள் எட்டு மில்லியன் ரூபா செலவிலும் கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனாங் குளங்களில் உள்ளடங்கிய மேற்படி குளங்களில் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டிய நிலையில் குறித்த வேலைத்திட்டங்கள் வடக்கு மாகாண சபையின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# கிரவல் அகழ்வு இடங்களில் மீள்வனமாக்கலை முன்னெடுங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை



(கண்டாவளை)

முல்லைத்தீவு கொக்காவில் பகுதியில் காடுகள் அழிக்கப்பட்டு கிரவல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துனுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் கொக்காவில், புத்துவெட்டுவான் ஆகிய பகுதிகளில் சுமார் ஆயிரம் ஏக்கர் வரையான பெரும் காடுகள் அழிக்கப்பட்டு வழாங்கப்பட்ட அளவிற்கு கூடுதலாக கிரவல் அகழ்வுகள் தொடச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு கிரவல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுவது மட்டுமல்லாது இந்தப்பிரதேசத்தினுடைய பிரதான வீதியும் மிக மோசமாக சேதடைந்து வருகின்றது.

குறித்த பகுதியில் கிரவல் மண் அகழ்வதற்கு வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு அனுமதிகளை வழங்கியுள்ளதால் இந்தப் பிரதேசங்களின் வளங்களைப் பாதுகாப்பதில் அக்கறையற்று இவ்வாறான பாரிய மரங்களையும் காடுகளையும் அழித்து கிரவல் அகழ்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் விடயத்தில் கவனமெடுத்து கிரவல் அகழ்வு செய்யப்பட்ட இடங்களில் மீள்வனமாக்கல் செயற்றிட்டங்களை முன்னெடுக்குமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# ஆட்டோ திருத்தகத்தில் தீ! ஆட்டோக்கள் எரிந்து நாசம்

(மன்னார்)

மன்னார், செபஸ்தியார் பேராலய பிரதான வீதியில் அமைந்துள்ள ஆட்டோ திருத்தகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில், திருத்தகம் முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மன்னார், செபஸ்தியார் பேராலய. பிரதான வீதியில் அமைந்துள்ள குறித்த ஆட்டோ திருத்தகத்தில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் உடனடியாக பொதுமக்கள் மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு தெரியப்படுத்தியதோடு, மக்கள் தீயை அணைப்பதற்கான முயற்சிகளையும் முன்னெடுத்தனர்.

எனினும் தீயை அணைப்பதற்காக எடுக்கப்பட்ட எந்த நடவடிக்கைகளும் பலனளிக்காத நிலையில் ஆட்டோ திருத்தகம் முழுமையாக எரிந்து சேதமாகியுள்ளது.

இதன்போது திருத்தகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு ஆட்டோக்கள் எரிந்துள்ளதோடு, திருத்தகத்தில் காணப்பட்ட பெறுமதி வாய்ந்த பொருட்களும் தீயில் எரிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் தீ விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)



கிளிநொச்சி பாரதிபுரம் அம்பாள் ஆலயத்தின் தேவை கருதி ஆலய நிர்வாகம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் நிதியொதுக்கீட்டின் கீழ் குறித்த ஆலயத்திற்கு ஒலிபெருக்கி சாதனங்கள் கையளிக்கப்பட்டுள்ளன. குறித்த ஒலிபெருக்கி சாதனங்கள் நேற்று முன்தினம் பிற்பகல் ஆலய நிர்வாகத்திடம் பாராளுமன்ற உறுப்பினரால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படம்:- கண்டாவளை செய்தியாளர்)




# பாலத்தின் பாதுகாப்பிற்காக போடப்பட்டுள்ள இரும்புக்கம்பிகள் நாளுக்கு நாள் அகற்றம்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேசங்களை இணைக்கின்ற பிரதான வீதியில் காணப்படும் பாலியாற்றுக்கு அமைக்கப்பட்ட பாலத்தில் பாதுகாப்பு சுவர்களாக அதற்குப்போடப்பட்டுள்ள இரும்புக் கம்பிகளை இரும்பு வியாபாரிகள் கழற்றி எடுத்துச் செல்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

மல்லாவி, யோகபுரம் ஊடாக மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கரும்புள்ளியான், பாண்டியன்குளம், பனங்காமம், மூன்றுமுறிப்பு வரையான சுமார் இருபதிற்கு மேற்பட்ட கிராமங்களின் இணைப்பு வீதியாகக் காணப்படுகின்ற குறித்த வீதியில் பாலியாற்றுக்கான பாலம் இன்மையால் கடந்த பல ஆண்டுகளாக இந்தப் பகுதி மக்கள் பல சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் குறித்த பாலத்தின் தேவை கருதி இப்பாலத்தினை அமைத்துத்தருமாறு பலரும் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்கின்ற வேலைத்திட்டத்தின் கீழ் இப்பாலம் அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இப்புதிய பாலத்தின் பாதுகாப்புத்தூண்களை உடைத்து அவற்றுக்கு போடப்பட்டிருந்த இரும்புக்கம்பிகள், குழாய்கள் என்பவற்றை இரும்புக்காக இரும்பு வியாபாரிகள் எடுத்துச் சென்றுள்ளனர்.

தொடர்ந்தும் இப் பகுதியில் எஞ்சியிருக்கின்ற கம்பிகளையும் நாளுக்கு நாள் அகற்றி வருவதாகவும் இப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

# ஜெயபுரம் மக்களின் வயல்காணிகள் விரைவில் பகிர்ந்தளிக்க நடவடிக்கை




(கண்டாவளை)

கிளிநொச்சி ஜெயபுரம் மக்கள் தமக்கான வயல் காணிகளைப் பெற்றுத் தருமாறு நீண்டகாலம் விடுத்த கோரிக்கை நிறை செய்யப்பட்டு அவர்களுக்கான காணிகளை வழங்குவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 1983ஆம் ஆண்டு வன்செயல்களால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சி ஜெயபுரம் பகுதியில் குடியேறிய மக்களுக்கு பண்டிவெட்டிக் குளத்தின் கீழ் உள்ள சுமார் ஆயிரம் ஏக்கர் வரையான காணிகள் அப்போது பயிர்ச் செய்கைகளுக்காக பகிர்ந்தளிக்கப்பட்டன.

அதன் பின்னர் ஏற்பட்ட யுத்தம் மற்றும் இடப்பெயர்வுகள் காரணமாக குறித்த காணிகள் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டதையடுத்து, மீள்குடியேற்றத்தின் பின்னர் தமக்கான இந்த வயல்காணிகளை பகிர்ந்தளிக்குமாறு இந்தப்பகுதி மக்கள் கோரிக்கைவிடுத்து வந்தனர்.

எனினும், வயல்காணிகளில் ஆபத்தான வெடி பொருட்கள் காணப்படுவதாகவும் அவற்றை அகற்றுவதில் கால தாமதங்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, இப் பகுதி மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து மாவட்ட கண்ணிவெடி செயற்பாட்டு பிரிவினருடன் கலந்துரையாடி குறித்த காணியை மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனையடுத்து, வெடி பொருள் ஆபத்துக் காணப்பட்ட 900 ஏக்கர் வயல்காணிகளில் வெடி பொருட்கள் அகற்றப்பட்டு பிரதேச செயலாளரிடம் கடந்த 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி கமக்கார அமைப்புக்கள், பொதுமக்கள் குறித்த காணிகளை துப்புரவு செய்வதற்கு உதவுமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் விடுத்த கோரிக்கையை அடுத்து இதனைத் துப்புரவு செய்வதற்குரிய நிதியை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த வயல் காணிகளை ஜெயபுரத்திலுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பகிரந்தளிப்பதற்கான நடவடிக்கைகளை பூநகரிப் பிரதேச செயலகத்தினூடாக முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# மதுவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாக முதற்தடவை பெண் நியமனம்



இலங்கை மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாக திருமதி எலன் மீஹஸ்முல்ல தனது கடமைகளை நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார். மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாக பெண் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

இவர் இலங்கை நிர்வாக சேவையில் விசேட தர அதிகாரி என்பது குறிப்பித்தக்கது. (இ-7)

# தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் நல்ல கட்டமைப்புக்கள் காணப்பட்டன





(கொழும்பு)

தமிழீழவிடுதலைப்புலிகளின் காலப்பகுதியில் நல்ல கட்டமைப்புக்கள் காணப்பட்டன என்று பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் சர்வதேச தொழிலாளர் சங்கமும் ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர் சங்கமும் இணைந்து நடத்திய விழிப்புணர்வுக் கல்விக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராக கலந்து உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம்-கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் தொழிலாளர்கள் தமக்குரிய உரிமைகள், சலுகைகள் மற்றும் சட்டங்கள் என எதையும் அறியாதவர்களாய் இருக்கின்றார்கள்.

இத்தகைய செயலால் முதலாளி வர்க்கம் தொழிலாளர்களை சுரண்டுகிறார்கள். ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்சிக் காலத்தில் இவ்வாறான சூழ்நிலைகள் அரிதாகவே காணப்பட்டன.

ஏனெனில் அவர்களது கட்டமைப்புக்கள் திடமானவையாகவும் தெளிவானவையாகவும் காணப்பட்டன என அவர் மேலும் தெரிவித்திருந்தார். (இ-312)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>தொ.இ: B/7787 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 15 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: IAB, CIMA/ தனியார் தொழில்<br>தொ.இ: G/4555 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 17<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: IT பட்டதாரி<br>தொ.இ: B/7795 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 24 சூரிசெவ் 5 இல்<br>தகைமை/தொழில்: B.Eng/ பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: G/4565 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 24சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/7797 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 15<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/4577 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:CIMA/ கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/7798 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா:- 45 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/4608 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# கடல் நீரேரி ஊடான வீதி இடிந்து அழியும் அபாயம்

(கரணவாய்)

செம்பியன்பற்றினையும் பளையினையும் இணைக்கும் கடல் நீரேரி ஊடான வீதி மழை வெள்ளம், கடல் அரிப்பினால் இடிந்து போகும் அபாயம் காணப்படுவதனால் இது குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தின் வடமராட்சி கிழக்கின் செம்பியன்பற்றையும் கிளிநொச்சி மாவட்டத்தின் பளைப் பகுதியையும் இணைக்கும் பகுதியில் கடல் நீரேரி காணப்படுகின்றது.

இக்கடல் நீரேரியூடாக பாலங்கள் அமைக்கப்பட்டு கடந்த வருடம் களிமண்ணிலான வீதி அமைக்கப்பட்டது.

அவ்வீதி மழை காரணமாக அரிப்பு ஏற்பட்டு சில இடங்களில் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவிற்கு காணப்பட்டது. இவ் அரிப்பை தடுப்பதற்கு பனை மரங்கள் போடப்பட்ட போதிலும் அரிப்பைத் தடுக்க முடியவில்லை.

மேலும் கடல் நீரேரியின் அரிப்புக் காரணமாகவும் வீதியில் மருங்குகள் இடிந்து விழும் அபாய நிலையிலும் காணப்படுகின்றது.

வடமராட்சி கிழக்கில் இருந்து ஏ-9 வீதிக்கு செல்வதற்கு மிகக் கிட்டிய தூரமாக உள்ள மேற்படி வீதியை கவனிக்காது விடின் சில மாதங்களில் கடல் அரிப்பினால் இவ்வீதி இடிந்து போகும் அபாயம் காணப்படுகிறது.



எனவே இவ் வீதியினை மழை, கடல் அரிப்புக்களில் இருந்து பாதுகாப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அப்பகுதி மக்களின் எதிர்பார்ப்பாகும். (இ-60)

# காணாமற்போன சிறுவன் சலவை இயந்திரத்தினுள்

மாதம்பே-புளியன் கடவர வெல்பொதுவே பிரதேசத்தில் கடத்திச் செல்லப்பட்டதாக பொலிஸாரால் தேடப்பட்ட சிறுவன் தனது சொந்த வீட்டிலேயே சலவை இயந்திரத்தினுள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மாதம்பை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தை சேர்ந்த ஐந்து வயதான சிறுவனை முன்பள்ளிக்கு அழைத்து செல்வதற்காக அவரது பெற்றோர் தயார்படுத்தி வைத்துள்ளனர்.

சிறிது நேரத்தின் பின்னர் முன்பள்ளிக்கு அழைத்துச் செல்ல தயாரான போது பிள்ளை காணாமல் போயிருந்தமையால் அவரது பெற்றோர் வீடு முழுவதும் தேடிப் பார்த்துள்ளனர்.

இதன்போது, வீட்டுக்கு அருகில் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த லொறி ஒன்று அந்த வழியாக வேகமாக பயணித்திருந்தமையால் அந்த லொறியில் சிறுவன் கடத்தப்பட்டுள்ளதாக பெற்றோர் எண்ணியுள்ளனர்.

அதன் பின்பு பெற்றோர் 119 அவசர பொலிஸ் பிரிவுக்கு அழைப்பு விடுத்து தமது பிள்ளை கடத்தப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து, பிள்ளை கடத்திச் செல்லப்பட்டதாக கூறப்படும் லொறியை பின் தொடர்ந்து இரு மோட்டார் சைக்கிளில் பொலிஸார் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

மேலும் சில பொலிஸார் பிள்ளையின் வீட்டுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டதோடு வீட்டிலும் வீட்டைச் சுற்றியும் தேடுதலை மேற்கொண்டுள்ளனர்.

அதன்போது, காணாமல் போனதாகக் கூறப்பட்ட பிள்ளை வீட்டிலிருந்த சலவை இயந்திரத்துள் மிகவும் சிரமத்துடன் அமர்ந்திருந்த நிலையில் மீட்டுள்ளனர். (இ-7)


## ஸ்ரீமத் தவத்திரு கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்
## முதலாவது குருபூசை



மெய்யன்பர்களே!

ஏவிளம்பி வருடம் புரட்டாதி 4ஆம் நாள் 20.09.2017 புதன்கிழமை சுவாமிகள் குருபூசை நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

இடம்: மகாதேவ ஆச்சிரமம் (கிளிநொச்சி)

நேரம்: காலை 10.30 மணி

சகல மெய்யன்பர்களும் அங்கத்தவர்களும் பங்குபற்றி குருநாதன் திருவருளை பெற்றுக் கொள்வீர்களாக

-அன்பே சிவம்-

(385)

நிர்வாகம், மகாதேவ ஆச்சிரமம், கிளிநொச்சி.


# ஒரே பார்வையில் நவராத்திரி வழிபாட்டு முறைகள்

## முதலாம் நாள்

| | |
|---|---|
| கோலம்போடும் பொருள் | அரிசிமா |
| கோலவகை | புள்ளிக்கோலம் |
| அபிஷேகத்திற்குரிய திரவியம் | பச்சிலை |
| திலகம் இடப்படும் திரவியம் | புனுகு |
| ராகம் | தோடி |
| இசைக்கப்படும் வாத்தியம் | மிருதங்கம் |
| கனிகள் | வாழைப்பழம் |
| நிவேதனங்கள் | வெண்பொங்கல், சுண்டல் |
| மலர்கள் | மல்லிகை |
| (இலைகள்) | வில்வம் |

தொகுப்பு:- வாசுதேவக்குருக்கள்

# பாரதம்

# தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் 18 பேர் தகுதிநீக்கம் செய்யப்பட்டனர்

## விளக்கம் அளிக்க வராதவர்களை விலக்கி வைத்தார் சபாநாயகர்


(சென்னை)

டி.டி.வி.தினகரனை ஆதரிக்கும் 18 எம்.எல்.ஏக்களை கட்சி தாவி விட்டதாக கூறி தகுதி நீக்கம் செய்து சபாநாயகர் தனபால் உத்தரவிட்டுள்ளார்.

19 எம்.எல்.ஏக்கள் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகர் தனபாலுக்கு அ.தி.மு.க. கொறடா ராஜேந்திரன் பரிந்துரை செய்தார்.

இதை ஏற்று சபாநாயகர் தனபால் 19 எம்.எல்.ஏக்களுக்கும் நோட்டீஸ் அனுப்பினார். அதில், தன்னை நேரில் சந்தித்து விளக்கம் அளிக்குமாறு கூறியிருந்தார்.

நோட்டீசை பெற்றுக் கொண்ட எம்.எல்.ஏக்கள் விளக்கம் அளிக்க அவகாசம் கோரி இருந்தனர். இதையடுத்து அவர்களுக்கு கடந்த 14ஆம் திகதி வரை பதில்



அளிக்க சபாநாயகர் தனபால் அவகாசம் அளித்திருந்தார்.

அதன் பிறகும் எம்.எல்.ஏக்கள் நேரில் விளக்கம் அளிக்க வரவில்லை. அவர்கள் சார்பில் வெற்றிவேல் எம்.எல்.ஏ. மட்டும் சபாநாயகரை சந்தித்து பேசினார்.

இதற்கிடையே தினகரன் அணியில் இருந்த ஜக்கையன் எம்.எல்.ஏ. மீண்டும் எடப்பாடி பழனிச்சாமி அணிக்கு திரும்பினார்.

இந்த நிலையில் சபாநாயகர் தனபால் திடீரென்று 18 எம்.எல்.ஏக்களை கட்சி தாவி விட்டதாக கூறி தகுதி நீக்கம் செய்து நேற்று உத்தரவிட்டார்.

தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் 18 பேரும் முதலில் புதுவை சொகுசு விடுதியில் யாரும் சந்திக்க முடியாதபடி தங்க வைக்கப்பட்டு இருந்தனர்.

தற்போது அவர்கள் கர்நாடக மாநிலம் குடகு மலையில் உள்ள விடுதிக்கு மாற்றப்பட்டு தங்கியுள்ளனர். (3-8)

# பெரும்பான்மையை நிரூபிக்க குறுக்கு வழியில் தகுதி நீக்கம்

## தினகரன் சீற்றம்



(சென்னை)

குறுக்கு வழியில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக 18 பேரை தகுதி நீக்கம் செய்துள்ளனர் என டி.டி.வி. தினகரன் கூறியுள்ளார்.

18 எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டது பற்றி டி.டி.வி. தினகரன் நிருபர்களிடம் கூறியதாவது,

எடப்பாடி அணியினருக்கு 117 சட்டமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை இல்லை. அவர்கள் பெரும்பான்மை இல்லாத அரசு என்று ஆரம்பம் முதலே கூறிவந்தோம்

குறுக்கு வழியில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக 18 பேரை அவர்கள் தகுதி நீக்கம் செய்துள்ளனர்.

பெரும்பான்மையை நிரூபிக்க சட்டமன்ற உறுப் பினர்களின் எண்ணிக் கையை குறைத்து இருக்கி றார்கள்.

நிச்சயம் எங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் நீதிமன்றத்தை நாடுவார்கள். நாங்கள் நீதியை பெறுவோம். நிச்சயம் வாக்கெடுப்பில் கலந்து கொள்வார்கள்.

நீதி என்றைக்கும் வெல்லும். தியாகம் என்றைக்கும் வெல்லும்.

துரோகம் என்றும் வென்றதாக சரித்திரம் இல்லை என்று அவர் தெரிவித்தார். (3-8)

# சசிகலா குடும்பத்தை பற்றிய ரகசியங்களை வெளியிடுவேன்

## ஓ.பன்னீர்செல்வம் எச்சரிக்கை


(நாமக்கல்)

சசிகலா குடும்பத்தை பற்றிய ரகசியங்களை வெளியிடுவேன் என துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

நாமக்கல்லில் நேற்று முன்தினம் நடந்த எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு அங்கு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழகம் ஒரு குடும்ப ஆட்சியின் பிடியில் இருந்து மீள வேண்டும் என்று மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். குரல் கொடுத்தார். அவரை தொடர்ந்து மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா, எதிரிகளின் சதிகளையும், சூழ்ச்சிகளையும் முறியடித்து சிறப்பான முறையில் ஆட்சி நடந்தது. அவர் காட்டிய நல்வழியில் தற்போது எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் பொற்கால ஆட்சி நடை



பெற்று வருகிறது.

ஜெயலலிதா இல்லாத ஆட்சிதானே என சிலர் துள்ளி விளையாட நினைக்கின்றனர். இந்த நினைப்பு உள்ளவர்களும் தமிழக மக்களின் துணையோடு கிள்ளி எறியப்படுவார்கள்.

சுய நலத்துக்காக ஒரு குடும்பத்திற்கு கட்சியையும், ஆட்சியையும் கொண்டு செல்ல முயற்சிக்கின்றனர். அது முடியாததால் இவ்வாறு பேசுகின்றனர்.

இவர்கள் ஜெயலலிதாவுக்கு உண்மையானவர்கள் இல்லை. துரோக செயல்களை செய்தவர்கள். 2014 ஆம் ஆண்டில் அந்த குடும்பத்தை சேர்ந்த 16 பேரை கட்சியில் இருந்து ஜெயலலிதா நீக்கினார். அப்போது என்னை அழைத்து, தினகரனுடன் பேசக்கூடாது என்றார். மேலும் நான் உயிரோடு இருக்கும் வரை அவரை வீட்டிற்குள் விடமாட்டேன் என ஒவ்வொரு 6 மாதத்திற்கு ஒரு முறையும் என்னை அழைத்து கூறியதுண்டு.

ஏற்கனவே சசிகலா குடும்பம் குறித்த ரகசியத்தில் 10 சதவீதம் சொல்லி உள்ளேன். இது 1 சதவீதம், இன்னும் 89 சதவீதம் உள்ளது. அவர்கள் தொடர்ந்து என்னை ஏதாவது சொன்னால், நானும் தொடர்ந்து பல ரகசியங்களை வெளியிடுவேன்.

இதனால் இதோடு அவர்கள் பேச்சை நிறுத்திக் கொள்ள வேண்டும் என எச்சரிக்கை விடுக்கிறேன் என்றார். (3-8)

# இரட்டை இலைச் சின்னத்தை மீட்க இ.பி.எஸ்.- ஓ.பி.எஸ். டில்லி பயணம்

(சென்னை)

இரட்டை இலைச் சின்னத்தை மீட்கும் விவகாரம் தொடர்பாக இ.பி.எஸ். மற்றும் ஓ.பி.எஸ். அணியினர் நேற்று டில்லிக்கு புறப்பட்டு சென்றனர்.

அ.தி.மு.க.வில் பிளவு ஏற்பட்டதால் 45 ஆண்டுகளாக அக்கட்சியின் அதிகார பூர்வ சின்னமாக இருந்த இரட்டை இலைச்சின்னத்தை தேர்தல் ஆணையம் முடக்கியது. சின்னத்தை பெறுவதற்காக அ.தி.மு.க. அணிகள் சார்பில் பிரமாண பத்திரங்கள் உட்பட பல்வேறு ஆவணங்கள் தேர்தல் ஆணையத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், இரட்டை இலைச் சின்னத்தை மீட்பது தொடர்பாக இ.பி.எஸ். மற்றும் ஓ.பி.எஸ் அணியினர் நேற்று டில்லி சென்றனர்.

கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக் குழுவில் இரட்டை இலைச் சின்னத்தை மீட்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் தொடர்ச்சியாகவே இ.பி.எஸ். மற்றும் ஓ.பி.எஸ். அணியினர் நேற்று டில்லி புறப்பட்டு சென்றனர்

அமைச்சர் ஜெயகுமார், கே.பி.முனுசாமி, உதயகுமார், மனோஜ்பாண்டியன் உட்பட பலர் நேற்று புறப்பட்டனர்.

அவர்கள் இரட்டை இலைச் சின்னத்தை மீட்பது தொடர்பாக தேர்தல் ஆணையத்தில் முறையிடவுள்ளனர். இதுதொடர்பாக அவர்கள் இன்று தேர்தல் அதிகாரிகளை சந்திக்கவுள்ளனர் என அ.தி.மு.க. வட்டாரம் தெரிவித்துள்ளது. (8)

# பிரித்தானி...

## திலீபனுக்கு...







(லண்டன்)

பிரித்தானியாவில் தமிழர்கள் தமது வீடுகளில் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்தை வைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

கடந்த காலங்களைப் போல் அல்லாது இவ் ஆண்டு புதிய முயற்சியும் எழுச்சியும் கொண்டு தமிழ் மக்கள் யுகத்தில் முன்பு எப்படி தமது வீடுகளில் தியாக தீபம் திலீபனுக்கு சிறு கொட்டகை அமைத்து படம் வைத்து

# குண்டு வெடிப்பி...



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையோரப் பகுதியில் நேற்று முன்தினம் வீதியோரத்தில் கிடந்த குண்டு வெடித்ததில் பாதுகாப்பு படையை சேர்ந்த 6 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையோரப் பகுதியான பழங்குடியினர் அதிகம் வாழும் தெஹ்சில் மாமோண்ட் அருகே பாகிஸ்தான்

# வெளிநாடு



னியாவில்
கு அஞ்சலி



மலர் மாலை அணிவித்து தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினரோ அதே போல் இங்கும் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

இது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வையும், எழுச்சியையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இது போன்று அதிகளவான வர்த்தக நிலையங்களிலும் திலீபனின் படங்கள் வெளிப்புறமாக ஒட்டப்பட்டிருப்பதை காண முடிகிறது. (8)

## ப்பில் 6 பேர் பலி



நாட்டு பாதுகாப்பு படையினர் நேற்று முன்தினம் வழக்கம்போல் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

டாங்கி என்ற இடத்தில் வீதியோரத்தில் தீவிரவாதிகள் மறைத்து வைத்திருந்த சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் பாதுகாப்பு படையை சேர்ந்த 6 பேர் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலுக்கு தெஹ்ரீக்-இ-தலிபான் தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. (3-8)

# தாக்குதலை தடுத்து நிறுத்த சூகிக்கு கடைசி வாய்ப்பு

## ஐ.நா. பொதுச்செயலாளர் எச்சரிக்கை

(நியூயோர்க்)

ரோஹிஞ்யா முஸ்லிம்கள் மீதான இராணுவ தாக்குதலை தடுத்து நிறுத்த மியன்மாரின் நடை முறைத் தலைவர் ஆங் சான் சூகிக்கு இதுவே கடைசி வாய்ப்பு என ஐ.நா. பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் பொலிஸார் மீது கடந்த மாதம் 25ஆம் திகதி ரோஹிஞ்யா முஸ்லிம் கிளர்ச்சியாளர்கள் (அர்சா) தாக்குதல் நடத்தி, 12 பேரை கொன்றனர்.

அதைத் தொடர்ந்து, ராக்கின் மாகாணத்தில் இருந்து வந்த அந்த இன மக்கள் மீது இராணுவமும், புத்த மதத்தினரும் தாக்குதல் நடத்தினர்.

அதைத் தொடர்ந்து உயிர் பிழைப்பதற்காக சுமார் 4 இலட்சம் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் பங்களாதேசத்துக்கு சென்று தஞ்சம் அடைந்தனர்.

இந்நிலையில் இப் பிரசசினை குறித்து பேசிய ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் ஆன்டனியோ குட்டரெஸ், "பல இலட்சம் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் மியன்மாரை விட்டு வெளியேறுவதற்கு வழிவகுத்துள்ள இராணுவ தாக்குதல்களை தடுத்து நிறுத்துவதற்கு மியன்மாரின் நடைமுறைத் தலைவர் ஆங் சான் சூகிக்கு இதுவே கடைசி வாய்ப்பு" என எச்சரித்தார்.



மேலும் அவர் கூறும்போது, "இப்போதைய நிலைமையை அவர் மாற்றாவிட்டால், அங்கு நடக்கப்போகிற சோகம் மிகவும் பயங்கரமானதாகி விடும். எதிர்காலத்தில் இப் பிரச்சினை மாறுவதற்கு வாய்ப்பு இருப்பதாக நான் கருதவில்லை" என்றும் குறிப்பிட்டார். (3-8)

# ரோஹிஞ்யா முஸ்லிம்களுக்காக பங்களாதேஷில் 14000 புதிய முகாம்கள் அமைப்பு

(டாக்கா)

பங்களாதேசத்தில் தஞ்சமடைந்து வரும் ரோஹிஞ்யா அகதிகள் எண்ணிக்கை 4 இலட்சமாக உயர்ந்துள்ளதால், அவர்களுக்கு 14000 முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


மியன்மாரில் இராணுவ நடவடிக்கைகள் தொடங்கிய நாளில் இருந்து சுமார் 3.70 லட்சம் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் அங்கிருந்து வெளியேறி அண்டை நாடான பங்களாதேஷத்தில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர்.



இந்நிலையில், பங்களாதேசத்தில் ரோஹிஞ்யா அகதிகளின் எண்ணிக்கை 4 இலட்சமாக உயர்ந்துள்ளது. அதனால் அவர்களுக்காக 14000 முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரோஹிஞ்யா அகதிகள் மீண்டும் அவர்களது நாட்டுக்கு திரும்பும்வரை அந்த முகாம்களில் தான் தங்க வேண்டும். வீதி, ரயில் மற்றும் நீர் வழியாகவோ ஓரிடத்தில் இருந்து மற்ற இடத்துக்கு செல்ல அவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என தெரிவித்துள்ளனர். (3-8)

# துணை இராணுவத்தினர் 15 பேர் மொசூலில் பலி



(பக்தாத்)

மொசூல் நகரில் துணை இராணுவத்தினருக்கு பயிற்சி அளிப்பதற்கு பயன்படுத்தப்படும் பாடசாலைக் கட்டடத்தில் நேற்று முன்தினம் பயங்கர சத்தத்துடன் ஒரு குண்டு வெடித்தது. இந்த குண்டுவெடிப்பில் சிக்கி துணை இராணுவத்தினர் 12 பேர் உட்பட 15 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.


23 பேர் படுகாயம் அடைந்தனர். படுகாயம் அடைந்தவர்கள் அங்கிருந்து மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (3-8)

# ருமேனியாவில் புயல் தாக்கி 8 பேர் பலி

(புகாரெஸ்ட்)

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ருமேனியாவில் நேற்று முன்தினம் கடும் புயல் தாக்கியதில் 8 பேர் பலியாகியுள்ளனர். இந்நிலையில் மின்சாரம், குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

## மின்சாரம், குடிநீர் விநியோகம் துண்டிப்பு



ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ருமேனியாவில் நேற்று முன்தினம் கடும் புயல் தாக்கியது. இதில் திமி சோயரா நகரம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

அங்கு மணிக்கு 100 கி.மீ. வேகத்தில் சூறைக் காற்று வீசியது. மழையும் கொட்டியது. புயல் மழையில் ஏராளமான மரங்கள் வேரோடு சாய்ந்தன. வீடுகளின் கூரைகள் காற்றில் பறந்தன.

தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது. மின்சாரம், குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டது. மின்சாரம் இல்லாததால் திமி சேநாயரா நகரம் இருளில் மூழ்கியது.

புயல் மழைக்கு இது வரை 8 பேர் பலியாகி உள்ளனர். 67 பேர் காயம் அடைந்தனர். அவசர உதவியில் மீட்புக்குழுக்கள் ஈடுபட்டுள்ளன.

வீடுகளை விட்டு பொது மக்கள் வெளியேற வேண்டாம் என்றும் மரங்கள் மற்றும் மின்சார கம்பங்கள் அருகே நிற்க வேண்டாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளனர். (3-8)

# மைத்திரிக்கு எதிராக தமிழீழ அரசு போராட்டம்

## நியூயோர்க்கில் இன்று ஏற்பாடு

(கொழும்பு)



நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் 72ஆவது பொதுச்சபைக் கூட்டத்தொடரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று உரையாற்றவுள்ள நிலையில் அவருக்கு எதிராகப் போராட்டம் ஒன்றை நடத்த நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது,

"இலங்கை அரசாங்கம் ஒரு குற்றவாளி என்ற தொனிப் பொருளில் இலங்கை அரச தலைவர் மைத்திரியின் ஐ.நா உரைக்கு எதிரான மக்கள் போராட்டமொன்று நியூயோர்க்கில் இடம்பெறவுள்ளது.


ஐ.நா. பொதுச்சபையின் வருடாந்தக் பொதுக்கூட்டத்தில் பங்கெடுக்கும் இலங்கையின் அரசத் தலைவர், இன்று 19ஆம் திகதியன்று உரை நிகழ்த்தவுள்ளார்.

இந்நிலையில், மைத்திரியின் உரை இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சமவேளை, இலங்கை ஆட்சியாளர்களை குற்றவாளிக் கூண்டில் ஏற்றும் வகையில் மக்கள் போராட்டமொன்றினை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இப்போராட்டத்தில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் பங்கெடுத்து அனைத்துலக அரங்கில் இலங்கை அரசு ஒரு குற்றவாளி என்ற தொனிப்பொருளில் அதன் குற்றங்களை பட்டியலிடவுள்ளார். (இ-7)

# இனபேதங்களுடன் தான் அரசியல்

## ஜே.வி.பி. மாநாட்டில் சந்திரசேகரன் குற்றச்சாட்டு



இந்த நாட்டில் அரசியல் நிலைமை இனங்களுக்கான, கலாசாரங்களுக்கான பேதத்துடன் இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் இந்நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு பதில் கூறும் நிலைக்கு அரசியல்வாதிகளின் நிலைமை சென்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில் மக்கள் விடுதலை முன்னணி எதிர்கால சந்ததியினருக்காக இந்த அரசியல் நிலைமையில் தக்க பதிலை கொடுக்கும் என மக்கள்விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

நுவரெலியா நகர் மத்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற "ஊக்கமுள்ள பிரஜைகள்" மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# 20-வது திருத்தச்சட்டம் தொடர்பாக திட்டமிட்டபடி விவாதம் நடக்குமாம்

## அமைச்சர் அமரவீர கூறுகிறார்



(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல்களை ஒரே நாளில் நடத்துவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தச் சட்டவரைவு, திட்டமிட்டபடி நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

20 ஆவது திருத்தச் சட்டவரைவின் சட்டபூர்வ தன்மை குறித்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை, சபாநாயகர் கரு ஜெயசூரிய இன்று நாடாளுமன்றத்தில் அறிவிப்பார்.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்று அமைந்திருந்தால் மறுநாள் திருத்தச்சட்ட வரைவு தொடர்பான விவாதம் நடத்தப்படும்.

பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியிருந்தால், கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி முடிவெடுக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## நினைத்து நினைத்துப் பேசுகிறீர்களா?

10 மணிக்கு ஒன்றை சொல்வது; 10.01க்கு வேறு ஒன்றை சொல்வது; 10.02 க்கு புதிதாக ஒன்றைச் சொல்வது 10.03 முதலில் சொன்னதை மறுபடி சொல்வது என்று நம்மில் பல சொதப்பல் மன்னர்கள் இருக்கிறார்கள். எண்ணத்திலும் குழம்பி செயலிலும் குழப்படி செய்து தானும் குழம்பி மற்றவர்களையும் குழப்புகிறவர்களால் எழக்கூடிய பிரச்சினை ஒன்றா இரண்டா?

வலப்பக்கம் திரும்பினால் திருச்சி, இடப்பக்கம் திரும்பினால் மதுரை, இப்படிப்பட்ட முக்கியமான சந்திப்பில் வண்டி ஓட்டுகிறவர் சட்டென்று வண்டியை இடப்புறம் திருப்பி அப்புறம் மனத்தை மாற்றிக்கொண்டு மறுபுறம் வலப்புறம் திருப்பி சேச்சே வேண்டாம் என்று திரும்பவும் இடப்புறம் திரும்பினால் என்னவாகும். அந்த வாகனத்தை கவனிப்பவர்கள் அந்த ஓட்டுநரை பற்றி என்ன எண்ணுவார்கள் என்பது இரண்டாம் பட்சமாக இருக்க அந்த ஓட்டுநரது செயல் விபத்தில் அல்லவா போய் முடிந்துவிடும்!

எந்தப்பக்கம் திரும்புவது என்று புறப்படுவதற்கு முன்பே அல்லவா சிந்திக்க வேண்டும்? குறைந்தபட்சம் 100 அடி முன்பே முடிவெடுத்திருக்க வேண்டாமா? கடைசி நிமிடத்தில் இந்த அலம்பு அலம்பினால் வீதியில் மட்டுமல்ல வாழ்க்கையிலும் நட்டம் என்கிற விபத்தை மட்டுமே சந்திக்க நேரிடும். மனத்திற்குள் எப்போதுமே ஆயிரம் போராட்டங்கள் இருக்கத்தான் செய்யும். அவற்றை அவ்வப்போது வெளியிட்டால் சொதப்பல் மன்னர் என்றும் குழப்படி அரசி என்றும் தான் பெயர் மிஞ்சும்.

நினைத்து நினைத்து பேசுவதைத் தவிர்க்க சில வழிமுறைகள் உள்ளன. இவற்றை தெரிந்து கொள்வது நமக்கு நல்லது.

முதலாவது தோன்றுகின்ற கருத்தையெல்லாம் உடனுக்குடன் தீர்மானமாக பேசிவிடாமல் தீர்மானத்திற்கு வந்த பிறகே எது ஒன்றையும் வெளியே சொல்ல வேண்டும்.

சிந்திக்கும் ஒன்றையும் காரண காரியத்தோடு சிந்திக்கவேண்டும். மைனஸ் மற்றும் பிளஸ் பொயிண்டுகளை நன்கு அலசி ஆராய வேண்டும். ஐயையோ! அதை நினைக்கவே இல்லையே, இதை நினைக்கவே இல்லையே! என்றெல்லாம் ஞாபகப்படுத்திக் கொண்டால் நினைத்து நினைத்து தான் பேச வேண்டி வரும்.

எந்த ஒரு முடிவையும் வெளியிடுவதற்கு அவசரப்படக்கூடாது. மற்றவர்கள் அவசரப்படுத்தினால் கூட கொஞ்சம் அவகாசம் கொடுங்க யோசிச்சு சொல்லுறேன் என்று சொல்லி விட்டு மனதிற்குள் இருந்த தராசு தட்டை செயற்படவைக்க வேண்டும்.

நினைத்து நினைத்துப் பேசினால் நமக்கு நம் வீட்டிலும் தொழில் செய்யும் இடத்திலும் சமூகத்திலும் மதிப்பு இருக்காது. மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று கவலைப்படாதவர்கள் தாம் இப்படி நினைத்து நினைத்துப் பேசுவார்கள்.

எடுத்த முடிவில் பின்வாங்கவே கூடாது என்று நான் வாதிட வரவில்லை. நாம் சொல்லியதில் நாமே முரண்படும் போது அதற்கு நியாயமான காரணம் இருப்பதாக மற்றவர்கள் நம்ப இடமிருக்க வேண்டும்.

மனம் ஆரம்பத்தில் ஆயிரம் நினைக்கலாம் அதையெல்லாம் வெளியிட வேண்டும் என்கிற அவசியம் என்ன?

தவணை முறையில் சிந்தித்துப் பலமுறை நினைத்து நினைத்துப் பேசுவதைவிட பலமுறை சிந்தித்து ஒரே கருத்தை வெளியிட்டு அதை ஒட்டிச் செயற்படுவதுதான் பாராட்டுக்குரியது!

**லேனா தமிழ்வாணன்**

# சில் ஆடை மோசடியில் தேரர்களும் தொடர்பா?

## ஜே.வி.பி.சந்தேகம்



(கொழும்பு)

சில் ஆடை விநியோக மோசடி நடவடிக்கையின் பின்னால், பிரதான பிக்குகள் சிலரும் இருக்கின்றார்களா? என்ற சந்தேகம் தற்பொழுது எழுந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

என்னிடம் காசோலைகள் பல உள்ளன. இருப்பினும், தேரர்களின் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டிலுள்ள தேரர்கள் லலித் வீரதுங்கக்கள் போனறோர் சிறை சென்றதற்காக வீதியில் இறங்கவில்லை. சில் ஆடையை அவர்களும் விநியோகித்தார்கள் என்பதற்காக வீதியில் இறங்கியுள்ளனர்.

ஏனெனில், இன்னும் கொஞ்சக் காலம் செல்லும் போது காவியுடையையும் தேர்தல் இலஞ்சமாக விநியோகிக்க ஆரம்பிப்பார்கள். புத்தபெருமானின் பல லையும் தேர்தல் இலஞ்சமாக கொடுக்க முற்படுவார்கள் எனவும் அநுரகுமாரதிஸாநாயக்க எம்.பி. மேலும் குற்றம் சாட்டியுள்ளார். தேரர்களின் போராட்டம் குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# எம்.பிக்கள் எவருமின்றி ஐ.நா. சென்ற ஜனாதிபதி

(கொழும்பு)



அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் உள்ளடக்கப்படவில்லை என்று அரசாங்க வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மாகாணசபைத் தேர்தல்களை ஒரே நாளில் நடத்தும் வகையில், முன்வைக்கப்பட்டுள்ள அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டே, ஜனாதிபதியின் ஐ.நா. பயணக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் உள்ளடக்கப்படவில்லை.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்கள், தாம் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு ஆதரவாக வாக்களிக்கமாட்டோம் என்று எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்த திருத்தச்சட்ட வரைவை நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

### சரத் பொன்சேகா, ரஞ்சன் ராமநாயக்க போன்று

# தமிழர்களோ, முஸ்லிம்களோ மகா சங்கத்தினரை இவ்வாறு திட்டியதில்லை - குமாரவெல்கம கவலை

(கொழும்பு)




அமைச்சர்களான சரத் பொன்சேகா மற்றும் ரஞ்சன் ராமநாயக்க ஆகியோர் பௌத்த மகா சங்கத்தினருக்கு எதிராக பேசியது போன்று இந்நாட்டிலுள்ள எமது தமிழ் சமூகத்திலுள்ளவர்களோ, முஸ்லிம் சமூகத்திலுள்ளவர்களோ வரலாற்றில் எப்போதும் பேசியதில்லையென முன்னாள் அமைச்சரும் தற்போதைய மகிந்த சார்பு குழு பாராளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம தெரிவித் தார்.

அவர்கள் கூறிய வசனங்களை எனது வாயால் கூறுவதற்கு நான் விரும்பவில்லை.

என்னுடைய பெயருக்கும் அபகீர்த்தி ஏற்பட்டு விடும் எனவும் குமார வெல்கம எம்.பி. தெரிவித்தார்.

அமைச்சர் சரத் பொன்சேகா, பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க ஆகியோருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்கள் குறித்து கொழும்பு ஊடகம் ஒன்று கேள்வியை முப்பிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# அடுத்த கூட்டத்தில் தீர்க்கமான முடிவு



உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்த முடிவை அடுத்த கூட்டத்தில், அறிவிப்போம் என, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸிக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல், கொட்டகலை காங்கிரஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில், அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமான், இ.தொ.கா தலைவர் முத்து சிவலிங்கம், மத்திய மாகாண அமைச்சர் ராமேஸ்வரன், ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான், மத்திய மாகாண சபை உறுப்பினர் மதியுகராஜா, தேசிய அமைப்பாளர் ராஜதுரை ஆகியோர் கலந்துகொண்டனர்.

இது தொடர்பில், இ.தொ.கா தலைவர் முத்து சிவலிங்கம், கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு கூறினார். (இ-7)

# ஆணைக்குழு முன்னிலையில் அர்ஜுன் மகேந்திரன் இன்று ஆஜர்

முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை ஆணைக் குழுவுக்கு அழைக்க தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் இன்று 19ஆம் திகதி அவரை பிணைமுறி மோசடி தொடர்பில், விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு வருமாறு அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. இந் நிலையில் குறித்த விவகாரம் தொடர்பில் இன்று அர்ஜுன மகேந்திரன் ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.



கடந்த திங்கட்கிழமை பிணைமுறி மோசடி தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவில், பதில் சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல டி லிவேரா, அர்ஜுன மகேந்திரனையும் அர்ஜுன் அலோஸியஸையும் ஆணைக்குழுவில் ஆஜர் செய்யும் வரை மக்கள் எதிர்பார்த்திருப்பதாக கூறியிருந்தார்.

அதன்பின்னர் இடம்பெற்ற சட்ட வாதங்களின் பின்னர் அர்ஜுன், அலோஸியஸ் தான் சாட்சியம் வழங்க விரும்பவில்லை என அறிவித்திருந்தார். இந்நிலையில் தற்போது அர்ஜுன மகேந்திரனை ஆணைக்குழுவுக்கு அழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் அவர் சாட்சியமளிப்பாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

அர்ஜுன் மகேந்திரன் ஆணைக்குழுவின் அறிவித்தல் பிரகாரம் ஆஜராகாமல் இருந்தால் ஆணைக்குழு தமக்குள்ள அதிகாரத்தின் பிரகாரம் செயற்படும் என ஆணைக்குழு தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், பெர்ப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோஸியஸ் நேரடியாக தான் அறிந்தவற்றை சாட்சியமாக வழங்க வேண்டும். இதுவே எமது அபிப்பிராயம். எனினும் அர்ஜுன் அலோஸியஸ் அவை தொடர்பில் கணடிப்பாக சாட்சியம் அளிக்க வேண்டும் என நாம் அவரை கட்டாயப்படுத்த முடியாது. அவர் சாட்சியம் அளிக்க மறுத்தாலோ அல்லது விருப்பமின்மையை வெளிப்படுத்தினாலோ ஆணைக் குழுவானது தான் சேகரித்துள்ள சாட்சியங்களின்படி அடுத்த கட்ட நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்து செல்லும் என பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழு கடந்த வாரம் தீர்ப்பு வழங்கியது. இந்த தீர்ப்பை முன்னிறுத்தி அர்ஜுன் மகேந்திரனும் செயற்படலாம் என நம்பப்படும் நிலையில் அவ்வாறு இடம்பெற்றால் அது ஆணைக்குழு விசாரணைக்கு மேலும் தடங்கல்களை ஏற்படுத்தும்.

எனினும் விரும்பினால் சாட்சியம் வழங்கலாம் என்ற ஆணைக்குழுவின் தீர்ப்பானது முற்றிலும் தவறானது என பதில் சொலிசிட்டர் ஜெனரல் தப்புல டி லிவேரா சுட்டிக்காட்டும் நிலையில் ஆணைக்குழுவின் குறித்த தீர்ப்புக்கு எதிராக சட்டமா அதிபருடன் உடனடியாக கலந்துரையாடி, அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (இ-7)

# கிழக்குப் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக் கழக வந்தாறுமூலை வளாகத்தில் கடந்த 3 மாதங்களாக நிலவிய அசாதாரண சூழ்நிலை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து கிழக்குப் பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று 19 ஆம் திகதி ஆரம்பமாகுமென பிரதி உப வேந்தர் வைத்திய கலாநிதி கே. ஈ. கருணாகரன் அறிவித்துள்ளார்.

இதேவேளை முதலாமாண்டு, இரண்டாமாண்டு, மூன்றாமாண்டு மாணவர்களின் அனைத்து கல்வி நடவடிக்கைகளும் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த 08.09.217 அன்று கிழக்குப் பல்கலைக்கழகப் பேரவை மத்தியஸ்த குழு மற்றும் மாணவர் பிரதிநிதிகள் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற முத்தரப்புப் பேச்சுவார்த்தையின் பலனாக அனைத்துத் தரப்பினரும் தீர்மான அடிப்படையில் சுமுகமான முடிவை எட்டியதையடுத்து பல்கலைக்கழகம் கல்வி நடவடிக்கைகளுக்காக மீண்டும் திறக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையில் இரகசிய சந்திப்புகளில் உலகத் தமிழர் பேரவைத் தலைவர்

(கொழும்பு)

உலகத் தமிழர் பேரவையின் தலைவர் இரகசிய சந்திப்புகளை மேற்கொண்டுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையில் நடந்த போர்க்குற்றங்களை சர்வதேச மயப்படுத்தியதில் உலகத் தமிழர் பேரவைக்கு முக்கிய பங்குண்டு.

அதன் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல், மனித உரிமைகள் ஆர்வலர் யஸ்மின் சூக்கா உள்ளிட்ட சர்வதேசத்தின் முக்கிய புள்ளிகளுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளார். அதே போன்று விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய உறவையும் கொண்டுள்ளார்.

கடந்த 1997ஆம் ஆண்டு தொடக்கம் அருட்தந்தை இம்மானுவேல் ஜேர்மனியில் வசித்து வருகின்றார்.

இந்த நிலையில் கடந்த வாரம் மிக இரகசியமான முறையில் இலங்கை வந்துள்ள அவர் அரசாங்கத்தின் முக்கிய தரப்புகளான சுதந்திரக் கட்சி மற்றும் ஐ.தே.க ஆகியவற்றின் முக்கியஸ்தர்களை சந்தித்துள்ளார்.

அத்துடன் வட மாகாணத்தின் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் அவர் இரகசிய சந்திப்புகளை மேற் கொண்டுள்ளதாகவும் குறித்த செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# புதிய உள்ளூராட்சித் தேர்தல் முறையும் சிறிய கட்சிகளது சிறுபான்மை அரசியல் கட்சிகளது நிலைப்பாடுகளும்




பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லிம் தலைவர்களால் புதிய உள்ளூராட்சி சபைகளுக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளன. திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற அங்கத்தவர் மகறூப் திருகோணமலை நகரை நகரசபை அந்தஸ்தில் இருந்து மாநகர சபை அந்தஸ்திற்கு உயர்த்த வேண்டும் என்றும் மூதூர் கந்தளாய் நகர் முன்னர் பட்டண சபையாக இருந்து இன்று பிரதேச சபைகளின் பகுதிகளாக இருக்கின்றன.

இதனால் இவ்விரு நகர்கள் நகரசபை அந்தஸ்திற்கு உயர்த்தப்படவேண்டும் என்றும் குச்சவெளிப் பிரதேச சபை புல்மோட்டை, குச்சவெளி என இரண்டு பிரதேச சபைகளாகவும் பிரிக்கப்படவேண்டும் என்றும் உப்புவெளி பிரதேச சபை உப்புவெளி, குடாக்கரை பிரதேச சபைகளாக பிரிக்கப்பட வேண்டும் என்றும் மூதூர் பிரதேச சபை மூன்றாகப் பிரிக்கப்பட வேண்டும் என்றும் அதாவது மூதூர் நகரசபை, கட்டைப்பறிச்சான் பிரதேச சபை, தோப்பூர் பிரதேச சபை என பிரிக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளன.

மேலும் கிண்ணியா பிரதேச சபை, கிண்ணியா கச்சக்கொடித்தீவு பிரதேச சபைகளாகப் பிரிக்கப்படவேண்டும் என்றும் தம்பலகாமம் பிரதேச சபை தம்பலகாமம் முள்ளிப் பொத்தானை, கல்மட்டியா பிரதேச சபைகளாகப் பிரிக்கப்பட வேண்டுமென் கருத்துக்கள், கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. 1980களில் திருகோணமலை மாவட்டத்தில் 23 உள்ளூராட்சி சபைகள் இருந்தன. ஆனால் இன்று 13 உள்ளூராட்சி சபைகளே இருக்கின்றன. திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி கட்டமைப்பில் சிங்கள மக்கள் நல்ல நிலையிலும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் பின்தங்கிய நிலையில் இருப்பதாக கவலைப்படுகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை மாநகர சபைக்குள் இருக்கும் சாய்ந்தமருது, மாநகர சபையாக இருந்து பிரிந்து தனியான நகர சபையாக வேண்டி நிற்கின்றது. இவர்களது கோரிக்கையை பிரதமர், மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சர் மற்றும் முஸ்லிம் தலைவர்கள் எல்லோரும் ஏற்றுக்கொண்ட பொழுதும் தாமதம் ஏற்பட்டுள்ளது. இன்னும் சிறிது காலத்தில் இதற்குத் தீர்வு கிட்டும். கல்முனைத் தமிழ்ப்பிரிவு பிரதேச செயலகப் பிரிவை. தரமுயர்த்தியும் தனியான உள்ளூராட்சி அமைப்பு வேண்டியும் கல்முனை தமிழர்களின் போராட்டம் தொடர் கதையாக இருக்கின்றது. இப் பிரச்சினைக்கும் ஒரு தீர்வு கிட்டவேண்டும். இது போல சம்மாந்துறை நகரை நகர சபையாக தரமுயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையும் நீண்ட காலமாகக் கிடப்பில் கிடக்கின்றது.




மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று மத்தி, கோரளைப்பற்று மேற்கு, கோரளைப்பற்று ஆகிய மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளில் கோரளைப்பற்றும் கோரளைப் பற்று மத்தியும் ஒரு பிரதேச சபைக்குள் இருக்கின்றன. இதனால் கோரளைப் பற்று மேற்கிற்கு தனியான பிரதேச சபை அமைக்க வேண்டியுள்ளது. மேலும் களுவாஞ்சிக்குடி, செங்கலடி நகர்ப்பகுதிகள் தனி நகர சபைகளாக மாற்றப்படவேண்டும் என்பது மட்டக்களப்பு தமிழ்மக்களின் முக்கிய கோரிக்கைகளாக இருக்கின்றன.

வடக்கு மாகாணத்தில் நான்கு பிரதேச செயலகங்களான மருதங்கேணி, கண்டாவளை, ஒட்டுசுட்டான், மடு ஆகியனவற்றிற்கு தனித்தனியான பிரதேச சபைகள் அமைப்பது மிகவும் முக்கியமாகும்.

வடக்கு மாகாணத்தில் இருக்கும் வெலிஓயா பிரதேச செயலகப் பிரச்சினையும் இதனோடு இணைந்த உள்ளூராட்சி அமைப்பு ஒழுங்கு சட்ட ரீதியாக ஒழுங்குபடுத்தப்படவேண்டும். வெலிஓயா பிரதேச செயலகம் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் ஒரு சிறு பகுதியாகவும் வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் தென் பகுதியை உள்ளடக்கியதாக இருக்கின்றது. ஒரு பிரதேச செயலகம் இரண்டு நிர்வாக மாவட்டப் பரப்புக்களை உள்ளடக்குவது ஒழுங்கில்லை. பிரதேச சபை ஒழுங்கமைப்பில் முல்லைத்தீவுக்குள் வரும் சம்பத்நுவர பகுதி கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குள் ஒரு வட்டாரமாக இருக்க வவுனியா பிரதேச சபைக்குள் வெலிஓயா பகுதி நான்கு வட்டாரங்கள் வவுனியா வடக்கு பிரதேச சபைக்குள் வருகின்றது. வவுனியா வடக்கு பிரதேச சபைக்குள் வரும் 4 வெலிஓயா வட்டாரங்களை தனியானதொரு பிரதேச சபையாக மாற்ற வேண்டும் அல்லது வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச சபையுடன் இணைக்கவேண்டும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு நகர்கள் பெரிய நகர்களாகவும் மாவட்ட நிர்வாக மையமாகவும் இருப்பதால் நகரசபையாக தரமுயர்த்தப்படவேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்விரு நகர்களும் பட்டண சபை அந்தஸ்தை முன்னர் பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விரு நகர்களைத் தவிர யாழ்ப்பாண மாவட்டத்தில் மானிப்பாய், சுன்னாகம், சங்கானை, நெல்லியடி நகர்களுக்கு நகர சபை அந்தஸ்து உயர்த்தப்பட வேண்டும் என்ற மக்களின் கோரி க்கை நீண்ட நாட்களாக கிடப்பில் உள்ளது.

தென்மராட்சி கிழக்கு (கொடிகாமம்) அக்கராயன், முழங்காவில்- பல்லவராயன்கட்டு, கந்தவுடையார் பூவரசன்குளப் பகுதி ஆகியன்வற்றுக்குத் தனியான பிரதேச செயலகப் பிரிவுகள் கோரப்பட்டுள்ளன. இவைகள் சாத்தியமாகும்போது பிரதேச சபைகள் அமைக்கப்படல் வேண்டும்.

வடக்கு- கிழக்கு மாகாணங்கள் மற்றும் நுவரெலியா மாவட்ட நிலைகள் இங்கு தரப்பட்டுள்ளன. இதுபோல ஏனைய 7 மாகாணங்களிலும் பல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு தனியான பிரதேச சபைகள் இல்லாமல் இருக்கின்றன. குறிப்பாக புத்தளம் மாவட்டத்தில் முந்தல் பிரதேச செயலகப் பிரிவு, மாத்தறை மாவட்டத்தில் வெலிப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவு ஆகியவற்றுக்கு தனியான பிரதேசசபை கள் இல்லை. மேலும் பல நகர்களுக்கு நகர சபை அந்தஸ்தும் சில நகர சபைகளுக்கு மாநகர அந்தஸ்தும் தரமுயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் பல நீண்ட காலமாக மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சில் கிடக்கின்றது. இவ்விடயங்களில் முன்னேற்றம் ஏற்படாததே உள்ளூராட்சி விடயத்தில் சிறுபான்மையினக் கட்சிகளின் குறிப் பாக மலையக தமிழ்க் கட்சிக ளிலும் முஸ்லிம் கட்சிகளிலும் விமர்சனத்திற்குட்பட்டது. (தொடரும்)

# சைட்டம் கல்லூரி பட்டத்தை பிரிட்டன் நிராகரித்தது ஏன்?

(கொழும்பு)

இலங்கை தனியார் மருத்துவக் கல்லூரியான சைட்டத்தின் பட்டப்படிப்பை பிரித்தானிய வைத்திய சபை ஏற்றுக் கொள்வதில்லையென விடுத்திருந்த அறிவிப்புக்கான காரணம் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள வைத்திய சபை சைட்டத்தை அங்கீகரிக்காமையே பிரித்தானியாவின் புறக்கணிப்புக்குக் காரணம் என தெரியவந்துள்ளது.


சைட்டம் மருத்துவக் கல்லூரியை அங்கீகரிப்பது தொடர்பில் மீண்டும் கருத்தில் கொள்ள வேண்டுமானால், இலங்கை மருத்துவ சபையின் அங்கீகாரம் சைட்டத்துக்கு கிடைக்கப் பெறல் வேண்டும் எனவும் பிரித்தானிய மருத்துவ சபை நிபந்தனை விடுத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி பிரித்தானிய மருத்துவ சபையின் தடைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

பிரித்தானிய மருத்துவ சபையினால் ஏற்றுக் கொள்ளப்படாத மருத்துவப் பட்டப்படிப்பு வழங்கும் பல நிறுவனங்கள் பட்டியலப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலிலேயே சைட்டம் மருத்துவக் கல்லூரியும் உள்வாங்கப்பட்டுள்ளது.

அதன்படி, பிரித்தானிய மருத்துவ சபையின் PLAB பரீட்சைக்கு முகங்கொடுக்கவோ, அந்நாட்டு மருத்துவ சபையில் பதிவு செய்யவோ குறித்த பட்டியலில் காணப்படும் நிறுவனங்களினால் வழங்கப்படும் பட்டப்படிப்பு ஒரு தகைமையாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியில் பட்டப்படிப்பு மேற்கொண்ட மாணவர் ஒருவர் பிரித்தானியாவின் PLAB பரீட்சைக்கு முகங்கொடுக்க விண்ணப்பித்துள்ள அதே வேளை, குறித்த விண்ணப்பத்தை அந்நாட்டு மருத்துவ சபை நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




# புதிய பணிமனைக்கு அடிக்கல் நாட்டல்




(கொழும்பு)

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிலவசென திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவின் மீசாலை வடக்கு கிராம சேவையாளர் பிரிவுக்கான கிராம சேவையாளர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்,சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களுக்கான இணைந்த புதிய பணிமனை கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் மீசாலை வடக்கு சுடர்ஒளி சன சமூகநிலையத் தலைவரும் சமாதான நீதவானுமான யோ.தயாபரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச செயலர் திருமதி தேவந்தி பாபு, சிறப்பு விருந்தினராக மீசாலை நடராச வீரகத்தி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை தலைவரும் நில அளவையாளருமான க.கனகசபை, கௌரவ விருந்தினர்களாக மீசாலை வடக்கு கிராம சேவையாளர் இ.ரஜிதா, மீசாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் மா.மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு புதிய கட்டடத்திற்கான அடிக் கல்லை நாட்டி வைத்தனர். (இ-3)

# தகனக் கொட்டகை அமைப்பு




துன்னாலை கியான்காடு இந்து மயானத்திற்கு கொட்டகை அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. மேற்படி இந்து மயானத்தை துன்னாலை மற்றும் புலோலியின் ஒருபகுதி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இவ்வாறு காணப்படும் இந்துமயானத்திற்கு தகனக் கொட்டகை அமைக்கப்படாமையால் மாரிகாலங்களில் சடலங்களை எரிப்பதில் பெரும் தடங்கல் ஏற்பட்டு வந்தன. தற்போது தகனக் கொட்டகை அமைக்கும் பணி முழு வீச்சில் இடம்பெற்று வருகிறது. (இ-60)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1194

Search for people, places and things Nagendram Home

வைஸ்ணவி | காண்டீபன் | கமதினி








வசந்தி | ஜமுனா | கேசாயினி










நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்கும் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த

# பிக்போஸ்

## ரஜனியை பார்க்கும் போது எனக்கு பெருமையாக இருக்கிறது



பிக்போஸ் நிகழ்ச்சியில் கடந்த வாரம் வையாபுரி அவர்கள் வெளியேற்றப்பட்டார். பொதுவாக எலிமினேட் ஆகுபவர்கள் கமல்ஹாசனுடன் கலந்துரையாடி விட்டு தான் செல்வார்கள்.

அப்படி வையாபுரியும் கமல்ஹாசனுடன் சிறிது நேரம் கலந்துரையாடினார். அப்போது வையாபுரி, அண்மையில் தன் குடும்பத்துடன் ரஜினியை நேரில் சந்தித்தேன்.

அப்போது நான் உங்களுடன் நடித்த படங்களை பற்றி அவர் பேசினார் என்று கூறினார். உடனே கமல்ஹாசன் ரஜினி என்னுடைய படங்களை பார்த்தது தனக்கு பெருமையாக இருப்பதாக கூறியுள்ளார்.

## தீர்க்கமுடியாத சிக்கலை தீர்த்த கமல்ஹாசன்



நடிகர் கமல்ஹாசன் பிக்போஸ் வீட்டுக்குள் சென்று போட்டியாளர்களை சந்தித்தார். அப்போது சென்ற வாரம் கொடுக்கப்பட்ட டாஸ்குகளில் எது கஷ்டமாக இருந்தது என கேட்டார். அதற்கு அனைவரும் கயிறு சிக்கலை நீக்கும் போட்டி என கூறினர்.

போட்டியாளர்கள் யாரும் அந்த சிக்கலை நீக்கமுடியாத நிலையில் கமல் அதை சில நொடிகளில் செய்துவிட்டார். அதை பார்த்து போட்டியாளர்கள் ஷாக் ஆகிவிட்டனர்.

மேலும் சிநேகன் கோல்டன் டிக்கெட் வென்றுள்ள நிலையில், வையாபுரி வீட்டில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

## கமல் முன் ஜோக்கராக மாறிய சுஜா



பிக்போஸ் என்ற நிகழ்ச்சி முதலில் பிரபலமானதற்கு காரணம் கமல்ஹாசன். ஒவ்வொரு நாளும் பார்ப்பவர்களை விட சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கமல்ஹாசனை பார்ப்பதற்காகவே நிறைய பேர் நிகழ்ச்சியை பார்க்கின்றனர்.

இந்த நிலையில் கமல்ஹாசன் பிக்போஸ் வீட்டிற்குள் சென்று போட்டியாளர்களிடம் ஜாலியாக கலந்துரையாடுகிறார்.

வீட்டில் உள்ளவர்களை மிகவும் அன்புடன் கட்டியணைத்து பாசத்தை பொழிந்தார் கமல்.

## பிக்போஸ் குடும்பத்தை விட்டுவெளியேறிய வையாபுரி கண்ணீர் விட்டு அழுத பிந்து




பிக்போஸ் நிகழ்ச்சியிலிருந்து வையாபுரி வெளியேற்றப்பட்டதைக் கண்டு பிந்து மாதவி கண்ணீர் விட்டு அழுதுள்ளார்.

இன்னும், 15 நாட்கள் எஞ்சியிருக்கும் நிலையில், எலிமினேஷனிலிருந்து வையாபுரி வித்தியாசமான முறையில் வெளியேற்றப்பட்டுள்ளார்.

பிக்போஸ் நிகழ்ச்சியிலிருந்து வெளியேறிய பிறகு வழமையாக காட்டப்படும் குறும்படம் வையாபுரி வெளியேறும் முன்னர் காட்டப்பட்டது. அதற்கு வையாபுரி நன்றி கூறி விடைபெற்றார்.

அதனை அடுத்து அவரது தோழியான பிந்து மாதவி கண்ணீர்விட்டு அழுதார். கமல்ஹாசன் தொகுத்து வழங்கும் பிக்போஸ் நிகழ்ச்சியின் முதல் சீசன் முடிவடையும் நிலையிலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிக்போஸ் 2 இல் கலந்து கொள்ளும் பிரபலங்கள்



பிக்போஸ் நிகழ்ச்சியின் முதல் சீசன் இன்னும் சில நாட்களில் முடிவடைய உள்ளது. 100 நாட்களை எட்டவிருக்கும் நிலையில் அடுத்த சீசனுக்கான செலக்ஷன் நடைபெறுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

துருவங்கள் பதினாறு படத்தில் நடித்த யாஷிகா ஆனந்த் சமீபத்தில் ஒரு பேட்டியில் பேசிய அவர் "எனக்கு தமிழில் ஒளிபரப்பாகும் பிக்போஸ் ஷோவில் கலந்து கொள்ள அழைப்பு வந்தது, ஆனால் நான் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் நிச்சயம் இரண்டாவது சீசனில் கலந்து கொள்வேன் என யாஷிகா கூறியுள்ளார்.

மேலும் இதில் மாப்பிள்ளை சீரியல் புகழ் ஸ்ரீஜா, தெய்வமகள் புகழ் கிருஷ்ணா, பிரபல தொகுப்பாளினி DD, கலக்க போவது யாரு பாலா, நடிகை ரம்பா, சரவணன் மீனாட்சி புகழ் ரியோ மற்றும் ரச்சிதா, காமெடி நடிகர் வடிவேல் பாலாஜி, நடிகை சிநேகா, கலக்கப் போவது யாரு கதிர், நடிகை ரியமிக்கா, மைனா நந்தினி மற்றும் பிரபல வில்லன் ரியாஸ் ஆகியோர் கலந்துகொள்ள போவதாக தகவல் வெளியாகியுள்ளது. விரைவில் உறுதியான தகவல்களை எதிர்பார்க்கலாம்.

## மூன்று புள்ளிகளால் கோல்டன் டிக்கெட்டை தவறவிட்ட ஆரவ்




பிக்போஸ் வீட்டிற்குள் அதிரடியாக உள்ளே நுழையும் கமல்ஹாசனை வரவேற்று போட்டியாளர்கள் உச்சக்கட்ட மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளனர். இந்நிலையில் 39 புள்ளிகள் எடுத்த சிநேகன் கோல்டன் டிக்கெட்டினை பெற்று இறுதிச் சுற்றுக்கு நேரடியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதன் பின்பு 3 புள்ளிகள் வித்தியாசத்தில் ஆரவ் பிந்துமாதவி கோல்டன் டிக்கெட்டினை தவற விட்டுள்ளது தெரியவந்துள்ளது. ஆரவ், பிந்துமாதவி இருவரும் ஒரே புள்ளிகளை எடுத்திருப்பது தெரியவந்துள்ளது.

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2017-17.10.2017



## சொந்தங்கள் பகையாகலாம்

கவர்ச்சியாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்வதில் வல்லவர்களாக விளங்கும் துலாம் இராசி வாசகர்களே!

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசியில் குரு பகவான் சஞ்சரிக்கின்றார். ஜென்ம குருவாக இருந்தாலும் அதன் பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிவதால் அந்தந்த இடங்களுக்குரிய ஆதிபத்யங்கள் எல்லாம் நல்ல விதமாக நடைபெறும். எனவே பிள்ளைகளின் படிப்பு அல்லது பல நாட்களாக எதிர் பார்த்துக் காத்திருந்த வேலை, கல்யாணம் தொடர்பாக நீங்கள் ஏதேனும் புது முயற்சி கள் செய்திருந்தால் அதில் அனுகூலம் கிடைக்கும்.

சப்தம ஸ்தானத்தைப் பார்க்கும் குருவின் பலனால் சங்கடங்கள் தீரும். சார்ந்து இருப்பவர்களால் நன்மை கிட்டும். கல்யாணக் கனவுகள் நனவாவதற்கான அறிகுறிகள் தென்படும். வெளிநாடு சென்று சம்பாதிக்க வேண்டும், பணிபுரிய வேண்டும் என்று விரும்பியவர்களுக்கு இப்பொழுது அவர்கள் விருப்பங்கள் நிறைவேறப் போகின்றது.

9ஆம் இடம் புனிதமடைவதால் பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். புகழ் கூடும். பண்புள்ள மனிதர்களின் தொடர்பால் பல நாட்களாக நடைபெறாத ஒருசில காரியங்கள் இப்பொழுது நடைபெறும். பாகப்பிரிவினைகள் சுமுகமாகும். இடையூறுகளை வெல்லக் கூடிய ஆற்றல் குருவின் பார்வைக்கு உண்டு என்பதால் ஒவ்வொரு வியாழக்கிழமையும் நீங்கள் விரதமிருந்து குருபகவானை வழிபடுவது நல்லது. குறிப்பாக உங்கள் இராசிநாதன் சுக்ரன் என்பதால் பகைக்கிரகமான சுக்ரன் வீட்டில் குரு சஞ்சரிப்பதால் வெள்ளிக்கிழமை அன்று சுக்ர வழிபாட்டையும், வியாழக் கிழமை குரு வழிபாட்டையும் முறையாகச் செய்தால்நல்ல வாய்ப்புகள்இல்லம் தேடி வரும்.

இந்த மாதத்தில் நவராத்திரி விழா வருகின்றது. எனவே ஒன்பது நாட்களும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். மேலும் சனிப்பெயர்ச்சிக்கு பிறகே உங்களுக்குச் சாதகமான பலன்கள் ஏராளமாக நடைபெறும்.

பொன்னான புதனின் பெயர்ச்சி!

செப்டெம்பர் 24 ஆம் திகதி கன்னி இராசிக்குப் புதன் செல்கின்றார். அது புதனுக்குரிய உச்ச வீடாகும். விரயஸ்தானத்தில் விரயாதிபதியாக விளங்கும் புதன் உச்சம் பெறும் பொழுது கட்டுக்கள் அடங்காத செலவுகள் ஏற்படலாம். சென்ற மாதத்தில் சேமித்த சேமிப்புகள்கரையலாம். குடும்பச்சுமை கூடுதலாக இருக்கும். வீடு விற்க, வாங்க எடுத்த முயற்சி வெற்றி தரும். பயணங்களால் பலன் உண்டு. பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்கும் அமைப்பும் ஒரு சிலருக்கு ஏற்படும். ஒக்டோபர் 9ஆம் திகதி துலாம் இராசிக்கு, புதன் வருகின்றார். 9, 12




ஆகிய இடங்களுக்கு அதிபதி இராசியில் உலா வரும்பொழுது சொத்துகளில் இருந்த பிரச்சினைகள் அகலும்.

நீச்ச சுக்ரனின் சஞ்சாரம்!

சுக்ர பகவான் ஒக்டோபர் 10 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்கின்றார். அது அவருக்கு நீச்ச வீடாகும். இராசிநாதன் பலமிழந்து சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் மிகமிக கவனம் தேவை. புதியவர்களை நம்பி ஏமாறும் சூழ்நிலை கூட உருவாகும். எதிரிகளின் தொல்லை மேலோங்கும். எதிர்மறைச் சிந்தனைகள் அதிகரிக்கும். இக்காலத்தில் சிறப்பு வழிபாடு உங்களுக்குத் தேவை. உடல் ஆரோக்கியத்திற்காக ஒரு தொகையைச் செலவிடுவீர்கள்.

செவ்வாய் பெயர்ச்சிக் காலம்!

தனாதிபதி செவ்வாய் விரயஸ்தானத்திற்கு வரப் போகின்றார். அந்த நிகழ்வு ஒக்டோபர் 14ஆம் திகதி நிகழவிருக்கின்றது. அதே நாளில் துலாம் இராசியில் சஞ்சரிக்கும் குருபகவானும் கொஞ்சம் வலிமை இழந்து சஞ்சரிக்கின்றார். எனவே உத்தியோகத்தில் இலாகா மாற்றங்கள் உருவாகலாம். சொத்துகள் விரயமாகும். சொந்தங்கள் பகையாகலாம்.

இம்மாதம் வியாழன்தோறும் குருவை வழிபடுவதோடு சங்கடஹர சதுர்த்தி விரதமிருந்து தும்பிக்கையானை வழிபாடு செய்யுங்கள். அமாவாசை அன்று முன்னோர் வழிபாடு முன்னேற்றத்திற்கு வித்திடும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் ஒக்டோபர் 9ஆம் திகதி வரை அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலைமோதும். அதன்பிறகு சுக்ரன் நீச்சம் பெறும் நேரத்தில் கூடுதல் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத் தொல்லை உருவாகலாம். கணவன்-மனைவி இடையே விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். சகோதரர்களால் விரயம் உண்டு. பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பொறுப்புகளில் மாற்றம் உருவாகலாம். வியாழன் தோறும் தட்சிணாமூர்த்தியையும், வெள்ளி தோறும் அம்பிகையையும் வழிபட்டு வருவதன் மூலம் வளர்ச்சி ஏற்படும். குலதெய்வ வழிபாடு குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



## நல்ல வாய்ப்பு வந்து சேரும்

வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் விருச்சிக இராசி நேயர்களே!

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் செவ்வாய் 10ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். மேலும் 10ஆம் இடத்திற்கு அதிபதியான சூரியன் 11 ஆம் இடமான இலாபஸ்தானத்திலும், 11 ஆம் இடத்திற்கு அதிபதியான புதன் 10ஆம் இடமான தொழில் ஸ்தானத்திலும் சஞ்சரித்து பரிவர்த்தனை யோகம் பெறுகிறார்கள். இந்த யோகம் மிகச்சிறப்பான யோகமாகும்.


நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் நல்ல விதமாக முடிவடையும். தொழிலை விரிவுபடுத்தும் வாய்ப்பும் கிடைக்கும். இனி ஜென்மச் சனி விலகப் போகின்றது. சனி விலகுவதற்கு முன்னதாகவே நன்மைகளைச் செய்யத் தொடங்கும். குறிப்பாக 3 மாத காலத்திற்கு முன்னரே சனிபகவான் தனது ஆதிபத்யங்களுக்குரிய பலன்களை நல்ல விதமாக அள்ளி வழங்குவார்.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது உங்கள் இராசிக்கு 3, 4 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனிபகவான். எனவே தடைக்கற்கள் எல்லாம் படிக்கற்களாக மாறும். தானாக வந்த துன்பம் தவிடு பொடியாகும். உடல் ஆரோக்கியம் சீராகி உற்சாகப்படுத்தும்.

தற்சமயம் பெயர்ச்சியான குரு பகவானும் 12ஆம் இடத்தில் சஞ்சரித்து அதன் பார்வையை 4ஆம் இடத்தில் பதிக்கின்றது. சுகஸ்தானத்தில் குருவின் பார்வை பதிவதால் சுகங்களும் சந்தோஷங்களும் கூடுதலாக இருக்கும். பயணங்கள் பலன் தருவதாக அமையும். பால்ய நண்பர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருப்பர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உடன் பணிபுரிபவர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். உயர்மட்ட அதிகாரிகளின் நெருக்கத்தால் சம்பள உயர்வோடு கூடிய சந்தோஷமான மாற்றம் வந்து சேரும். ஜென்மச் சனிக்குப் பரிகாரமாக சனிக்கிழமை தோறும் ஆனைமுகப் பெருமானையும் அனுமனையும் வழிபடுவது நல்லது.

பொன்னான புதனின் பெயர்ச்சி!

செப்டெம்பர் 24ஆம் திகதி கன்னி இராசிக்குப் புதன் வருகின்றார். புதனுக்கு அது உச்ச வீடாகும். இலாபாதிபதி உச்சம் பெறும் இந்த நேரத்தில் எதிர்பாராத தன இலாபம் இல்லம் தேடி வரும். வங்கிச் சேமிப்பு உயரும். வெளிநாட்டுத் தொடர்பு விருத்திக்கும் மாமன், மைத்துனர் வழியில் மகிழ்ச்சியான தகவல் வந்து சேரும். உயர்பதவியில் இருப்பவர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு உதவிகரமாக இருப்பர். ஒக்டோபர் 9 ஆம் திகதி துலாம் இராசிக்குப் புதன் வரப்




போகின்றார். அஷ்டமாதிபதியாகவும் புதன் விளங்குவதால் அவர் 12ஆம் இடத்திற்கு வரும் பொழுது பயணங்களாலும் பலன் கிடைக்கும். பாக்கிகளும் வசூலாகி பரவசப்படுத்தும். தொழில் முன்னேற்றம் உண்டு.

சுக்ரப் பெயர்ச்சி காலம்!

ஒக்டோபர் 10ஆம் திகதி கன்னி இராசிக்கு, சுக்ரன் செல்கின்றார். அங்கு சுக்ரன் நீச்சம் பெற்றாலும் கூட உங்கள் இராசிக்கு 7,12இக்கு அதிபதியான சுக்ரன் 11இல் சஞ்சரிக்கும் பொழுது விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் யோகம் உண்டு. பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனங்கள் வாங்க முன் வருவீர்கள். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள். பெண்பிள்ளைகளின் சுபச் சடங்குகளும், பூமி சேர்க்கையும் ஏற்படும். நல்ல வாய்ப்பு இந்த நேரத்தில் வந்து சேரும்.

செவ்வாய் பெயர்ச்சிக் காலம்!

ஒக்டோபர் 14ஆம் திகதி கன்னி இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். இராசிநாதன் இலாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது யோகத்தை வாரி வழங்கப் போகின்றார். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகை வரவு அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். ஆடை, ஆபரணச்சேர்க்கை உண்டு. வெளிநாட்டில் இருந்து அழைப்புகள் வரலாம். மாற்று மருத்துவத்தால் உடல் ஆரோக்கியம் சீராகும்.

இம்மாதம் ஜென்மச் சனிக்குப் பரிகாரமாக சனிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானை வழிபடுவது நல்லது. மகாளய அமாவாசை அன்று முன்னோர் வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள். நவராத்திரி நாட்களில் அம்பிகையை வழிபட்டால் இன்பங்கள் இல்லம் தேடி வரும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் உங்களுக்கு இனிய மாதமாகும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வளர்ச்சி கூடும். குடும்ப பத்தில் சுபகாரியப் பேச்சுகள் நல்ல முடிவிற்கு வரும். கணவன்-மனைவி இடையே ஒற்றுமை பலப்படும். அரசுவழி ஆதரவு கிடைக்கும். நவராத்திரி நாயகியை கொண்டாடுங்கள். விஜயதசமியன்று வெற்றிக்குரிய சக்தியை வழிபடுவது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இலாகா மாற்றங்கள் எதிர்பார்த்த படி வந்து சேரும். குல தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். (தொடரும்)




# புதிதாக வந்த நட்பும், உதவியும்

ஒரு ஊரில் ஒரு விவசாயி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் நாய் ஒன்றை வளர்த்து வந்தான். அந்த நாய் நல்ல பலசாலியாகவும், புத்திசாலி யாகவும் இருந்தது. அந்த விவசாயிடம் ஏராளமான மாடுகள் இருந்தன. அந்த மாடுகளை தினமும் மேய்ச் சலுக்கு விவசாயியும் அந்த நாயும் கூட்டிச்செல்வர். தினமும் காலையில் கிளம்பி அருகில் உள்ள மலைக்காடுகளுக்கு அழைத்துச்சென்று மாடுகளை மேய விட்டு விட் டும் மாலையில் வீட்டுக்கு கூட்டிவருவர். விவசாயி மாடுகளின் பின்னால் நடந்து வர, நாய் இரு பக்கமும் மாறி, மாறிச்சென்று கட்டுக்கோப்பாக காட்டுக்கு கூட்டிச் செல்லும். இவ்வாறு தினம் தினம் சென்று வருவதை நரி ஒன்று கவனித்து வந்தது.

நரிக்கு மிகவும் வயதா கிவிட்டது. அதனால் ஓடி ஆடி வேட்டையாட முடியவில்லை.

இந்த மாடுகளை பார்த்த தும்;அதற்கு எச்சில் ஊறியது, ஆனால் நாயை பார்க்கவும் பயமாக இருந்தது. நாயும் நல்ல உயரத்துடன் பலசா லியாக இருந்தது. நரி எப்படி யாவது மாட்டை வேட்டையாட சமயம் பார்த்துக் கொண்டி ருந்தது.

அந்த மலைக்காடுகளில் வாழ்ந்து வந்த புலி ஒன்றுக்கு நரியைப்போலவே வயதாகி விட்டதால்.முன்புபோல காட்டில் வேட்டையாட முடியவில்லை. காட்டை விட்டு வெளியே வந்து மனிதர்கள் வளர்த்து வரும் விலங்குகளை வேட்டை யாடலாம் என்று கருதி வந்தது. அப்படி வரும்பொழுது இந்த வயதான நரியை பார்த்தது. நரியாருக்கு ஒரு துணை கிடைத்து விட்ட மகிழ்ச்சியில் மெல்ல புலி யிடம் வந்து புலியண்ணா சவுக்கியமா? என்று



கேட்டது. சந்தோசத்துக்கு என்ன குறைச்சல் ! என்று பதில் சொன்னது புலி. என்ன புலி யண்ணா ரொம்ப வருத்தமா பேசிறீங்க,என்று நரியார் கேட்க, எனக்கு வயசாயிடுச்சு முன்ன மாதிரி வேட்டையாட முடியல்ல, அதுதான் இந்த மனுசங்க வளர க்கிற ஏதாவது கிடைக்கு மான்னு தேடி வந்தேன் என்றது. நரிக்கு உடனே ஒரு திட்டம் தோன் றியது.

நான் ஒரு திட்டம் வச்சிருக் கேன், நீங்க மட்டும் சரின்னு சொன்னா நமக்கு நல்ல வேட் டை கிடைக்கும், நீங்க பாதி நான் பாதி எடுத்துக்கலாம், என்ன சொல்லுறீங்க? என்று கேட்டது நரி. புலிக்கு கோபம் வந்துவிட்டது. நீ எனக்கு சமமா பாதி கேட்கிறீயே, அப் படீன்னா இந்த திட்டமே வேண்டாம் என்று சொல்லி விட்டது. நரிக்கு அடடா அவ சரப்பட்டுட்டமே. என்று நினைத்து, அப்படி எல்லாம் வேண்டாம். நீங்க சாப்பிட்டது போக மிச்சம் கொடுத்தா போதும் என்று சொல்லி புலி யை சந்தோசப்படுத்தியது. புலியும் ஒத்துக் கொண்டது.

நரியின் திட்டப்படி, அந்த காட்டில் ஒரு பெரிய குழி ஒன்று இருந்தது. அந்த குழியை அங் குள்ள இலை தழைகளைக் கொண்டு மூடி விட்டது. ஒரு பெரிய மரக்கிளையை இழுத்து வந்து பக்கத்தில் வைத்துக் கொண்டது.

தொடரும்...




- 1356 - இங்கிலாந்து "போல்ட்டியேர்" என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் பிரான்சை வென்றது.
- 1658 - யாழ்ப்பாணத்தில் ரோமன் கத்தோலிக்க மத குருமாரை மறைத்து வைத் திருப்பது மரணதண்டனைக்குரிய குற்ற மாக டச்சு அரசால் அறிவிக்கப்பட்டது.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் மிசிசிப்பியில் இடம்பெற்ற போரில் கூட்டமைப்பினரத் தோற்கடித்தனர்.
- 1870 - பிரான்சுக்கும் புருசியாவுக்கும் இடம்பெற்ற போரில் பாரிஸ் நகரைக் கைப்பற்றும் நிகழ்வு ஆரம்பமானது. பாரிஸ் 1871, ஜனவரி 28 இல் புருசியா விடம் வீழ்ந்தது.
- 1881 - ஜூலை 2இல் சுடப்பட்டுப் படுகாய மடைந்த அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் கார்பீல்ட் இறந்தார்.
- 1893 - சுவாமி விவேகானந்தர் சிக்காகோவில் உலக சமய மாநாட்டில் உலகப் புகழ் பெற்ற சொற்பொழிவை நிகழ்த்தினார்.
- 1893 - நியூசிலாந்து பெண்களுக்கு வாக்கு ரிமை வழங்கிய முதலாவது நாடானது.
- 1942 - மேற்கு உக்ரைனில் புரோடி என்ற இடத்தில் கிட்டத்தட்ட 2,500 யூதர்கள் நாசி வதைமுகாமுக்கு அனுப்பப்பட்டனர்.
- 1944 - பின்லாந்துக்கும் சோவியத் ஒன்றியத் துக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது.
- 1952 - ஐக்கிய அமெரிக்கா சார்லி சப்ளின் இங்கிலாந்து சென்றுவிட்டுத் அமெரிக்க திரும்புவதற்குத் தடை விதித்தது.
- 1957 - ஐக்கிய அமெரிக்கா நிலத்துக்கடியே தனது முதலாவது அணுகுண்டுச் சோத னையை நடத்தியது.
- 1976 - தெற்கு துருக்கியில் போயிங் விமானம் ஒன்று மலை ஒன்றுடன் மோதியதில் 155 பேர் கொல்லப்பட்டனர்.
- 1983 - சென் கிட்ஸ் மற்றும் நெவிஸ் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1985 - மெக்சிகோவில் இடம்பெற்ற 7.8 ரிக்டர் நிலநடுக்கத்தினால் குறைந்தது 9,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1989 - நைஜர் நாட்டில் பிரெஞ்சு யூடிஏ விமானத்தில் குண்டு வெடித்ததனால் 171 பேர் கொல்லப்பட்டனர்.
- 1997 - அல்ஜீரியாவில் இஸ்லாமியத் தீவிர வாதிகள் 53 கிராம மக்களைப் படு கொலை செய்தனர்.
- 2006 - தாய்லாந்தில் இராணுவப் புரட்சியில் இராணுவத் தளபதி சோந்தி பூன்யா ரத்கிலின் ஆட்சியைக் கைப்பற்றினார்.

பிறப்புகள்

- 1749 - சான் பாப்திசுத்து யோசப் டெலாம்பர், பிரெஞ்சு வானியலாளர், கணிதவிய லாளர் (இ. 1822)
- 1759 -வில்லியம் கிர்பி, ஆங்கிலேயப் பூச்சியியலாளர் (இ. 1850)
- 1911 - வில்லியம் கோல்டிங், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேய எழுத்தாளர் (இ. 1993)
- 1921 - பாவ்லோ பிரையர், பிரேசில் மெய் யியலாளர் (இ. 1997)
- 1965 -சுனிதா வில்லியம்ஸ், அமெரிக்க விண்வெளி வீராங்கனை
- 1976 - இஷா கோப்பிகர், இந்தியத் திரைப்பட நடிகை

இறப்புகள்

- 1710- ஓலி ரோமர், தென்மார்க்கு வானி யலாளர் (பி. 1644)
- 1881 - சேம்சு கார்பீல்டு, அமெரிக்காவின் 20வது குடியரசுத் தலைவர் (பி. 1831)
- 1935 -கான்சுடன்சுடீன் சியால்க்கோவுசுகி, உருசிய அறிவியலாளர் (பி. 1857)
- 1936 - விஷ்ணு நாராயண் பாத்கண்டே, இந்திய இசைக்கலைஞர் (பி. 1860)
- 1980 - கே. பி. சுந்தராம்பாள், தமிழிசை, நாடகக் கலைஞர் (பி. 1908)
- 2014 - உ. ஸ்ரீநிவாஸ், மேண்டலின் இசைக் கலைஞர் (பி. 1969)

சிறப்பு நாள்

- விடுதலை நாள், (செயிண்ட் கிட்சும் நெவிசும், 1983)
- இராணுவத்தினர் நாள் (சிலி)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 50 | 120 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 90 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 150 | 240 | 200 | 300 |
| தக்காளி | 200 | 250 | 150 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 40 | 80 | 80 | 60 |
| கோவா | 100 | 120 | 50 | 100 | 100 | 80 |
| கரட் | 80 | 160 | 90 | 160 | 160 | 160 |
| பூசணி | 40 | 30 | 20 | 40 | 50 | 60 |
| புடோல் | 120 | 100 | 60 | 100 | 90 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 70 | 100 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 220 | 300 | 200 | 240 | 240 | 250 |
| பெரிய வெங்காயம் | 120 | 150 | 100 | 130 | 130 | 120 |
| பாகற்காய் | 300 | 400 | 150 | 200 | 240 | 400 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 50 | 50 | 70 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 150 | 80 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 120 | 120 | 140 | 120 | 160 | 100 |
| லீக்ஸ் | 120 | 160 | 80 | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 50 | 40 | 20 | 40 | 60 | 80 |
| கறிமிளகாய் | 80 | 160 | 90 | 120 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 60 | 100 | 70 | 120 | 120 | 80 |
| போஞ்சி | 200 | 250 | 110 | 160 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 50 | 80 | 100 | 120 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 50 | 20 | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 260 | 250 | 220 | 300 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60-100 | 70 | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 500 | 200 | - | 350 | 50 |
| வெங்காயப்பூ | 240 | 160 | 150 | 200 | 240 | 200 |
| முள்ளங்கி | 50 | 100 | 30 | 80 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 15 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 60 | 25 | 60 | 40 | 50 |

இதய நோய் உள்ளவன் பளுவான இரும்பைத் தூக்கக்கூடாது.

*- ஓர் அறிஞர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## 20 எனும் பண்டார வெடி வைக்கின்றார் பாருமினே!

தேவையில்லாத பொருளை எவன் வாங்குவானாக இருந்தால் தேவையுள்ள பொருளை விற்க வேண்டிவரும் என்று என் தந்தையார் அடிக்கடி கூறுவார்.

அதன் உள்ளார்ந்தம் அப்போது புரியவில்லையாயினும் இப்போது நன்றாகப் புரிகிறது.

ஆம்; தேவைற்ற வேலையை ஒருவன் செய்வானாக இருந்தால் தேவையான வேலையைச் செய்ய முடியாது போகும் என்பது அந்த விளக்கத்தினூடாக நாம் கூறக்கூடிய கருத்துருவாக்கமாகும்.

விளக்கம் என்பது எப்போதும் ஒன்றில் இருந்து இன்னொன்றைத் தீர்மானிக்கக் கூடியதாக இருப்பது அவசியம்.

அந்த வகையில் தேவையுள்ள வேலையைச் செய்யக்கூடாது என்பதற்காக தேவையில்லாத வேலையைச் செய்து கொள்வதும் ஒரு தந்திரோபாயம் சார்ந்தது என்று கூறிக் கொள்ளலாம். இதற்கு இலங்கையை விட்டால் வேறு உதாரணம் தேடுவது கடினம்.

இப்போது இலங்கை அரசாங்கத்தின் முழு முயற்சியும் 20ஆவது திருத்த சட்டமூலத்தை எப்பாடுபட்டாவது அரங்கேற்ற வேண்டும் என்பதுதான்.

20ஆவது திருத்தச் சட்டமூலத்தை அரங்கேற்றுவதற்கு, அமுல்படுத்துவதற்கு இத்துணை பிரயத்தனம் வேண்டுமா? என்றால் இல்லை என்பதே பதிலாக இருக்கும்.

அப்படியாயின் 20ஆவது திருத்த சட்டமூலத்தை அரங்கேற்ற வேண்டும் என்று அரசாங்கம் விடாப்பிடியாக நிற்பது எதற்காக? என்ற கேள்வி எழுகின்ற போதுதான் தேவையுள்ள வேலையைச் செய்யாமல் விடுவதற்காக என்ற பதில் கிடைக்கும்.

20ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் எழுந்துவிட்டன. உயர் நீதிமன்றம் வரை அந்த விவகாரம் போய்விட்டது. ஆதரிப்பது என ஒரு தரப்பும் ஆதரிக்கக் கூடாது என மறுதரப்புமாக இப்போது 20 ஆவது திருத்த சட்டமூலம் எழும்பி நின்று சன்னதம் ஆடுகிறது.

அந்தச் சன்னதத்தில் ஊடகங்களும் வெளிநாட்டு இராஜதந்திரிகளும் ஏன் இந்த நாட்டின் ஒட்டு மொத்த அரசியல் ஆர்வலர்களும் தங்களின் கவனத்தையும் ஆர்வத்தையும் செலுத்தி வருகின்றனர்.

இந்த வகையில் அரசாங்கம் வெற்றி கண்டுவிட்டது என்று கூறுவது பொருத்துடையதாகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு, காணாமல் போனவர்கள் தொடர்பான விடயம், தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் என்பவற்றின் மத்தியில் ஜெனிவாக் கூட்டத் தொடர் ஆரம்பித்திருக்கும் இந்நேரத்தில் அத்தனைக்கும் கவனக்கலைப்பானாக 20ஆவது திருத்த சட்டமூலம் எழுந்து நின்று கொடி பிடிக்கிறது.

ஆக, செய்ய வேண்டியதை செய்யாமல் விடுவதற்காக செய்யத் தேவையில்லாததை கருசனை காட்டுகின்ற நாடகமே இப்போது இலங்கையில் நடந்து கொண்டிருக்கிறது.

சுருங்கக்கூறின் கவனக்கலைப்பானை ஏற்படுத்துவதற்காக 20ஆவது திருத்த சட்ட மூலம் என்ற பண்டார வெடி அரசாங்கத்தால் வெடிக்க வைக்கப்படுகிறது அவ்வளவுதான்.

# ஜோசப் முகாமை ஜெனிவாவில்

## அம்பலப்படுத்திய தமிழ்ச்செல்வனின் மனைவி

(ஜெனிவா)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் குறித்து ஜோசப் முகாமில் வைத்து தன்னிடம் மீண்டும் மீண்டும் விசாரணை நடத்தப்பட்டதாக, அரசியல் துறை பொறுப்பாளராக இருந்த சு.ப.தமிழ்ச்செல்வனின் மனைவி சசிரேகா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 36ஆவது கூட்டத்தொடரில், மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உள்ளக அரங்கில் நேற்று இடம்பெற்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்து அவர்,

"இலங்கையில் அதிகளவில் சித்திரவதைகள் இடம் பெறும் ஜோசப் முகாமிற்கு எனது பிள்ளைகளுடன் என்னையும் இராணுவத்தினர் அழைத்துச் சென்றனர்.

அந்த முகாமை நெருங்கிய உடன் எங்களுடைய கண்கள் கட்டப்பட்டு விட்டன. கண்கள் கட்டப்பட்ட நிலையிலேயே நாங்கள் ஜோசப் முகாமுக்கு அழைத்து செல்லப்பட்டோம். முகாமில் எங்களை தனி அறையில் நிறுத்தினார்கள். அதன் பின்னர் எங்களை வந்து சந்தித்த புலானாய்வு பிரிவின் உயர் அதிகாரி "எந்த நேரத்திலும் உங்களிடம் விசாரணை செய்யப்படலாம்" என கூறினார்.

நான் சாதாரண ஒரு குற்றவாளியாக அவர்களின் முன்னிலையில் கதைக்கவில்லை. அவர்களின் முன்னிலையில் நேராக தலையை உயர்த்தியே கதைத்தேன்.

இதன்போது விடுதலைப் புலிகளின் தலைவர் அண்ணன் பிரபாகரன் தொடர்பில் மீண்டும் மீண்டும் விசாரணை செய்தார்கள். எனக்கு தெரிந்த பதிலை கூறினேன். தெரியாததை தெரியாது என்றே கூறினேன்.

பின்னர் விசாரணை முடிந்ததாக கூறி என்னை பேருந்து ஒன்றில் ஏற்றி வந்து, வவுனியாவில் பொது மக்களோடு சேர்த்து விட்டார்கள். அங்கு வைத்து எங்களை பதிவு செய்யும் போது நாங்கள் யார் என்பதை அறிந்து கொண்டதும் 500க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் எங்களை சூழ்ந்து கொண்டனர். அங்கிருந்து மீண்டும் இராமநாதபுரம் முகாமுக்கு அனுப்பி வைத்தார்கள். அந்த முகாமில் வைதது படையினரால் உயிர அச்சுறுத்தலை நாங்கள் எதிர்நோக்கியிருந்தோம்.

நான் இராமநாதபுரம் முகாமில் தங்கியிருந்த போது தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்து விட்டுச் சென்ற கருணா என்னை வந்து சந்தித்தார். அதன் பின்னர் அவரை இதுவரையிலும் சந்திக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (மு-11)

## கல்வி, பண்பாட்டு அமைச்சின் விருது பெறுவோர் விபரம் அறிவிப்பு

கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் எதிர்வரும் 22, 23, 24ஆம் திகதிகளில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் வட மாகாண பண்பாட்டு பெருவிழா இடம் பெறவுள்ளது.

இந்த விழாவில் முதலமைச்சர் விருது பெறுவோர் விபரம், இளம்கலைஞர் விருது பெறுவோர் விபரம், அரச ஊழியர் ஆக்கத்திறன் போட்டியில் பரிசில் பெறுவோர் விபரம், கலைமன்றங்களுக்கான போட்டியில் பரிசில் பெறுவோர் விபரம், சிறந்த நூற் பரிசுபெறுவோர் விபரம் ஆகியன வெளியிடப்பட்டுள்ளன.

இதில் இளம் கலைஞர் விருது பெறுவோர் - 2017 விபரம் வருமாறு.

வேலுப்பிள்ளை வசந்தரூபன் (ஓவியம்) - பச்சிலைப் பள்ளி, நாகராஜா செந்தூர்ச் செல்வன் (நடனம்) -வவுனியா, கறுப்பையா சத்திய சீலன் (நாடகம்) - கோப்பாய், நாகேஸ்வரசர்மா சிவசுந்தர சர்மா (வாத்தியக்கலை) – உடுவில், அரியநாயகம் அன்று யூலியஸ் (கூத்து) - யாழ்ப் பாணம், ஸ்ரீதயாளன் ஸ்ரீ பிருந்திரன் (ஊடகவியல்) - உடுவில், குவேந்திரராஜ் நவ ஜீவன் (இசை நாடகம்) - வவுனியா வடக்கு, குமுதா உமா காந்தன் (இசை) - நல்லூர், முருகையா தமிழ்செல்வன் (புகைப்படம்) – கரைச்சி, யோகநாதன் யோகராசா (கவிதை) -புதுக்குடியிருப்பு, சந்திரசேகரம் ஸ்ரீதரன் (குறும்படம்) - வேலணை, வைரமுத்து கஜேந்திரன் (சிறுகதை) - மன்னார், துரைசிங்கம் குமரநாதன் (சிற்பக்கலை) – சாவகச்சேரி. (மு)




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

அரசிளாங்குமரியும் அவளின் தோழிகளும் வாடியிருந்த பூஞ்செடிகளுக்கு வாவி நீரைச் சொரிந்தனர். கொம்பின்றித் தவித்த பூங்கொடிகளுக்குக் கொழு கொம்புகளை நட்டுப் படரவிட்டனர். ஒருவரை ஒருவர் துரத்தி ஓடிப்பிடித்து விளையாடினர். குளத்தில் இறங்கி குதூகலத்துடன் நீராடினர்.

உற்சாகம் திரண்டது. உவகை பொங்கியது. விளைவாகக் கன்னியர் கானம் பாடத் தொடங்கினர்.

அந்த அமுதகானத்தைக் காற்று சுமந்துவந்தது. கண்மூடி அயர்ந்திருந்த ஸ்ரீநிவாசன் காதில் அது தேனாகப் பாய்ந்தது. (தொடரும்)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**மங்கல நாண் வழிபாடு**

அரசாணைக்கோல் வழிபாடு முடிந்தவுடன் மங்கல நாண் வழிபாடு செய்யப்படுகிறது. மங்கல நாணை தேங்காயில் சுற்றி மஞ்சள் அரிசி இருக்கும் தட்டில் வைக்க வேணடும். மங்கல நாணில் உள்ள திருப்பாத் உருவத்தை மேலாக வைதது மஞ்சள், குங்குமம் வைத்து தர்ப்பையால் மங்கல நாணின் பாதத்தை தொட்டுக்கொண்டு தமிழ்வேத மந்திரம் அல்லது அபிராமி அந்தாதி பாடலான கற்பனை கடந்த ஜோதி பாடலைப் பாடவேண்டும். (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** நர்வற்காடு, குடமியன், மிருசுவில் வடக்கு ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** சின்னஅடம்பன் பெரியமடு ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** நெளுக்குளத்திலிருந்து பம்பைமடு வரை, வவுனியா தொழில் நுட்பக்கல்லூரி, பம்பைமடு பல்கலைக்கழகம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ உங்கள் தவறுகளைப் பெரும்பேறாக நினையுங்கள். அவை நம்மை அறியாமலே நமக்கு வழிகாட்டும் தெய்வங்கள் என்றால் மிகையில்லை.

❖ அழுகை பலவீனத்தின் அறிகுறி. அடிமைத்தனத்தின் அறிகுறி. தோல்விகள் இல்லாத வாழ்க்கையால் பயனேதும் இல்லை. போராட்டம் இல்லாத வாழ்க்கை சுவையாக இருக்காது.

❖ தன்னலத்தை ஒழிப்பதில் தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது. உன்னைத் தவிர யாராலும் உன்னை மகிழ்விக்க முடியாது.

❖ கோபப்படும் மனிதனால் அதிக அளவோ அல்லது செய்யும் பணியைச் சிறப்பாகவோ செய்ய முடியாமல் போய் விடும். ஆனால், அமைதியானவனோ சிறப்பாகப் பணியாற்றுவான்.

❖ மன்னிக்கக் கூடியதும், சமநோக்குடையதும், நிலை தடுமாறாததுமான மனதை எவன் பெற்றிருக்கிறானோ அவனே ஆழ்ந்த அமைதியில் திளைத்திருப்பான்.

❖ கருணை என்பது சொர்க்கத்தைப் போன்றது. நாம் அனைவரும் கருணையுள்ளவர்களாக மாறி சொர்க்கத்தில் மகிழ்ந்திருப்போம்.

# யாழின் கில்லாடி பட்டத்தை தமதாக்கியது மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம்




மாபெரும் இறுதிப் போட்டியில் கிண்ணம் வென்று யாழின் கில்லாடி பட்டத்தை தமதாக்கிக் கொண்டது மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம்.

புலோலி இளைஞர் வி.க. யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திய "யாழின் கில்லாடி" மாபெரும் துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் 17.09.2017 ஞாயிறுக்கிழமை அன்று நடைபெற்றது.

இதில் மல்லாகம் ஸ்ரீ முருகன் வி.கழத்தை எதிர்த்து கொம்மாந்தறை இளைஞர் வி.க. பலப்பரீட்சை நடத்தின. நாணயச் சுழற்சியில் வென்ற ஜனுசன் தலைமையிலான ஸ்ரீமுருகன் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய ஸ்ரீமுருகன் 10 ஓவர்கள் நிறைவில் 6 இலக்குகளை, 75 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் அதிரடி காட்டிய வரன் 3 சிக்சர்கள் அடங்கலாக 23, மகிழன் 17 (1 சிக்சர்), அணித்தலைவர் ஜனுசன் 15 (1 சிக்சர்) ஓட்டங்களை அணிக்காக பெற்றுக்கொடுத்தனர்.

பதிலுக்கு களமிறங்கிய கொம்மாந்தறை இளைஞர் வி.க. அணி 10 ஓவர்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 46 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

பந்துவீச்சில் வரன் மற்றும் ஜனுசன் தலா 2 இலக்குகளையும் ஜிந்தா, தனுசன்,கௌசி ஆகியோர் தலா 1 இலக்கினையும் வீழ்த்தினர்.

இறுதியில் 29 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணத்தையும் "யாழின் கில்லாடி" பட்டத்தையும் தமதாக்கிக் கொண்டது மல்லாகம் ஸ்ரீ முருகன் வி.க. ஆட்டநாயகனாக பந்து வீச்சிலும் துடுப்பாட்டத்திலும் அதிரடி காட்டிய வரன் தெரிவானார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## இருபாலை கிரிகெட் சமர்

# அரை இறுதியில் கலைஒளி

இருபாலை விளையாட்டுக் கழகம் நடத்தும் 8 வீரர் 6 பந்து பரிமாற்ற கிரிக்கெட் போட்டியின் முதல் போட்டியில் பொற்பதி இந்துவினையும் இரண்டாவது போட்டியில் இருபாலை விளையாட்டுக் கழகத்தினையும் கால் இறுதியில் கோப்பாய் சலஞ்சர் அணியினையும் வீழ்த்தி அரை இறுதிக்குச் சென்றது கலை ஒளி விளையாட்டுக்கழகம்.

நாணயச்சுழற்சியில் வென்ற கலைஒளி அணித் தலைவர் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார். முதல் ஆடிய கலைஒளி மோகனதீபன் ,கோகுல் ஆகியோரது சிறப்பான ஆட்டம் மூலம் 4 விக்கெட்டை இழந்து 6 ஓவர் முடிவில் 53 ஓட்டங்களைப் பெற்றது.

மோகனதீபன் 20 ஓட்டங்களையும் கோகுல் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பிரசாத் 2 இலக்கினை வீழ்த்தினார்.

பதிலுக்கு 54 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என ஆடிய கோப்பாய் சலஞ்ஞர் பிரதீஸின் கட்டுக்கோப்பான பந்து வீச்சினால் 41 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

அணித்தலைவர் பிரசாத் 17ஓட்டங்களைப் பெற்றார்.

கட்டுக்கோப்பாக பந்து வீசிய பிரதீஸ் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 2 ஓட்டங்களை மாத்திரமே விட்டுக்கொடுத்து வெற்றிக்கு வழிவகுத்தார். இதில் முதல் அரை இறுதிக்கு சென்றது கல்லைஒளி விளையாட்டுக் கழகம். (க)

# நேதாஜியின் ஆண்டு விழா கிண்ணத்தை சுவீகரித்து சம்பியனானது சைனிங்ஸ்




நேதாஜி விளையாட்டுக் கழகம் 53 ஆவது வருட நிறைவு ஆண்டுவிழாவினை முன்னிட்டு வல்வைக்கு உட்பட்ட கழகங்களுக்களுக்கிடையே நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் 17.09.2017 நடைபெற்ற அரையிறுதியில் சைனிங்ஸ் அணி பலமான ரேவடி அணியுடன் மோதியது. ஆட்ட ஆரம்பம் முதல் இறுதிவரை சைனிங்ஸ் வீரர்களின் சிறப்பான ஆட்டமும் நுட்பமான பந்துப் பரிமாற்றம் மூலம் ஆதிக்கம் செலுத்திய சைனிங்ஸ் அணி இடைவேளைக்கு முன்னர் 2 கோல்களையும் இடைவேளையின் பின்னர் 2 கோல்களையும் போட்டு ரேவடி அணியினை 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இதில் பிரசாந் 2 கோலினையும் துளசிராம் 1, குமரன் தலா ஒரு கோலினையும்இறுதிப்போட்டியில் உதயசூரியன் அணியுடன் மோதிய சைனிங்ஸ் அணி முற்பாதியாட்டத்தில் 1 கோலினை போட்டு முன்னிலை வகித்தது. இறுதி வரை விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் மேலதிக கோல்கள் பெறாத நிலையில் சைனிங்ஸ் அணி 1:0 என வெற்றி பெற்றது. துளசிராம் 1 கோலினை போட்டார். (க)

# உரும்பிராய் சென்.மைக்கல் வி.க மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டம்

## டயமன்ஸ் சம்பியன்




யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுகழகம் நடத்திய அணிக்கு 9 பேர் கொண்ட மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுத்தொடரில் நேற்று முன்தினம் 17.09.2017 அன்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் பாஷையூர் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தை 3:1 என்ற கோல்கணக்கில் வீழ்த்தி சம்பியன் பட்டத்தை பெற்றுக்கொண்டது டயமன்ஸ் விளையாட்டுக்கழகம். இப் போட்டியில் இறுதியாட்ட நாயகனாக துசிகரனும்,தொடரின் சிறந்த கோல்காப்பாளராக ஜனார்த்தனனும் தெரிவாகினர். (க)

# கிண்ணம் வென்றது கரவெட்டி ஞானம்ஸ்






புலோலி இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்திய மாபெரும் மென்பந்துச்சுற்றுப்போட்டியின் அணிக்கு 8 பேர் கொண்ட 6 ஓவர்கள் தொடரில் நேற்று முன்தினம் 17.09.2017 அன்றுநடைபெற்ற அரையிறுதிப்போட்டியில் குருநகர் கார்மேல் போய்ஸ் அணியையும் இறுதிப்போட்டியில் பருத்தியூர் வீனஸ் B அணியையும் வெற்றிகொண்டு வெற்றிக்கிண்ணத்துடன் 10,000ரூபாய் பணப்பரிசிலையும் தனவசமாக்கியது கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம். (க)

## யாழ்.நகரின்...

துறை அபிவிருத்திகளை பரிசீலிக்கவும், அதிகரிக்கும் பயணிகள், பொருட்களுக்கான போக்குவரத்து தேவைகளை நிவர்த்தி செய்யும் முகமாக போக்குவரத்து வலையமைப்பின் செயற்திறன் மேம்பாடு மற்றும் யாழ். நகரப் போக்குவரத்தின் விரிவாக்கமும் இணைப்பும் வினைத்திறனுடைய போக்குவரத்தின் அறிமுகமும் ஆகியவற்றை சிபார்சு செய்யவும் முனைகின்றது.

இந்த ஆய்வின் பிரதான நோக்கம் பரிபூரண தந்திரோபாய போக்குவரத்து திட்டத்தை தயாரித்தலாகும், இதன் உப தொகுதிகளாக பொது போக்குவரத்து செயன்முறை நிர்வகிப்பு திட்டம், தந்திரோபாய போக்குவரத்து தேவை நிர்வகிப்பு திட்டமும் பூரண உருவரையும், நிலைபெற போக்குவரத்து முறைமையை அறிமுகப்படுத்தும் திட்டம், தந்திரோபாயப் போக்குவரத்து சேவை- தேவை நிர்வகிப்புத் திட்டம் ஆகிய நான்கும் உள்ளன.

இவ் ஆய்வின் ஒரு பகுதியாக தந்திரோபாய நகர அபிவிருத்தி திட்டத்தின், திட்ட முகாமைத்துவ பிரிவானது யாழ்.பல்கலைக்கழக பொறியியற் பீட குடிசார் எந்திரவியற் பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அ.அன்புருவேலினை தகவல் திரட்டுக்கான ஆலோசகராக நியமித்துள்ளது. அத்துடன் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட புவியியற் பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் செ.ரவீந்திரனை திட்டமிடலாளராகவும் நியமித்துள்ளது.

இவர்களுடன் கள மேற்பார்வையாளர்கள், தகவல் திரட்டுநர்கள், தகவல் பதிவு மேறபார்வையாளர்கள் தகவல் பதிவாளர்கள் ஆகியோர் இணைந்துள்ளார்கள். இவர்கள் அனைவரும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் பட்டதாரிகளுமாவர்.

இவ் ஆய்வு பகுதியானது, துணைப் போக்குவரத்து தகவல்கள், வாகன கணக்கெடுப்பு, போக்குவரத்து நிர்வகிப்பு தொடர்பான கணக்கெடுப்பும் வினவலும், சரக்கு போக்குவரத்து நிர்வகிப்பு தொடர்பான கணக்கெடுப்பும் வினவலும் என நான்கு கட்டங்களாக மேற்கொள்ளப்படவுள்ளது.

இதில் முதலாவது இரண்டாவது கட்டங்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது எதிர்வரும் இரண்டு மாதங்கள் வரை நீடிக்கும். இதற்கு பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கேட்டுள்ளார்.

இந்த சந்திப்பில் யாழ்.பல்கலைக்கழக பொறியியற் பீட குடிசார் எந்திரவியற் பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அ.அன்புருவேல், யாழ்.பல்கலைக்கழக பொறியியற் பீட பீடாதிபதி பேராசிரியர் ஏ.அற்புதராஜா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.(மு-4)

## நடக்கட்டும் வாக்கெடுப்பு...

றைக் காலத்தில் இருந்து ஈழத்தமிழர்கள் தான் இலங்கைத் தீவின் பூர்வீகக் குடிமக்கள். சிங்கள இனவாத அரசுகளின் இராணுவத்தால் ஈழத்தமிழர்கள் கொடூரமான படுகொலைக்கு-இன அழிப்புக்கு ஆளானார்கள்.

2009ஆம் ஆண்டு ஜனவரி முதல் மே 18 வரை நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் தமிழர்கள் மிருகத்தனமாகக் கொன்று குவிக்கப்பட்டார்கள். சிங்கள அரசு நடத்திய தமிழ் இனப்படுகொலைக்குக் கண்டனம் தெரிவிக்க வேண்டிய இதே மனித உரிமைக் கவுன்சில் 2009 மே கடைசி வாரத்தில் இலங்கை அரசு நடத்திய மிகக் கோரமான படுகொலைக்குப் பாராட்டுத் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது என்பதை வேதனையுடன் சுட்டிக்காட்டுகிறேன்.

ஐ.நா சபை 2010ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அமைத்த மார்சுகி தாருஸ்மென், ஸ்டீவன் ராட்னர், லாஸ்வின் சூகா ஆகிய மூவர் குழு நடைபெற்றது ஈழத் தமிழ் இனப்படுகொலை என்பதற்கு ஆணித்தரமான ஆதாரங்களுடன் 2011 ஏப்ரல் மாதம் அறிக்கை சமர்ப்பித்தது. இலங்கையின் பூர்வீகத் தமிழர் தாயகத்தில் பல்லாயிரக்கணக்கான சிங்களவர்களை சிங்கள அரசு கொண்டுவந்து குடியமர்த்துகிறது. காணாமல்போன தமிழர்களைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை. சிங்கள இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்கள் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு உள்ளனர். ஈழத்தமிழர்கள் வாழும் இடமே கொடும சிறையாகிவிட்டது.

இருண்டு கிடக்கின்ற ஈழத்தமிழர் வானத்தில் தற்போது தோன்றியுள்ள ஒரே ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்று யாதெனில், மனித உரிமை ஆணையர் அல்ராத் உசேன் சிங்கள இராணுவம் நடத்திய யுத்தக் குற்றங்களை உலகத்தில் எந்த நாடும் விசாரிக்கலாம் என்று கூறியதுதான்.

நெஞ்சம் வெடிக்கின்ற வேதனையோடும், துயரத்தோடும் மதிப்புமிக்க மனிதஉரிமைக் கவுன்சிலை மன்றாடிக் கேட்கிறேன். ஈழத் தமிழர்களின் தாயகத்திலும், உலகெங்கும் உள்ள புலம்பெயர்வாழ் ஈழத்தமிழர்களிடத்திலும் சுதந்திரமான இறையாண்மையுள்ள தமிழ் ஈழ தேசத்திற்கு பொதுவாக்கெடுப்பு நடத்த முன்வாருங்கள். அதற்கு முன்னால் இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் இருந்து சிங்கள இராணுவம் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும். சிங்களக் குடியேற்றங்கள் அகற்றப்பட வேண்டும். தமிழ்க் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். இந்தப் பொது வாக்கெடுப்பை ஐ.நா மன்றமே நடத்த வேண்டும்.

ஆங்கிலத்தில் இப்படிப் பேசிவிட்டு வைகோ “மலர்க தமிழ் ஈழம். நன்றி, வணக்கம்” என்று தனக்குக் கொடுக்கப்பட்ட ஒன்றரை நிமிடத்தில் பேசி முடித்தார். தமிழர் உலகம் என்ற அமைப்பின் சார்பில் வைகோ பேசினார்.

கவுன்சில் கூட்டத்திற்குப் பல நாடுகளிலிருந்தும் வந்திருந்த ஈழத்தமிழர்கள் வைகோவுக்குப் பாராட்டும் நன்றியும் தெரிவித்தனர்.(மு-11)

## யாழ்.மாவட்ட...

தமிழ் மொழிக்கு முன்னுரிமை கொடுத்து தூய தமிழ் பெயர் வைத்திடல் வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரனால் முன்வைக்கப்பட்டது.

இது குறித்து வடமாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில்,

தமிழ் பிரதேசங்களில் அமைக்கப்படும் பெயர் பலகைகளில் தமிழ் மொழி தான் முன்னுரிமை படுத்தப்பட வேண்டும் என மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அது செயற்படுத்தப்படவில்லை. இந்த நிலையில் ஒவ்வொரு மாவட்டங்களில் இருந்தும் கடைப்பிடிக்கப்பட்டால் நன்று.

தனியார் நிறுவனங்கள்; வீதி அபிவிருத்தி துறையினர், இராணுவத்தினர் என பலரும் தமக்கு ஏற்ற வகையில் பெயர் பலகைகளை அமைத்து வருகின்றன. எமது மாகாணத்தில் தமிழுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். தமிழ், சிங்களம் ஆங்கிலம என்ற முறையில் அமைக்கப்பட வேண்டும். கடைகளில் மாத்திரம் இன்றி, வீதிகள், திணைக்களங்களிலும் அமைக்கின்றார்கள். இதை ஒரு ஒழுங்குமுறைக்கு கொண்டுவரப்பட வேண்டும் என தெரிவித்தார். அதனை தொடர்ந்து குறித்த விடயம் தீர்மானமாக்கப்பட்டு அனைவரின் ஒப்புதலுடன் நிறைவேற்றப்பட்டது. (மு-9)

## மாவீரர் துயிலும்...

பெற்ற மாவட்டஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனால் முன்வைக்கப்பட்டது.

உள்ளூராட்சி அமைச்சின் அதிகாரி இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், மாவட்டத்தில் உள்ள துயிலும் இல்லங்கள் சிலவற்றில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர், சில துயிலும் இல்லங்கள் தனியாருடையதாக உள்ளது. இவற்றை பிரதேச செயலாளர்கள் அடையாளப்படுத்தி அந்தந்த பிரதேச சபைக்கு பாரப்படுத்தினால் அவற்றை பராமரிக்கும் நடவடிக்கை எடுக்க முடியும்.

தனியாருடைய காணிகளில் அமைந்துள்ள துயிலும் இல்லங்களை பராமரிப்பதானால் உரிமையாளர்களிடம் அனுமதி பெற்று அவை சுவீகரிக்கப்பட வேண்டும். எனவே அவை தொடர்பில் எமக்கு அடையாளப்படுத்தப்படும் பட்சத்தில் பராமரிக்கும் நடவடிக்கை எடுக்க முடியும் என தெரிவித்திருந்தார்.

அதனை தொடர்ந்து குறித்த விடயம் தீர்மானமாக எடுத்துக்கொள்ளப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (மு-9)

## கடற்புலிகளை...

தெரிவிக்கையில்,

குடாநாட்டின் தீவுப் பகுதிகளில் படகுச் சேவையை மேற்கொள்வதற்கு சரியான பயிற்றுவிக்கப்பட்ட மாலுமிகள் இங்கு இல்லை. இதனால் கடற்படைதான் அந்த செயற்பாட்டை தன் வசம் வைத்து உள்ளது.

தமிழ் இளைஞர்களுக்கு அவர்களின் பிரதேசங்களிலேயே வேலை வாய்ப்புக்கள் இல்லை. கடற்புலியில் இருந்து பயிற்சி பெற்ற பலர் உள்ளார்கள். அவர்கள் மிகவும் பலமாக இயங்கக் கூடியவர்கள். அவர்களுக்கு இந்த கடல் மாலுமி வேலை வாய்ப்பை வழங்க வேண்டும்.

சமுத்திர பல்கலைக்கழகம் இந்த விடயததில் கூடிய கவனம் எடுக்க வேண்டும். எமது தமிழ் இளைஞர்கள், முன்னாள் கடற்புலி களை இந்த பயிற்சிநெறிக்குள் உள்ளீர்த்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட வேணடும் என மேலும் தெரிவித்தார். (மு-9)

## கஸ்தூரியார் வீதி...

தெரியாத நபர்கள் சிலர் அங்குள்ள முச்சக்கரவண்டிகள் சிலவற்றின் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

கஸ்தூரியார் வீதியில் நின்றிருந்த சில முச்சக்கர வண்டிகள் மீது இவ்வாறு தடிகள், கத்திகள் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்தியதன் பின்னர் குறித்த சந்தேக நபர்கள் அனைவரும் தப்பிச்சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை யாழ்.பொலிஸார் விரைவாக முன்னெடுத்துவருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (மு-11)

## 20 மீதான விவாத...

20ஆவது திருத்தம் குறித்த உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் இன்று காலை 9.30 மணிக்கு சபாநாயகரால் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படும்.

தீர்ப்பு எவ்வாறு அமைந்தாலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியூயோக்கில் இருந்து நாடு திரும்பும் வரை திருத்தச் சட்ட வரைபு மீதான விவாதம் பிற்போடவுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இந்நிலையில், வடமத்திய, கிழக்கு மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாண சபைகளின் பதவிக்காலம், அடுத்த மாதத்துடன் நிறைவடைய உள்ளன. அந்த மாகாண சபைகள் உள்ளிட்ட சகல மாகாண சபைகளுக்கான தேர்தல்களையும் ஒரேநாளில் நடத்தும் நோக்கிலேயே, இந்தத் திருத்தத்தை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததாக அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதனடிப்படையில், இந்த மனுக்கள் மீதான உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானம், சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு, கடந்த வியாழக்கிழமை அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

அந்த வியாக்கியானத்தின் பிரகாரம், அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை, நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை மற்றும் சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாக நடத்தப்படவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை, சபாநாயகர் கரு ஜயசூரிய, இன்று செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவிப்பார்.

இதேவேளை, மாகாண சபைகளின் அங்கீகாரத்துக்காக, அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த அரசமைப்பின் 20 ஆவது திருத்தம், மாகாண சபைகள் பலவற்றில் தோல்வியை தழுவியுள்ளன. இந்நிலையிலேயே, இந்த 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை, அரசாங்கம் வாபஸ் பெற்றுக்கொள்ளவுள்ளதாக நம்பகரமான தகவல் தெரிவிக்கின்றது. (மு-11)

## யாழ்.போதனா...

யாழ்.போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் நேற்றுமுன்தினம் புடையன் பாம்பு ஒன்று குட்டிகளைப் பிரசவித்துள்ளது.

பாம்புக் கடிக்கு இலக்காகிய காரைநகர் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் கொடுவரப்பட்டு, அதி தீவிர சிகிச்சைப் பிரி வில் சேர்க்கப்பட்டார்.

அவரைக் கடித்ததாகக் கூறப்பட்ட புடையன் பாம்பு ஒன்றும் போத்தலில் அடைக்கப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டது. என்ன பாம்பு தீண்டியது என்பதை அறிந்தால் சிகிச்சை அளிக்க இலகுவாக இருக்கும் என்பதாலேயே அந்தப் பாம்பு கொண்டு வரப்பட்டிருந்தது. போத்தலில் அடைக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த பாம்பை அதி தீவிர சிகிச்சைப் பிரி விலேயே நேற்று இரவு வைத்திருந்தனர். நேற்றுக் காலை அந்தப் பாம்பு அடைக்கப்பட்டிருந்த போத்தலை அவதானித்த போது அந்தப் பாம்பு 10 குட்டிகளை ஈன்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் பாம்மையும் குட்டிகளையும் கற்றல் நடவடிக்கைகளுக்காக கொழும்பு பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பிரிவுக்கு அனுப்பு வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்துள்ளன. இதேவேளை பாம்பு கடிக்கு இலக்காகி சேர்க்கப்பட்ட இளைஞனும் குணமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.(மு-30)

## ஜெனிவாவில்...

உள்ள பூங்காவில் பிற்பகல் 2.00 மணியளவில் ஆரம்பமாகியுள்ளது.

சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த போராட்டமானது ஜெனிவா முருகதாசன் திடலை நோக்கி நகர்ந்தது.

பல தசாப்தங்களாக இலங்கையில் தொடர்ந்து நடத்தப்படும் தமிழினப் படுகொலையை முழுமையாக ஆராய வேண்டும்.

ஐக்கிய நாடுகள் அவை மார்ச் 2011 இல் அறிக்கைக்கு நீதி கிடைக்கும் பொருட்டு அனைத்துலக சமூகம் அனைத்துலக நீதிமன்றில் விசாரணையை நடத்தி தமிழ் மக்களுக்கான நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இவ்வாறு ஐந்து அம்ச கோரிக்கையை வலியுறுத்தி இப்போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

## சர்வதேச நீதிமன்ற...

கள் இலங்கையை பொறுத்தவரையில் முக்கியமான ஒன்றென சுட்டிக்காட்டிய அவர், ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் பல தீர்வை பெற்றுக் கொடுக்காத நிலையில், வெளிநாடுகளுக்கு பயணம் செய்வதற்கான வாய்ப்புள்ளவர்கள் சர்வதேச நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்ய முடியுமென குறிப்பிட்டுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் உண்மை நிலையை வெளிப்படுத்துமாறு கோரி, கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் உறவினர்களை, நேற்று சந்தித்த அவர், அதன் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்தோடு, ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கம் இணங்கியமைக்கு அமைவாக, சர்வதேச மற்றும் உள்நாட்டு நீதிபதிகள், சட்ட வல்லுநர்களின் பங்கேற்புடன் சர்வதேச தரத்திலான நீதிமன்றத்தை அமைப்பது மிகவும் முக்கியமானதென வலியுறுத்தியுள்ளார்.

யுத்தத்தில் காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் அச் சந்தர்ப்பத்தில் இடம்பெற்ற சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்கள் நீதியை எதிர்பார்த்து காத்திருக்கும் சந்தர்ப்பத்தில், ஜெனிவா பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, காணாமல்போனோர் குறித்த அலுவலகம் மற்றும் சர்வதேச நீதிவிசாரணை பொறிமுறை ஆகியவையே இப்பிரச்சினைகளுக்கான ஒரே தீர்வென அன்ட்ரயா ஸ்ருடோ மேலும் தெரிவித்தார். (மு-11,312)

## மல்லாகம் நீதிமன்ற...

பார்த்துக் கொண்டு நீதி தேவதை கண்களை கட்டிக் கொண்டிருக்க முடியாது என குறிப்பிட்ட நீதிபதி, குறித்த மயானமானது அதில் இருக்க வேண்டிய அல்லது இருக்க கூடாது என்பதற்கான காரணங்கள் என்ன என்பது தொடர்பாக வடமாகாண உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் முதலமைச்சரும், யாழ். மாவட்ட அரச அதிபர் மற்றும் வட மாகாண ஆளுநர் ஆகியோர் அது தொடர்பான தகவல்களை அரச சட்டவாதிக்கு வழங்கவேண்டும் எனவும் கட்டளை பிறப்பித்துள்ளார்.

புத்தூர் கலைமதி கிராமத்தில் உள்ள குறித்த மயானத்தினை சுற்றி பத்தடி உயரத்தில் மதிலை கட்டி அதன் பின்னர் அதற்குள் சடலங்களை எரிக்க முடியும் என்றும், எரிவாயு மூலம் சடலங்களை எரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அதற்கு ஒரு வருடகால அவகாசம் வழங்கியும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் விதித்த கட்டளையை ஆட்சேபனை தெரிவித்து பாதிக்கப்பட்ட மக்களால் சட்டத்தரணி தம்பையா ஊடாக யாழ். மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கானது வித்தியா படுகொலை வழக்கின் காரணமாக மூன்று மாத காலமாக திகதியிடப்பட்டு வந்தது. இவ்வாறான நிலையில் நேற்றைய தினம் காலை இவ் வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது இவ்மயானத்தினூடாக பாதிக்கப்பட்ட மக்கள் நேரடியாக மன்றுக்கு வந்து தமது பிரச்சினைகள் தொடர்பாக கூற வேண்டும் என்பதற்காக அவற்றால் பாதிக்கப்பட்ட மக்கள் மன்றுக்கு அழைக்கப்பட்டார்கள். இதன்படி அவ்வழக்கானது பிற்பகல் 12.45 மணிக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. இதன்போது மன்றில் பாதிக்கப்பட்ட தரப்பு சார்பாக முன்னிலையான சட்டத்தரணி தம்பையா தனது விண்ணப்பத்தை மேற்கொண்டார்.

அவர் தனது விண்ணப்பத்தில், மல்லாம் நீதவான் மயானப் பிரச்சினை தொடர்பாக வழங்கிய கட்டளையானது வழக்கின் முடிவில் வழங்கப்பட வேண்டிய கட்டளையாகும். அத்துடன் மயானங்கள் சட்டத்தின் பிரகாரம் அக்கட்டளையை வழங்க முடியாது. இவ்மயானமானது நிர்வாகம் சம்பந்தமான விடயமாகும். மேலும் அம்மயானத்தை சூழ குடியிருப்புக்கள் காணப்படுகின்றது. குறிப்பாக 300 குடும்பங்கள் வரையில் காணப்படுவதுடன் அக்குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 500 தொடக்கம் 2ஆயிரம் பேர்வரையில் மக்கள் வாழ்கின்றார்கள்.

இங்கே மயானமானது காணப்படுவதனால் அங்கே இருக்கும் மக்கள் உளரீதியாக பாதிக்கப்படுவதுடன் சுகாதார ரீதியான பிரச்சினைகளையும் கொண்டுள்ளனர். குறிப்பாக சுவாச பிரச்சினைகள் இதனால் ஏற்படுவதுடன் அவ்வாறு சுவாச பிரச்சினைகளுக்குள்ளாகி சில சிறுவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றும் உள்ளனர். இவற்றை விட அப்பிரதேசத்தில் மக்கள் குடியிருப்புக்கள் அற்ற அல்லது மக்கள் குடியிருப்புக்களில் இருந்து 400-500 மீற்றர்கள் தூரத்தில் காணப்படுகின்ற மயானங்கள் நான்கு காணப்படுகின்றன.

அத்துடன் இம்மக்களுக்கு அங்குள்ள காணிகளுக்குரிய பத்திரங்கள் உள்ளதுடன் அவற்றில் சில அரசாங்கத்தால் வழங்கப்பட்ட காணிகளுமாகும். எனவே அம்மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் அமைந்திருக்கும் மயானத்தில் பத்தடி உயரத்தில் சுற்று மதில் எழுப்பி அதன் பின்னர் அதற்குள் சடலங்களை எரிக்கலாம் என மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் வழங்கிய கட்டளைக்கு இடைக்கால தடையுத்தரவு விதிக்க வேண்டும் என தனது விண்ணப்பத்தில் குறிப்பிட்டார்.

இதனை தொடர்ந்து இவ்மீளாய்வு விண்ணப்பம் தொடர்பாக அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் மல்லாகம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவுக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்க தமக்கு ஆட்சேபனை இல்லையென மன்றில் விண்ணப்பம் செய்தார்.

இவ் இரு தரப்பினரின் விண்ணப்பங்களை தொடர்ந்து நீதிபதி அவற்றை பரீசிலித்து தனது கட்டளையை வழங்கினார்.

இதன்படி அக்கட்டளையில் நீதிபதி சில விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தார். அதாவது, இவ்மயானத்தை அகற்றுமாறு கோரி அம்மக்கள் தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றமையை காணக்கூடியதாக இருந்தது. நேற்று முன்தினம் வடமாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் அம்மக்களை சந்தித்த போது, இது தொடர்பான பிரச்சினை நீதிமன்றில் உள்ளதாக சுட்டிக்காட்டியிருந்ததுடன் அந்நிலையில் தன்னால் எதுவும் செய்ய முடியாது என கூறியிருந்தார். எனினும் மக்கள் அதற்கு ஆட்சேபனை தெரிவித்தமை போன்றன அறியதரப்பட்டன.

இவ்வாறான நிலையிலேயே இப்பிரச்சினை தொடர்பில் இன்று (நேற்று) பாதிக்கப்பட்ட மக்கள் நேரடியாக மன்றுக்கு வரவழைக்கப்பட்டிருந்தார்கள். அதற்காகவே காலை விசாரணைக்கு எடுக்கப்பட்ட வழக்கு ஒத்தி வைக்கப்பட்டு மக்கள் வரவழைக்கப்பட்டு 12.45 மணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இப்பிரச்சினை தொடர்பாக மன்று சில விடயங்களை ஆய்வு செய்கின்றது.

அதாவது இவ்மயானமான்து மயான சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டே இயங்குகின்றதா என்பது அரச நிர்வாகம் பார்க்க வேண்டிய விடயம். அத்துடன் அம்மயானம் அங்கு தொடர்ந்து இயங்க வேண்டுமா இல்லையா என்பது உள்ளூராட்சி அமைச்சுடன் தொடர்புபட்ட விடயம். ஆகவே இவ்விடயங்கள் தொடர்பாக இங்கே கவனம் செலுத்தப்படவில்லை. அது அதற்குரிய அதிகாரம் கொண்டவர்களிடமே விடப்படுகின்றது.

ஆனால் இவ்மயானம் தொடர்பாக அரச சட்டவாதி மன்றுக்கு சில ஆதாரங்களை முன்வைக்க வேண்டும். இவ்மயானமானது மயான சட்டத்திற்கு உட்பட்டு அங்கிகரிக்கப்பட்ட மயானமா? அம்மயானத்தை சூழவுள்ள மக்களின் உயிர் வாழும் உரிமை கவனத்தில் எடுக்க வேண்டும். எனவே அம்மயானமானது ஏன் அங்கே இருக்க வேண்டும் என்பது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அது தொடர்பான தகவல்களை மன்றுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

உள்ளூராட்சி அமைச்சராக வட மாகாண முதலமைச்சரே உள்ள நிலையில் அவரது அமைச்சுடனும் இது தொடர்பாக தொடர்பு கொண்டு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். யாழ்.மாவட்ட அரச அதிபருடைய பங்களிப்புக்கள் இதில் எவ்வாறு உள்ளன, அவரால் வழங்கப்படக்கூடிய தகவல்கள் தொடர்பாகவும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். அத்துடன் மயானத்தை சுற்றியுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை அதுபாதிக்குமாயின் அது நிரந்தரமாக கைவிடப்பட வேண்டுமா என்பது தொடர்பான தகவல்கள் அனைத்தும் மன்றுக்கு அரசசட்டவாதியால் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஒருவர் உயிர் வாழும் உரிமையும் அதற்காக அவர் அகிம்சை ரீதியில் போராடும் உரிமையும் நாட்டின் அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் இம்மக்கள் கடந்த 68 நாட்களாக அதற்காக போராடி வருகின்றார்கள். நீதி என்பது அனைவருக்கும் சமனானது. அது பாதிக்கப்பட்ட எந்த தரப்பினருக்கும் வழங்கப்பட வேண்டியது.

அத்துடன் நீதி கோரி வீதியிலே நின்று போராடும் போது அதனை பார்த்துக் கொண்டு நீதி தேவதை கண்களை மூடிக்கொண்டு இருந்து விடவும் முடியாது. அவ் போராட்டத்திற்கு முடிவு முற்று முழுதாக உடனடியாக வழங்கப்பட முடியாவிட்டாலும், இடைக்கால முடிவேனும் வழங்கப்பட வேண்டும். அதனடிப்படையிலேயே இவ்கட்டளையானது பிறப்பிக்கப்படுகின்றது.

அதன்படி மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் வழங்கிய கட்டளைக்கு, யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கானது முடிவுறுத்தப்படும் வரையில் மேல் நீதிமன்றானது இடைக்காலதடை உத்தர்வு விதிக்கின்றது.

அதேபோன்று இவ்வழக்கு தொடர்பாக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் காணப்படும் மூலவழக்கேடானது யாழ்.மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட வேண்டும். இவற்றை விட மல்லாகம் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் குறித்த மயானத்தை சுற்றி கட்டப்படும் மதில்கள் கட்டுமானங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டியதுடன் இவ்வழக்கு முடியும் வரை அவை அமைக்கப்பட கூடாது எனவும் இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எனவே நிர்வாக ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நீதிமன்றில் உள்ள தடை உத்தரவு காரணமென கூறப்பட்ட நிலையில் தற்போது அதனை நிவர்த்தி செய்யும் வகையில் அவ்உத்தரவுகளுக்கு தடை உத்தரவானது வழங்கப்பட்டுள்ளது என நீதிபதி தெரிவித்தார்.

மேலும் இத்தடை உத்தரவு தொடர்பான பிரதிகளை வடக்கு மாகாண முதலமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர், யாழ்.மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைக்க பதிவாளருக்கும், குறித்த தரப்பினர் அம்மயானம் காணப்பட வேண்டிய அல்லது அது நீக்கப்பட வேண்டிய காரணங்கள் தொடர்பாக அரச சட்டவாதிக்கு தெரிவிக்க வேண்டும் எனவும் கட்டளையிட்டதுடன் இவ்வழக்கு விசாரணையை ஒத்தி வைத்து யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவிட்டார். (மு-4)




ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம் www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்
(6095)



விரைவு பொதிகள் சேவை,
விமான பயணச்சீட்டுகள்
விசா சேவைகள்
UK - 550/= (C-9525)



CANADA - 400/= மட்டுமே
V2 TRAVELS - 0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
• சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

உடனடி வேலை வாய்ப்பு
V2 TRAVELS




விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
தகுதி:- 18 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
0768226241

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.